

# எக்ஸில்

Exil

MAY, JUNE 1998

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




குறுஞ் சித்திரம்
அ. மாற்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எக்ஸில்

## Exil

Vol. I No.1
MAY, JUNE 1998

தொடர்புகளுக்கு:
**EXIL**
chez R. INPAVALLI
94, Rue de Lachapelle
75018 PARIS
FRANCE.

புகலிடத்து வாழ்வில் இருந்து புறப்படுகிறோம்.
எவரும் எங்களுடன் இணைந்து கொள்ளலாம்
எங்கிருந்தேனும் எந்த மொழியிலும்
எம்மிலும் முகம் பார்த்துக்கொள்ளட்டும்.
மீண்டும்
யாதும் ஊரே யாவரும் கேளிர்.
கருத்துக்கள் இலக்கியங்கள் எதுவாயினும்
எம்மிலும் பட்டுத் தெறிக்கட்டும்.
எக் கருத்துக்கும் மதிப்பளிக்கும்
மனப்பக்குவம் எமக்குண்டு.
எதையும் தவிர்த்து உண்ணும் பாங்கு
எம்மிடம் இல்லை.
கிடைப்பதைப் பகிர்ந்து உண்ணும்
காகங்களாய்.

**எக்ஸில்**
**EXIL**


| | | |
|---|---|---|
| 1. குறுஞ்சித்திரம் | அ. மாற்கு | 2 |
| 2. கவிதை | தேவிகணேசன் | 4 |
| 3. கவிதை | கற்சுறா | 4 |
| 4. வருணாச்சிரமத்திலிருந்து | எம். ஆர் ஸ்ராலின் | 5 |
| 5. யாழ்ப்பாணத்திலை எவடம்? | மரங்கொத்தி | 9 |
| 6. விளக்கமளிப்புக் கோட்பாடுபற்றி ...? | எஸ். வி. ரஃபேல் | 11 |
| 7. சலிப்பு | க. கலாமோகன் | 15 |
| 8. கவிதை | மேகவண்ணன் | 17 |
| 9. சிற்பம்(புகைப்படம்) | மீரா முகர்ஜி | 18 |
| 10. தென்னாசியாவில் பெண்நிலைவாதம் | ல க்ஷ்மி | 19 |
| 11. *LES SOURCES* | Laure | 33 |
| 12. கூட்டலும் கழித்தலும் | | 35 |
| 13. அடையாளம் | ரொனாபோல் | 35 |
| 14. தமிழ் இலக்கியச் சூழலில் கலைஇயக்கங்கள் | அரவிந் அப்பாதுரை | 36 |
| 15. மலரா மனது | சிவலிங்கம் சிவபாலன் | 39 |
| 16. புகலிட இலக்கிய விமர்சனம் பற்றி | கலைச்செல்வன் | 44 |
| 17. புலரிக் கலவியும் இரவில் சமருமாய் கழித்த ஒரு | சேரன் | 47 |
| 18. என்ட அல்லாஹ்...! | சக்கரவர்த்தி | 49 |
| 19. குறுஞ்சித்திரம் | த. சௌந்தர் | 55 |




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இரவு 7 மணி.
நட,
மெதுவாக.
கதவைத் திறக்காதே
நான் திறந்து விடுகிறேன்.

சத்தம் போடாதே.
சாப்பிடு.

கோப்பையைக் கழுவாதே
கையைக் கழுவு.

மெதுவாகத் தண்ணி திற.

மூத்திரம் பெய்யலாம்
தண்ணி ஊற்றாதே
காலையில் விடலாம்.

படு.
.......
அமைதி...

கொல்லக் கொண்டு போகும் வேதனை.
நித்திரை
எப்படி வரும் சுகமாய்?

தேவஅபிரா
10. 02. 1998

காத்திருக்கிறான்.
உடைந்து போன நம்பிக்கைச் சிதறல்கள்.
சுத்துச் சுத்திய ஆடைகள்
மறைத்தும்,
கிழியக் கிழிய வெளியேறும்
உடைந்த சிதறல்.

வலி.

இறக்கைகள் அறுத்து
எச்சரிக்கப் பட்டும்
பறப்பதான உணர்வு
பழகிய பிழைப்பு.

ருசிகளில்லாது இரவு பகல் நகர்வு.

விசர்நாய்ப் பார்வை.

நாட்கள் முறித்துச் சப்பிய
எச்சத்தில்,
தொங்கும் வாழ்வு.

முட் சிரிப்பு.

காத்திருக்கிறான்.
ஒரு நேர உணவு.
ஒரு படுக்கை.
என,
தன் மரணத்திற்காய்,
இன்னும்.



கற்சுறா 04. 02. 1998



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வருணாச்சிரமத்திலிருந்து வட்டுக்கோட்டைவரை


எம்.ஆர்.ஸ்டாலின்

"வட்டுக்கோட்டை அண்ணர் அமிர்தலிங்கத்திற்கே" அடிகொடுத்து காங்கேசன்துறைக்கு அனுப்பி வைத்த அர்த்தமுள்ள தொகுதியது. அங்கு மீண்டும் அடக்குமுறை தலித்துகளின் இருப்புமீதே கேள்வியெழுப்பும் இந்நிகழ்வினை ஏதோ தற்செயலானதொன்றென்று தவிர்த்துவிடமுடியாது.

இவ்வகை சாதி ஒடுக்கு முறையானது இலங்கையிலும் இந்தியாவிலும் இந்துத்துவ கலாச்சாரம் பரவியுள்ள தென்கிழக்காசிய நாடுகள் சிலவற்றிலும் மட்டுமே காணப்படுகின்ற ஒரு சமூக கட்டுமானமாகும். இற்றைக்கு சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் வர்ணாச்சிரமதர்மம் என்று வகுத்துக் கொண்ட மனித பிரிவுகள் இன்றுவரை கோலோச்சி வருவதற்குரிய காரணங்கள் பல.

பாரம்பரிய இப்பகுப்புகளிலிருந்து இன்றுவரை இவ்வொடுக்கப்பட்ட சமூகத்தினர் விடுபட்டுக் கொள்ள முடியாமைக்கு காரணம் என்னவென்பதனை இச்சாதியமைப்பின் தோற்றப்பாடு, வளர்ச்சி என்பவற்றோடு அதற்கெதிரான இதுவரைகாலப் போராட்டங்கள், இவ்வகைப்போராட்டங்களின் வெற்றி தோல்விக்கான காரணங்கள் என்பவற்றை ஆராய்வதினூடகவே கண்டறிய முடியும்.

வடஇந்தியாவை வெற்றிகொண்ட ஆரியவம்சத்தவர்களிடம் இருந்து அவர்களிடம் தோல்வியுற்ற ஆரியரல்லாத சுதேசிய சமூகக் குழுக்களை வேறுபடுத்திக் காட்டவே 'வர்ணம்' என்கின்ற நிற அடிப்படைப் பிரிப்பு ஏற்படுத்தப்பட்டது. இவ்வகையில் அதிகாரத்தைப் பறித்துக் கொண்டு சுதேசியர்களின் மீது புகுத்தப்பட்ட வர்ணாச்சிரம தர்மமானது ஆரியர்களினால் தங்கள் இருப்பைப் பேண இந்துக் கோட்பாட்டுடன் கச்சிதமாய் இணைக்கப்பட்டது. இதன் அடிப்படையில் மனிதவர்க்கத்தை இறைவன் நான்கு வருணமாக பிரித்தானென்றும் அவ்வவ் வர்ணத்தாருக்கு ஒதுக்கப்பட்ட தன்படியே ஒழுகுதல் தர்மம் என்றும் போதிக்கப்பட்டது. இவ்வகையில்தான் அந்தணரும், மன்னவரும், வணிகரும், சூத்திரரும் அவரவர் கடமைகளை செய்துகொண்டிருக்க பணிக்கப்பட்டு பழக்கப்படுத்தப்பட்டனர். இவ்வகை சாதிய கூறுகளின் வளர்ச்சி நிலையானது தென்கண்டம் நோக்கி நகர்ந்து தமிழ்நாடு உட்பட இலங்கைவரை பரிணமித்ததுவே வரலாறு.


யாழ். சாதி மோதல்களுக்கு உடனடி தீர்வு தேவை'

மார்ச் 17.

ஞாயிறு 'தினக்குரல்' 22.03.1998

வட்டுக்கோட்டையில் கோஷ்டி சண்டையில் 10 பேர் காயம்

மார்ச் 18.

ஞாயிறு 'தினக்குரல்' 22.03.1998



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தென்னிந்தியாவின் சங்ககாலத்தில் பல குலங்களாய் சமூகத்தினர் பிரிந்திருக்கக் காணப்பட்டாலும், அங்கு நிலவிய ஓரளவு சமத்துவநிலை கவனத்தில் கொள்ளப்படவேண்டியது. இவற்றின் வளர்ச்சியில் அரசுகளின் தோற்றமும், ஏனைய குலத்தவரை ஆக்கிரமித்து அடிபணியவைக்கும், ஆனிரை கவரும், அதிகார வீரவிளையாட்டுக்களும் முக்கியத்துவம் பெற்றன. இவ்வகை வீரகாலத்திலேயே அரசனின் அனுமதியோடு நிலப்பிரபுத்துவம் உருவாக ஏதுவாயிற்று. இவ்வேளைகளில் அவ்வகை நிலப்பிரபுக்கள் 'நிலக்கிழார்கள்' என அழைக்கப்படலாயினர் இவர்களுக்காய் உழைக்க பணிக்கப்பட்ட பிரிவினர் வறுமையை நோக்கிநகர நிலக்கிழார்கள் பொருளாதார ரீதியாக உயர்நிலையை எய்தினர்.

சுமார் பத்தாம் நூற்றாண்டை தொடர்ந்து சைவமும் வைணவமும் தமிழ்நாட்டில் முக்கியத்துவம் பெறலாயிற்று. இதன் மூலம் சோழப்பேரரசுகளின் உதவியுடன் மேன்மை பெற்றிருந்த நிலக்கிழார்கள் தொடர்ந்து சமூகத்தில் உயர்நிலையில் இருப்பதற்கான கருத்துருவங்கள் மேலும் இறுக்கமடைந்தன. காரணம் இவ்வகை இந்து கன்ம கோட்பாட்டைப் போதிக்க பிராமணர்கள் சரியானவர்களாக வந்து சேர்ந்தனர். நிலமானியங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டன. இவ்வகை மானியப் பிரதேசங்களையே பிரமதேயம், அக்கிரகாரம், சதுர் வேதிமங்கலம் போன்ற சொற்றொடர்கள் குறித்துநின்றன. இதனூடாகத்தான் வர்ணாச்சிரம தர்மம் தமிழகத்திலும் மென்மேலும் காலூன்ற ஏதுவாயிற்று.

இலங்கையின் மிகக்கொடிய சாதிக்கொடுமைக்குரிய தளமாக யாழ்குடாநாடே திகழ்ந்து வருகின்றது என்கின்ற போது மற்றைய இடங்களில் உள்ள சாதியக் கொடுமைகளை மறந்துவிடலாம் என்பது அர்த்தமல்ல. ஒப்பீட்டு ரீதியாக யாழ்ப்பாணத்தைவிட இலங்கையின் மற்றைய பகுதிகள் சாதியக் கொடுமையின் கொடூரத்தை குறைவாகவே கொண்டிருக்கின்றது என்பதே உண்மை.

இறைவனின் பெயராலும் தமிழ் கலாச்சார பாரம்பரியத்தின் பெயராலும் அடக்கி ஒடுக்கி பூச்சி புழுக்களாய் நசுக்கப்பட்டு வந்த தாழ்த்தப்பட்டோர் வாழ்வில் முதன்முதலாக சிறிய சிறிய மாற்றங்களைத் தானும் ஏற்படுத்த முனைந்தது ஐரோப்பியரின் வருகையேயாகும்.

இலங்கையைப் பொறுத்தவரை ஐரோப்பியரின் வருகையில், ஆரம்பத்தில் வந்த போர்த்துக்கேயரினால் இங்குள்ள சாதிய அமைப்பில் பெரியதாய் மாற்றமெதனையும் ஏற்படுத்த முடியவில்லை. அதன் பின் வந்த ஒல்லாந்தரும் சாதியத்தில் உயர்அந்தஸ்துப் பெற்ற அதிகாரப் பிரிவினருடன் சமரசம் பண்ணிக் கொண்டால்தான் ஆளப்படுகின்றவர்களிடம் தமது ஆதிக்கத்தை செலுத்த வசதியாகுமென்றெண்ணி அப்படியப்படியே சாதியப் படிநிலைகளை காப்பாற்றிக்கொள்ள உறுதியளிக்கும் வண்ணம் உள்ளாக்கப்பட்டனர். இதன்வெளிப்பாடாகவே மட்டக்களப்பு மாவட்டத்தில் பொருளாதார ரீதியில் நிலப்பிரமுகர்களாக ஆதிக்கம் பெற்றிருந்த முக்குவர்களுடன் சமரசம் செய்துகொண்டும் அவர்களது முக்குவர் சட்டத்தையும் யாழ்ப்பாணத்தின் வேளாளர்களின் சமூக சட்டங்களை நெறிப்படுத்துகின்ற தேசவழமைச் சட்டத்தையும் சட்டப்படி அங்கீகரித்தமையாகும்.

எனினும் அவர்களைத் தொடர்ந்து வந்த ஆங்கிலேயர். ஆரம்பத்தில் தாங்கள் எதிர்கொண்ட எதிரி எனும் வகையில் தங்களின் பலத்தை நிலைநாட்ட எண்ணி யார் யார் சமூக ஆதிக்கம் மிக்கவர்களாய்த் திகழ்ந்தார்களோ அவர்கள்மீதே கை வைக்கத் துணிந்தார்கள். இதன்படியே 1810 களில் மட்டக்களப்பில் நிலச்சொத்துக்களை தம்வசம் வைத்திருந்ததினூடாக உயர் அந்தஸ்த்தில் இருந்த "போடிமார் ஒழிப்பு" சட்டம் கொண்டுவரப்பட்டது. இவ்வேளையில்தான் இந்தியாவில் "ராஜாராம் மோகன்ராய்" போன்றவர்களின் "பிரம சமாஜம்" போன்ற சாதி, மத வேறுபாடு காட்டாத நிறுவனங்களையும் ஆங்கிலேயர் ஆதரித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் இவ்வகை உயர் சாதிகளின் மீதான கையடிப்பானது நீண்ட காலங்களுக்கு ஆங்கிலேயர்களினால் செயற்படுத்த முடியவில்லை. காரணம் ஒல்லாந்தர் பாணியில் ஆளும் வர்க்கத்தாருடன் சமரசம் செய்து கொள்ளுதலே உழைக்கும் மக்களாகிய தாழ்த்தப்பட்ட பெரும்பான்மையினரை நோக்கி தங்கள் அதிகாரத்தை செலுத்த ஒரே வழியாய்க் கண்டனர். இதற்கு முக்கிய காரணமாக 1857 இல் இந்தியாவில் ஏற்பட்ட "சிப்பாய் கலவரம்" ஆகும். இவ்வாறு ஆங்கிலேயருக்கெதிராக ஏற்பட்ட சிறு சிறு புரட்சிகளின்போது அதற்கு தலைமை தாங்கியவர்கள் குறுமன்னர்களும் நிலக்கிழார்களுமேயாகும். இப்புரட்சிகள் மிகவும் கொடுமையான முறையில் ஆங்கிலேயரால் அடக்கப்பட்டிருந்தாலும், தொடர்ந்து இவ்வகை எதிர்ப்புகளை எதிர்கொள்ளாதிருக்க சரியான வழியாக உழைக்கும் மக்களை அடக்கியாள ஆளும் வர்க்கத்தாருடன் அரைநிலப்பிரபுத்துவ கூட்டமைத்துக் கொள்வதையே ஆங்கிலேயர் கைக்கொண்டனர்.

18ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவில் ஏற்பட்ட தேசியசிந்தனையானது பிரிட்டிஷாரை வெளியேற்ற தேசிய ஒற்றுமையின் தேவையை வேண்டிநின்றது. இதன் பின்னணியில் தான் 19ம் நற்றாண்டின் பின்இறுதியில் பாரதியார் போன்ற அவர்காலத்து முற்போக்குவாதிகள் சாதியத் தகர்ப்பின் தேவைகருதி செயற்படவேண்டியவர்களாயினர்.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாய் தேசியம் பேசாமல் இன்னார் இன்ன சாதியென்றும் அவனை இவன் தொடுதல் பாவம் என்றும், நாயிலும் கேவலமாய் மனிதனை மனிதன் சாதியின் பெயரால் ஒதுக்கி, அதற்குத் துணையாய் மதத்தையும் மொழியையும் பாரம்பரிய கலாசாரங்களையும் துணைக்கு வைத்துக் கொண்டிருந்தவர்களெல்லாம் புதிதாய் தேசியம் பேசத்தொடங்கினர், 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்', 'எல்லோரும் இன்னாட்டு மன்னர்' என்றும் இணைய வேண்டினர். இதில் மேற்சாதியினரின் சுயநலமின்றி வேறு என்ன இருக்கமுடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதன்பின்னர்தான் இலங்கையின் வடமாகாணத்திலும் சாதியங்களற்ற ஒன்றுபட்ட தேசியத்தின் தேவை வலியுறுத்தப்பட்டது. எனினும் இவ்வகை சாதியத்திற்கெதிரான போராட்டங்களை மழுங்கடிக்க தமிழ் மரபு பேணும் சைவத் தலைவர்கள் ஒருபோதும் பின்நிற்கவில்லை. கிறிஸ்தவ மிசனறி பாடசாலைகளிற்கு போட்டியாக சைவத்தையும் தமிழையும் வளர்க்கப் பாடுபட்ட ஆறுமுக நாவலனின் பள்ளிக்கூடங்கள் எவற்றிலும் தாழ்த் தப்பட்ட குலத்தோரின் குழந்தைகள் சேர்ந்து படிக்க ஆறுமுகநாவலன் அனுமதிக்கவில்லை. அதுமட்டுமன்றி ஓரிரு கிறிஸ்தவ மிசனறி பாடசாலைகளில் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் சேர்ந்து படிக்க முற்பட்டபோது ஏனைய சாதிக்காரர்களாலும் சைவவேளாள பெரியவர்கள் என்று சொல்லப் பட்டவர்களாலும் பெரும் எதிர்ப்புக் காட்டப்பட்டது.

உதாரணமாக 1910 ம் ஆண்டு வட்டுக்கோட்டையில் அமைந்திருந்த யாழ்ப்பாணக்கல்லூரியில் ஓர் தாழ்த்தப்பட்ட மாணவன் சேர்க்கப்பட்டதிற்கெதிராக முழுமாணவர்களும் பகிஸ்கரிப்பு நடவடிக்கையில் இறங்கியமை. எனினும் அங்கிருந்த பாதிரியாரின் துணிச்சல் மிகு நடவடிக்கையினால் முதன் முதலாக அங்கு ஓர் தாழ்த்தப்பட்ட மாணவன் சேர்க்கப்பட முடிந்தது. அன்று சேர்ந்த மாணவனே திரு ஜேக்கப் காந்திஅவர்கள் ஆகும். இவ்வகையில்தான் தாழ்த்தப்பட்டவர்கட்கான சாதகமான சில அம்சங்கள் உருவாக ஏதுவாயிற்று.

தொடர்ந்து 1920 களில் தேசிய சிந்தனையும் முற்போக்கும் கொண்ட இளைஞர்களினால் உருவாக்கப்பட்ட யாழ் வாலிபர் காங்கிரஸின் முக்கிய செயற்பாடுபளில் ஒன்றாக தீண்டாமைக்கெதிரான நடவடிக்கையும் முக்கியத்துவம் எடுத்தது. அதனைத் தொடர்ந்து தாழ்த்தப்பட்டவர்கள் ஓர் ஸ்தாபனமாக உருவாகி ஒடுக்கப்பட்டோர் தமிழ் ஊழியர் சங்கம் ஒன்று 1927 இல் தோற்றம் பெற்றது. இவர்கள் உடனடியாக அப்போது எதிர்நோக்கியிருந்த பிரச்சனை பாடசாலையில் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கான 'சம ஆசனம், சமபந்தி போசனம்' என்பனவாகும். இவற்றிலும் இவர்களுடன் முன்னின்று உழைத்தவர்கள் திரு.யோவேல் போல், திரு. ஜேக்கப் காந்தி போன்றோர்கள் முக்கியமானவர்களாகும். ஆனால் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு எதிராக போர்க்கொடி உயர்த்திப் பிடித்தவர்களுள் சேர் பொன் இராமனாதன் முதன்மையானவனாகும்.

இவன் தன்னுடன் 79 கிராமசபைத் தலைவர்களை அழைத்துக்கொண்டு வெள்ளைக்கார தேசாதிபதியைச் சந்தித்து இவ்வகைக் கோரிக்கைகளை நிறைவேற்றக் கூடாதென்று கேட்டுக் கொண்டான். அது தமிழர்களின் பாரம்பரிய தேச வழமையினை மாற்றியமைப்பதாய் முடியும் என வாதிட்டான். எனினும் யோவேல் போல் அவர்களது அயராத உழைப்பினால் அவர் இருதடவை தேசாதிபதியைச் சந்தித்து அத்திட்டத்தை நிறைவேற்றினார்.

இதேபோல் டொனமூர் விசாரணைக் குழுவினரிடமும் சேர் பொன் இராமனாதன் சர்வசன வாக்குரிமைக்கெதிரான தனது வாதத்தை முன்வைத்தான்.

**அனைத்து தமிழரையும் ஓர் குடையின்கீழ் கொண்டுவந்து சாதி, சமய, பிரதேச வேறுபாடுகளை மறைத்து எல்லோருக்கும் பொதுவான ஓர் புனித மாயையை கட்டியமைக்க தமிழரசுக் கட்சியினரால் போடப்பட்ட சரியான கணக்கே 1976ம் ஆண்டின் வட்டுக்கோட்டை மகாநாடும் அதன் தமிழீழப் பிரகடனமும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிறப்புமாகும்.**

எனினும் அவனது சாட்சியங்களையும் மீறி டொனமூர் குழுவினர் சகல பிரசைகளுக்குமான வாக்குரிமைக்கு சிபாரிசு செய்தனர். இராமநாதன் போன்ற சைவ வேளாள பிரபுத்துவ பிரதிநிதிகள் தாழ்த்தப்பட்ட மக்களை தொடர்ந்து அவ்வகை இழிநிலையிலேயே வைத்திருக்க இயன்றவரை முயன்றனர். இவர்களின் இந்நடவடிக்கைகள் 19 ம் நூற்றாண்டின் இறுதியில் ஆறுமுகநாவலன் செய்தவைகட்கு எவ்வகையிலும் குறைந்தவையில்லை. குறிப்பாக நாவலன் சைவத்தின் பெயரால் இலங்கைத் தமிழர்களின் உண்மையான சிறுதெய்வ வழிபாட்டினையும் கிராமிய சடங்குகளையும் அழித்தொழித்து வடஇந்திய ஆகமங்களின்படியான பிராமணிய கலாச்சாரத்தைப் பரப்பியமையும், அதனுடாக தாழ்த்தப்பட்ட உழைக்கும் மக்களின் கிராமிய இசைக்கருவிகளான உடுக்கு, பறைமேளம் போன்றவற்றை அழித்தொழித்து இந்திய உயர்குலத்தவர் பின்பற்றிய கர்நாடக, தவில், நாதஸ்வர கருவிகளை முன்னிறுத்தி தமது யாழ்வேளாள உயர்குலத்தவரை உயர்த்தி உழைக்கும் மக்களை சமூகத்தின் விளிம்பு நிலைக்கு தள்ளிவிட்டமை போன்றவற்றுடன் ஒப்பிடலாம்.

இதே துரோகத்தனத்தை 1945 ல் ஜி.ஜி. பொன்னம்பலம் சோல்பரி ஆணைக்குழுமுன் சாட்சியமளித்ததினூடாக செய்து முடித்தான். அவரது சாட்சியமே தேசவழமை சட்டத்திலிருந்த தாழ்த்தப்பட்டவர்கட்கு எதிரான அம்சங்கள் தொடர்ந்து பேணப்பட வசதியாயிற்று.

இவ்வகையில்தான் இலங்கை சுதந்திரமடையும் முன்னர் தமிழ்ப் பாரம்பரிய சைவநீதி என்று ஒப்பாரி வைத்த அனைத்து தலைமைகளும் இறுதியில் தங்கள் குலநலனையே தூக்கிப்பிடித்து தாழ்த்தப்பட்டோரை தள்ளியேவிட்டனர் என்பதனை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

1948 ம் ஆண்டு பிரித்தானிய ஏகாதிபத்தி யவாதிகளிடம் இருந்து இலங்கை படித்த நிலபிரபுத்துவ தலைமைகளிடம் அதிகாரம் கைமாறியமை 'சுதந்திரம்' என அழைக்கப்பட்டாலும் அது சாதிய ரீதியில் ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்களின் வாழ்க்கையில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.

எனினும் இடதுசாரிகளின் முழுமூச்சான பங்களிப்புகளுடன் "வடஇலங்கை சிறுபான்மை தமிழர் மகாசபை" இன் கடின உழைப்பின் பேரில் சில சில உரிமைகள் பெறப்படலாயின. குறிப்பாக நல்லூர் கந்தசுவாமி கோயில், பெருமாள் கோயில், வண்ணை சிவன் கோயில் போன்றவற்றின் ஆலயப்பிரவேசங்களைக் குறிப்பிடலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1950களின் பின் தமிழரசுக்கட்சியின் தோற்றம் அவ்வப்போது சாதிய ஒழிப்பு முயற்சிகளுக்கு ஆதரவாய்த் தோன்றினாலும் அவர்களின் உண்மை குல நலம் வெளியிட கனகாலம் செல்லவில்லை. கமியூனிஸ்ட் கட்சியினரால் பொன்னாலை தண்ணீர்ப் போராட்டத்தில் தொடங்கப்பட்ட மக்கள் கிளர்ச்சிகள் ஸ்தாபனமயப்படுத்தப்பட்டு 1966 "ஒக்டோபர் எழுச்சி" எனும் பெயரில் மாபெரும் ஊர்வலம் ஒன்று தயாராக்கப்பட்டது. தொடர்ந்து சங்கானை தேனீர்க்கடைப் போராட்டம் சுமார் இருவருடகாலம் மிகவும் எதிர்ப்புகளுடன் நடந்து கொண்டிருந்தது. சாதி வெறியர்களுக்கு ஆதரவாக போலிஸ்க்காரர்களும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சார்பாக கம்யூனிஸ் கட்சியும் இருந்தது. இருவர் கொல்லப்பட்டும் பலர் காயம் பட்டும் போலிசாரின் காடைத்தனம் தலைவிரித்தாடியது. மறுபுறம் கரவெட்டி- கன்பொல்லை தேனீர்க்கடைப் போராட்டமும் சளைக்காமல் நடந்தது.

இவ்வேளைகளில்தான் வட்டுக்கோட்டை எம்.பி. யாகவிருந்த தமிழரசுக்கட்சியின் தளபதியான அமிர்தலிங்கம் ஓர் சிங்கள முற்போக்குவாதியின் கேள்விக்கு பதிலளிக்கையில் சங்கானையில் அப்படியொன்றும் பெரிதாய் நடக்கவில்லை என்று பொய்கூறி அது சங்கானை அல்ல சங்காய்- வியட்னாம் என்று கிண்டலடித்தார். இவ்வகையில் தமிழரசுக் கட்சியினர், தங்கள் ஈழ வேளாள நலங்களுக்காய் மட்டுமே தாம் என்ற சுய ரூபம் வெளிப்பட்டது.

இதன் விளைவாக தொடர்ந்து வந்த 1970ம் ஆண்டு பொதுத்தேர்தலில் (சங்கானை போராட்டப் பகுதி) வட்டுக்கோட்டையில் இருந்து தளபதி அமிர்தலிங்கமும் (கரவெட்டி- கன்பொல்லை போராட்டப்பகுதி) உடுப்பிட்டித் தொகுதியிலிருந்து உடுப்பிட்டி சிங்கம் சிவசிதம்பரமும் தோற்கடிக்கப்பட்டனர். இத்தோல்விகளானது தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டத்தில் இத்தலைமைகள் வகித்த துரோகப் பங்குக்கு தகுந்த பாடமாகியது.

1972 ல் சிங்கள இனவாத அரசின் கல்வி தரப்படுத்தல் முறையினால் யாழ் படித்த வாலிபர்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றது குறைக்கப்பட்டது. சிங்கள அரசின் திட்டமிட்ட இந்நடவடிக்கையானது மொழிவாரியாக எடுக்கப்படாமல் மாவட்டவாரியாக தரப்படுத்த முயன்றமையினால் யாழ்மாவட்டத்திற்கு வெளியேயிருந்த மன்னார், முல்லைத்தீவு, திருமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் இருந்து தாழ்த்தப்பட்ட தமிழ் மாணவர்கள் பலர் புதிதாய் பல்கலைக்கழகம் செல்ல வாய்ப்பேற்பட்டது. இது வசதியாக மறைக்கப்பட்டு ஈழவேளாளரின் கல்விப் பிரச்சனைகள் தமிழ் இனச்சாயம் பூசப்பட்டு சிங்கள ஒடுக்குமுறைக்கெதிரான தமிழ்த் தேசியத்தின் எழுச்சி மக்கள்முன் எடுத்துச் செல்லப்பட்டது.

இச்சந்தர்ப்பங்களை சரியாக பயன்படுத்தி அனைத்து தமிழரையும் ஒரே குடையின்கீழ் கொண்டுவந்து சாதி, சமய, பிரதேச வேறுபாடுகளை மறைத்து எல்லோருக்கும் பொதுவான ஓர் புனித மாயையை கட்டியமைக்க தமிழரசுக் கட்சியினரால் போடப்பட்ட சரியான கணக்கே 1976ம் ஆண்டின் வட்டுக்கோட்டை மகாநாடும் அதன் தமிழீழப் பிரகடனமும் தமிழர்விடுதலைக் கூட்டணியின் பிறப்புமாகும். இப்புனித மாயையில் கட்டுண்ட தாழ்த்தப்பட்ட மக்கள் தம் அன்றாட உரிமைகளை மறந்து என்றோ வரப்போகும் தனிநாடு எல்லோருக்கும் விடுதலையளிக்கும் என்று கனவு கண்டதனால் அதன் பிறகு இவ்வகை தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டங்கள் மறைந்து போயின. இதுவரை காலமும் தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு எந்தப் பிரதிநிதித்துவமும் கொடுக்காத கூட்டணியினர் தமது தமக்கேயுரிய அப்புக்காத்து புத்தியை பயன்படுத்தி 1977 தேர்தலில் உடுப்பிட்டித் தொகுதிக்கு ஓர் தாழ்த்தப்பட்ட பிரதிநிதியான தி. இராஜலிங்கத்தை முன்னிறுத்தி வெற்றியும் கண்டனர்.

1983 இனக்கலவரத்தினைத் தொடர்ந்துவந்த தேசிய அலையானது அள்ளிவந்த இளைஞர் பட்டாளத்தை அணைத்துக் கொண்ட ஐந்து இயக்கங்களும் அரசோச்சிய காலத்திலும் ஏற்பட்ட சாதிப்பிரச்சனைகளை ஏதோ வேலிப்பிரச்சனையாகக் கருதி அங்காங்கே தீர்த்துவிட்டனரே அன்றி இடதுசாரிகள் செய்தவற்றின் எட்டில் ஒரு பங்கைக்கூட இவ்வியக்கங்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக செய்யவில்லை.

இற்றைக்கு சுமார் இருபது வருடங்களுக்கு முன் தாழ்த்தப்பட்ட மக்களிடையேயிருந்த விடுதலைத் தாகமும் அதற்கான வேகமும் அப்படியே கட்டிவைக்கப்பட்டு தமிழ்த் தேசியம் என்னும் மாயை பரப்பப்பட்டிருக்கிறதே அன்றி, சாதி ரீதியாக தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வில் அதன் பிறகு எவ்வித மாற்றமும் நிகழவில்லை. ஈழவேளாள அடக்குமுறைக்கெதிராய் ஏதும் செய்யவிடாமல் புனித தேசியம் அவர்களைக் கட்டிப்போட்டிருக்கிறது. தமிழ்த் தேசியம் என்பது நூற்றாண்டுத் தொடர்ச்சியான ஈழவேளாள அரசியலின் இறுதி வடிவம். இன்றுவரை தமிழ் மக்களுள் உள்ள சாதியக்கொடுமைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளமை தாழ்த்தப்பட்ட மக்களின் உண்மைக் கிளர்ச்சியின் (Masse mouvement) தேவையை அவசியமாக்கியுள்ளது. மாறாக, தேசியவாத அலை இருக்கும் வரை சமூகத்தின் உள்ளே காணப்படும் சாதியக் கொடுமைகள் வெளியே காட்டப்படாதென்பதுவும், தேசியத்தின் கூர்மை இரண்டாம் பட்சமாகும் சந்தர்ப்பத்தில் மீண்டும் சாதியத்திற்கெதிரான போராட்டம் தோன்றியே தீரும் என்பதுவும் காலத்தின் கட்டாயம்.

இவ்வகையில்தான் இன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்வெளியேற்றத்தின் பின்னர் தேசிய உணர்வு இரண்டாம் நிலைக்கு இறங்கிவிட யாழ் குடா மக்களின் சமூக தேவைகளும் பிரச்சனைகளும் கூர்மைப்பட்டுள்ளன. இதன் ஓர் சிறு அறிகுறியே இன்றைய வட்டுக்கோட்டை பிரச்சனையாகும். தமிழ் மக்களுக்கு இலங்கையின் சுதந்திரம் எப்படியானதோ அதைப்போல்தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் தமிழீழம் ஓர் பெயரளவு சுதந்திரமாகவே இருக்க முடியும் என்பதனையே இன்றைய வட்டுக்கோட்டை சுட்டிநிற்கின்றது. ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யாழ்ப்பாணத்திலை எவடம்?



**மரங்கொத்தி**

தலைப்பு வித்தியாசமாய் இருந்தாலும் கேள்வியின் சாராம்சம் வியப்புத் தந்திருக்காது. இந்தக் கேள்வியை அநேகமாக புலம்பெயர்ந்து வாழுகின்ற தமிழ்மக்கள் எல்லோருமே சந்தித்திருப்பார்கள். சிலர் இந்தக் கேள்வியைக் கேட்டவர்கள் என்ற வகையிலும், மற்றையவர்கள் இக்கேள்வி கேட்கப்பட்டவர்களாகவும் இரண்டு பிரிவினராய். நான் இரண்டாவது பிரிவுக்குள் வருபவன் என்ற முறையில் இந்தக் கேள்வியை கேட்டவர்களின் அடிப்படைச் சிந்தனை, அவர்கள் இக்கேள்விக்கு கற்பித்த விளக்கம் உட்பட, சம்பவங்களை மேற்கோள் காட்டி எழுதலாம் என எண்ணுகிறேன்.

ஒரு மளிகைக் கடையினுள் இருவர் பேசிக்கொண்டிருந்தார்கள். இருவரில் ஒருவர் சுமார் நாற்பதைத் தாண்டியவர். மற்றவர் வாலிபர் (சம்பவம் நடந்த ஆண்டில்). நான் ஒரு வாடிக்கையாளர் என்ற முறையில் கடையில் பணிபுரிந்துகொண்டிருந்தவர் நன்கு பழக்கமானவர். மரக்கறி வாங்க சென்ற இடத்தில் அதே நேரம் பார்த்து ஒரு பெண்மணி (அகதியாய் வராமல் அதற்கு முன்பே படிக்க வந்திருக்கவேணும்) கடைக்குள் வந்தார். வந்ததும் கடையின் காசாளரை நோக்கி, "Kannan have you got the film called Poove Pooch Choodavaa", (கண்ணன்! பூவே பூச்சூடவா என்ற படம் இருக்கா?) என்று ஆங்கிலத்தில் கேட்டார். பூவே பூச்சூடவா என்று ஆங்கிலத்தில் சொன்னது முதலில் கண்ணனுக்கு புரியாதபோதிலும் பின்னர் ஒரு புன்னகையோடு கிரகித்துக்கொண்டார். நானும் அந்த இருவரும் எமக்குள் சமிக்ஞையுடன் சிரித்துக்கொண்டோம். அதன் பின் கண்ணனை நோக்கி "Kannan have you got the Kaai called Murunkak Kaai?" (முருங்கக்காய் என்ற காய் இருக்கா?) என்று ஆங்கிலத்தில் கேட்கவும் அந்தப் பெண் முறைக்கவும் நாம் எல்லோரும் சிரிக்கவும் அந்த நாற்பது உட்பட பேச ஆரம்பித்தோம். ஜனரஞ்சகமாக பேசியதாலோ என்னவோ அந்த நாற்பது வயது மனிதர் "தம்பி நீர் யாழ்ப்பாணத்திலை எவடம்?" என்று என்னைக் கேட்டார். கோபம் வந்தது. வராதது போல நடித்தேன். கண்ணன் புரிந்து கொண்டார். நான் "கொம்பன் விழுந்த மடு" என்று விரைவாகப் பதிலிறுத்தேன். விரைவாகச் சொல்லி முடித்ததால் நான் சொன்னதைக் கிரகிக்க முடியாமல் போன நாற்பது மீண்டும் "எவடம் தம்பி? என்றது. மிகவும் அழுத்தந் திருத்தமாக "கொம்பன் விழுந்த மடு" என்று சொன்னேன்.

"கொம்பன் விழுந்த மடு... யாழ்ப்பாணத்திலை அப்பிடி ஒரு இடம் இல்லையே தம்பி" என்றார் நாற்பது. "யாழ்ப்பாணத்திலை அப்பிடி ஒரு இடம் இல்லாட்டி உங்கடை கேள்வி பிழையெண்டு விளங்குதல்லோ. அப்ப கேள்வியை மாத்துங்கோ. யாழ்ப்பாணத்தாரைத் தவிர வேறை ஆக்கள் அகதியாய் வரக்கூடாதோ? 'கொம்பன் விழுந்த மடு' என்று சொன்னால் பிரிட்டிஷ்காரன் 'விசா' தரானோ? ஆத்திரம் வார்த்தைகளால் கொட்டப்பட்டபின் "இனிமேலாவது யாழ்ப்பாணத்திலை இருந்து என்று தொடங்காமல் கேள்வி கேட்கப் பழகிக்கொள்ளுங்கோ." என்று கூறிவிட்டு கடையை விட்டு வெளியேறினபோது அந்த மனிதருடன் பேசிக்கொண்டிருந்த வாலிபர் வெளியே வந்து "நீர் நல்லாக் குடுத்தீர் அவருக்கு. என்னட்டையும் உதே கேள்வியைக் கேட்டவர். என்ன செய்யிறதெண்டு பதில் சொல்லிப் போட்டன். உம்மைப்போல முகத்துக்கு நேர கதைக்க முடியேல்ல" என்று கூறினார். அவரும் அந்த இரண்டாவது பிரிவைச் சேர்ந்தவர், கேள்வி கேட்கப்பட்டவர்.

யாழ்ப்பாணத்தில் எந்த இடம் என்று கேட்பவர்களில் இவர் ஒரு உதாரணம் மட்டுமே. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெரும்பாலானவர்களின் கேள்வி எப்போதும் மேற்சொன்னவிதமாகவே அமையும். இதுவே வன்னியிலிருந்தோ கிழக்கு மாகாணத்திலிருந்தோ வந்தவர்களிடம் இருந்து எழும்போது, நீங்கள் வவுனியாவில் எவடம் அல்லது மட்டக்களப்பில் எவடம் என்று வருவதில்லை. யாழ் மேலாதிக்க சிந்தனையின் இந்தப் போக்கு பிரதேசவாதத்தின் வித்தாய் அமைந்தது மாத்திரமன்றி, அதை வலுக்கட்டாயமாக திணிப்பதிலும் தன் கடமையை செய்வதில் பின் நிற்கவில்லை.

இன்னொரு சம்பவம். ஒரு தேநீர் விடுதியில் நடந்தது. கேள்வி கேட்டவர் ஐம்பதைத் தாண்டியவர். "தம்பி நீர் Jaffnaவிலை எவடம்? என்ன கொடுமையடா இது. சாப்பாட்டுக் கடையிலை வேறை ரென்சனாக்குது மனுசன். எனக்குள் முணுமுணுத்தபடி பதில் சொல்லாமல் இருந்தேன். என்னுடன் இருந்த மற்ற மூன்று நண்பர்களும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள்தான். அவர்களில் இருவர் இதே மாதிரிக் கேள்வியைக்கேட்டு கேள்வியை மாற்றியவர்கள் என்பதும் குறிப்பிட வேண்டிய விடயம். மீண்டும் அவர் அதே கேள்வியை ஆங்கில வார்த்தைக் கலப்பில்லாமல் கேட்டார். அவருடைய வயதுக்கு மரியாதை கொடுப்பது என்று முடிவு செய்ததால் எதுவுமே பேசவில்லை. ஆனால் அந்த மனுசனோ விடுவதாயும் இல்லை. இம்முறை 'கொம்பன் விழுந்த மடு' என்று பதில் சொல்லவில்லை. "ஏன் யாழ்ப்பாணத்தை விட்டா இலங்கையிலை வேறை இடமே கிடையாதோ?" ஒரே ஒரு வசனம் ஆனால் ஒரு கிலோ காரத்துடன் கொடுத்தேன். நன்றாக உறைக்கவேண்டுமே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"இல்லைத் தம்பி நீர் பிழையாய் விளங்கிட்டீர்" நான்... யாழ்... இடைமறித்தேன். "நீங்கள் யாழ்ப்பாணம் எண்டது முழு இலங்கையை அல்லது வடக்கு கிழக்கைத் தானே! உங்களுக்கு வடக்கும் கிழக்கும் யாழ்ப்பாணமாய்த் தெரிஞ்சா அது உங்கட அறிவீனம். வக்கிர சிந்தனை. எனது ஊரை யாழ்ப்பாண மேற்கோளின்கீழ் அடையாளப்படுத்தி அறிமுகம் செய்யவேண்டிய தேவை எனக்கில்லை. அது அவசியமும் இல்லை." பதில் உறைத்திருக்க வேண்டும். நெற்றி வேர்வையை பெரியவர் இலேசாய் துடைத்துவிட்டார்.

யாழ்ப்பாணம் என்று அவர்கள் கற்பிக்கும் புதிய விளக்கம் இன்னும் அபத்தமானது. வெளிநாடுகளுக்கு (கிறீஸ்துவுக்கு முன்-பின் மாதிரி) அகதிகளாய் வரமுன், வந்தவர்கள் கூடுதலானோர் யாழ்ப்பாணம் ஆனமையினால் தாம் எவடம் என்ற வினா எழுப்பவேண்டிய தேவை இருக்கவில்லை என்பது ஒரு விளக்கம். அப்படியே பழகிப்போன தால் இப்போதும் கேட்பதாய் இன்னொன்று.

'ஈழமுரசு' பத்திரிகை பிரான்ஸ் நாட்டில் இருந்து வெளிவரும் பத்திரிகை. உள்ளே புரட்டிப் பாருங்கள். 'யாழ்ப்பாணச் செய்திகள்' ஒரு பகுதியாகவும் 'தமிழீழச் செய்திகள்' ஒரு பிரிவாகவும் வரும். இதிலிருந்து நாம் மூன்று முடிவுகளுக்கு வரலாம். ஒன்று யாழ்ப்பாணம் ஒரு தனித்தேசம். இரண்டாவது தமிழீழத்தினுள் யாழ்ப்பாணம் இல்லை. அல்லது மூன்றாவதும் வெளிப்படையானதுமான யாழ்ப்பாண மேலாதிக்க சிந்தனையின் வெளிப்பாடு. ஒரு காலத்தில் தமிழீழப்போராட்டம் யாழ்ப்பாணத்துக்குள் குறுக்கப்பட்டிருந்ததும், அதன் காரணமாக முக்கிய செய்திகள் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றதும் யாழ்ப்பாணத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டியதை காலக்கட்டாயமாக்கிற்று. ஆனால் அந்த நிலைமை இன்றில்லை. முனைப்பான போராட்டம் இன்று வன்னியிலும் கிழக்கின் சில முனைகளிலுமே நடைபெறுகின்றது. ஆனால் 'ஈழமுரசு' பத்திரிகை யாழ்ப்பாணச்செய்திகளை ஒரு பிரிவாக்க இவை எதுவுமே காரணங்களாக இல்லை என்பது தான் அப்பட்டமான உண்மை.

லண்டனில் வருடாவருடம் நடக்கும் நிகழ்ச்சி இது. தமிழீழ விடுதலைப் புலிகளினால் நடத்தப்படும் நிகழ்ச்சி. புலம்பெயர்ந்த நாடுகளில் இருக்கும் இசைக்குழுக்களுக்கிடையில் நடாத்தப்படும் போட்டி நிகழ்ச்சி. 'யாழ்முரி விருது' என்பதே அந்த நிகழ்ச்சியின் பெயர். சம்பந்தப்பட்டவர் ஒருவருடன் இதுபற்றி அளவளாவினேன். "தமிழீழக் குழுக்களிடையே நடக்கும் போட்டிக்கு ஏன் 'யாழ் முரி' என்று பேர்' என்றேன். 'யாழ்முரி' என்பது யாழ்ப்பாணத்தைக் குறிக்கவில்லை என்றும் அது ஒரு வாத்தியத்தின் பெயர் என்றும் பதில் வந்தது.

யாழ் பாடியதால் யாழ்ப்பாணம் என்றும் அல்லது யாழ்ப்பாணத்தில் வாசிக்கப்பட்டதால் யாழ் என்றும் பெயர் வந்ததாய் சரித்திரம் கூறும். இது அவசியமில்லாததும் கூட. மொத்தத்தில் இது யாழ்ப்பாண மேலாதிக்க சிந்தனையின் வெளிப்பாடு தான். எதை எடுத்தாலும் யாழ் என்று தொடங்க வேண்டும். விளக்கம் மட்டும் வேறுவிதமாய் இருக்கும்.

வாதத்திற்காக அது ஒரு வாத்தியத்தின் பெயராகவே இருக்கட்டுமே. ஏன் அது புல்லாங்குழலாகவோ அல்லது பறை மேளமாகவோ இருக்கவில்லை. 'உடுக்கு விருது' என்றுகூட வைத்திருக்கலாமே. மொத்தத்தில் யாழ் என்று வேறு எந்த வாத்தியமும் தொடங்காததுதான் அதற்குக் காரணம்?

'யாழ்முரி' ஒரு வாத்தியமாய் இருந்தாலும் இன்றைய காலகட்டத்தில் அப்படிப்பட்ட சொற்கள் தவிர்க்கப்பட்டே இருக்கவேண்டும். உதாரணத்திற்கு, 'கற்பு' என்பது ஒழுக்கம் 'நெறி' தொடர்பான விடயத்தை விளக்கும் சொல். இது ஆண் பெண் இருபாலாருக்கும் பொதுவான சொல்லே. ஏன் அப்படியென்றால் நாம் கற்புடன் தொடங்கும் சொற்களை பாலியல் வன்முறை, பாலியல் பலாத்காரம் என்று மாற்றவேண்டும்? 'கற்பழிப்பு' என்றே பாவிக்கலாமே. 'கற்பு' என்பது பொதுவான சொல் என்றபோதிலும், அது சுட்டும் பொருள் பெண்களை மட்டுமே குறிப்பிடுவதால் அந்தச் சொல்லை விலக்கவேண்டிய தேவை வந்தது. விலக்கினோம். யாழ்முரியும் அப்படித்தான்.

அண்மையில் நடந்த சம்பவம் இது. மட்டக்களப்பில் இருந்து கொழும்புக்குச் செல்ல தடை விதிக்கப்பட்டபோது ஐ.பி.சி. வானொலிப்பணிப்பாளர் ஒருவருடன் பேட்டி கண்ட சமயம் கூறியவை இவை. "இந்தத் தடை தாண்டிக்குளத்தில் கொண்டுவரப்பட்ட தடைபோல இருக்கிறதே. அப்படியானால் கிழக்கு மக்களும் யாழ்ப்பாண மக்கள் கஸ்ரப்பட்டதுபோல கஸ்ரப்படப் போகிறார்களே" என்றார். தாண்டிக்குளத்தடை வெறும் யாழ்ப்பாண மக்களுக்கு மட்டும் கொண்டுவரப்பட்ட தடை அல்லவே. யாழ்ப்பாண மக்கள் கஸ்ரப்பட்டது மாதிரி என்று அடிக்கடி கூறிய பணிப்பாளர் சொல்ல வந்தது என்ன? வன்னியின் மற்றப்பகுதிகளில் இருந்து தாண்டிக்குளத்தைத் தாண்டியவர்கள் எல்லாம் மாடுகள் என்பதா? யாழ்ப்பாண மக்களைவிட வேறுயாருக்கும் தாண்டிக்குளத் தடையால் கஸ்ரம் நேரவில்லையா?

யாழ்மேலாதிக்க வக்கிரசிந்தனையின் அடிப்படை அப்படியே இருக்க அதன் மேல்புறத்தில் பூசப்பட்ட சாயமே பிரதேசவாத ஒழிப்பு என்பது. இது 1960களில் வவுனியா தொகுதிக்கு போட்டியிட்ட சுந்தரலிங்கத்தின் வாசகம் ஒன்றை நினைவுக்குக் கொண்டு வருகின்றது. "வன்னிமாடுகளை ஒரு கத்தை வைக்கோலுடன் திசை திருப்புவேன்" என்பதே அது. அரசியலில், கல்வியில், கலாச்சாரத்தில் என்று அனைத்துத் துறைகளிலும் ஊறிப்போன இந்த சிந்தனை சுந்தரலிங்கத்தின் சிந்தனையிலிருந்து துளிகூட மாறவில்லை என்புதைக் காட்டவே மேற்கோள் காட்டினேன்.

அடிப்படைகளில் மாற்றங்கள் நிகழாதவரை தமிழீழம் வெல்லினும் இதற்கான போர் தவிர்க்க முடியாத நிகழ்வாவதை வரலாறு நிரூபிக்கும். ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விளக்கமளிப்புக் கோட்பாட்டு அணுகுமுறைகளை...?

எஸ். வி. ர..பேல்

தவிர்க்கமுடியாதபடிக்கு குறிப்பிடவேண்டியதாக இருந்தாலொழிய ஓர் சொல்லைக் கவிதையின் பனுவலில் இட்டு என்ன பயன். அது தனது 'மேலதிக', சேவையைச் செய்யவா? அப்படியொரு சேவை இல்லையே என்பது போல், அப்படியிருந்தாலொழியத் தேவையில்லையே என்று பனுவல்களைதேவை இல்லாது உற்பத்தி செய்யாதுவிட்டால் எவ்வளவு நலமாயிருக்கும். மேலதிகங்களுக்கு இடமில்லை என்று இங்கே எந்தத்தாளும் மறுக்காததால் இந்த நிலை அப்படியே தொடர்கிறது.

சமூகத்தில் பனுவல் படிப்புத் தளங்கள் மாறுபட்டபோதும் ஒவ்வொரு பனுவலும் அதனதன் இடத்தில். பேச்சின்மூலமாக உருவாக்கப்படும் பனுவல்கள் மிகவும் பூடகமாக இருப்பதாலும் அவற்றின் பேச்சொலிமையவாதத் தன்மையாலும் அதற்கேதும் முக்கியம், செயற்பாட்டுத்தன்மை இருப்பதில்லை. அதன் உள், குறுகிய வட்டங்கள் இதற்கு விதிவிலக்குத்தான். எழுதப்படும் பனுவல்கள், நின்று விளையாடுவதும் அதன் அவ்வவற்றிற்கேயான பனுவலிடைச் செயற்பாடுகளை உருவாக்குவதும் தமது இலகுவான சாத்தியங்களாகக் கொண்டிருக்கும்.

புகலிடநாடுகளில் வாழ்வோரும் கனடா, அவுஸ்திரேலியா போன்ற புலம்பெயர் நிலையினரும் (இவர்களின் தொடக்க காலங்கள் மட்டும்) இன்று தங்களது படைப்பின் உருவாக்கச் செயற்பாடுகளில் எதிர்கொள்ளும் சிக்கல்களைவிடவும், தத்தமது கருத்தியல்ரீதியிலான நிலைப்பாடுகளின் மூலமான வெளிப்பாடுகளிற்தான் அதிகமான சிக்கல்களை எதிர்கொண்டிருப்பதாக கையில் கிடைக்கும் பனுவல்கள் அறியத்தருகின்றன.

இதற்கு மேலோட்டமான இரண்டு மூன்று காரணங்கள்தான் தென்படும். இந்த வேற்றிட வாழ்வில் கிடைக்கும் பரவலான புதிய சிந்தனைப்போக்குகள், பாணிகள், நடைமுறைகள், வாழ்வியல் வெளிப்பாடுகளின் அறிமுகம். இப்புதிய, தாயக நாட்டில் கைகூடிவரமுடியாத அறிமுகங்களினால் உருவாகும் சுய சிந்தனையின் தளவிரிவுகள். இத்தளவிரிவுகள் உருவாக்கிவிடும் பதில் இல்லாத, பதில் இருப்பதாக நினைத்துக்கொள்ளும், பதில் கைவசம் இருக்கும் எண்ணற்ற கேள்விகள்; தமது இயல்பினாலேயே மிகப் பொருத்தமானவர்களிடம் எழுப்பிவிடும் பரவலான தேடல். இந்த தேடல் நிலையில் இருப்பது சாலச்சிறந்தது போலவே, இதன் இடைநிலைகளில் இருக்கும், தேடல் தொடங்குமுன்னமே, ஆய்ந்து கொள்ளாமல் கிடைத்த பதில்களால் இட்டு நிரப்பப்பட்டு மூடிப்போயுள்ள, எந்தப் பீரங்கிகளாலும் தகர்க்கச் சிரமமான கட்டபொம்மன் கோட்டைகள். இந்தக் கோட்டைகள் உருவாக்கி வைத்திருக்கும், அவர்களிற்குத் தரப்பட்ட, நம்பிக்கை மிகுந்த பதில்களால் கிடைத்த திருப்தியின் உறுதி அசைக்க முடியாததே.

இவ்வகைத் திருப்தி இப்போதென்றல்ல. காலம் காலமாக மனித வரலாற்றில் இருந்துவந்ததுதான். இந்தத் திருப்தியில் கிடைக்கும் பாதுகாப்பான உணர்வுதான் திருப்திப்பட்ட இத்தகைய சமூகப் பிரதிநிதிகளின் மூலாதாரப் பலம். பதில், திருப்தி, பாதுகாப்பு என்பன மிகவும் உறுதியான நிலையை தருவதால், நிம்மதியாக நித்திரை கொள்ளவைப்பதால், அடுத்தகட்டத் தேடலை யாரும் விரும்புவதில்லை. தேடல் என்றால் கேள்விகள், கேள்விகள் என்றால் பூரணமான பதில் கிடைக்கும்வரை திருப்தியின்மை, திருப்தியின்மையின் நிலையற்ற, அதனால் பாதுகாப்பு உணர்வில்லாத நிலை. இந்த நிலையையும் யாரும் விரும்புவதில்லை.

எனவே ஒவ்வொருகாலகட்டத்திலும் அரசியல் நடைமுறை ரீதியிலோ, தத்துவக் கோட்பாடுகள் குறித்தோ, பண்பாட்டு விழுமியங்கள், நடைமுறைகள், விளக்கமளிப்பு முறைகள் தொடர்பாகவோ ஓர் தீர்மானமான, பாதுகாப்பாக உணர்கின்ற நிலை இருந்து கொண்டிருக்கும். இந்த நிலையைக் குலைக்குமென்பதாக ஏதேனும் ஒரு கேள்வி எழுமானால் அந்தக்கேள்வி சமூகத்தினால் புறக்கணிக்கப்படும் அல்லது மிக வன்மையாக எதிர்க்கப்படும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த எதிர்ப்பின் அளவு, தன்மை என்பன கேள்வியின் அளவு தன்மையைப் பொறுத்ததாகவே அமையும். பெரியகேள்வி இது என்று முன்வைக்கப்படும் கேள்விகள் கண்டுகொள்ளாமலே விடப்படுவது போலவே கேள்வியாக இல்லாதவை மிகப்பெரிய எதிர்நிலைக்கேள்வியாக மாறக்கூடும். கேள்விகளைப்போன்ற செயல்பாடுகள் தடுத்து நிறுத்தப்படும். செயல்பாட்டாளர்கள் மூலைக்குள் தள்ளப்படலாம் அல்லது செயலிழக்கச் செய்யப்படலாம். அரசுக்கருவியின் பலத்தினைப் பொறுத்து, அல்லது திருப்திகொண்டு இதுதான் பாதுகாப்புணர்வு தருகின்றது என்றிருக்கும் அந்தச் சமூகத்தின் செயற்பாட்டு அணுகுமுறையையும் பொறுத்து கேள்விகேட்கும், புதியகேள்விக்கும் தேடலுக்குமான தளங்களை உருவாக்குபவர்கள் செயலிழக்கச் செய்யப்படுவதன் வீச்சு இருக்கும்.

உலகத்தின் ஆதி ஜனநாயக அரசமைந்த கிரேக்கம் நினைவுக்கு வந்தால் அதன் தத்துவமரபும் நினைவுக்கு வரும். அரிஸ்டோட்டிலும் பிளேட்டோவும் சோக்கிரட்டீஸும் ஒருவரை ஒருவர் குறைவுபடாதபடி உலகினால் அறியப்பட்டவர்கள். அரிஸ்டோட்டிலும் பிளேட்டோவும் எழுதிக்குவித்ததில் ஒருவரியாவது சோக்கிரட்டீஸினால் எழுதப்படவில்லை. இத்தனைக்கும் இவர்களின் முன்னோடி சோக்கிரட்டீஸே. இந்த சோக்கிரட்டீஸ், அப்போதைய, கடவுள் வழிவந்ததான மன்னராட்சியின் ஜனநாயகக் குழுவில் இருந்துகொண்டு கண்மூடித்தனமாக ஒத்துழைக்க மறுத்ததனால் மட்டும் நஞ்சூட்டப்படவில்லை. அவர் அனைத்தையும் எதிர்கொள்ள நினைத்ததனால், அந்தச் சூழ்நிலைகளிலிருந்து தப்பி ஓடாமல் இருந்ததனால் நம்பிக்கையூட்டும் விதமாக தென்பட்ட இளைஞர்களிடமும், முதியோரிடமும் தொடர்ந்து உரையாடல்மூலம் தேடலை வலியுறுத்தியதனால் கொல்லப்பட்டார்.

இது பின்னர் யேசுவுக்கும் நிகழ்ந்தது. மன்னன் தான் வழிபாட்டுக்குரியவன் என்ற நிலையைமீறி, வழிபாட்டுக்கு வேறுயாரோ இருப்பதாகச் சொன்னதால் வந்தது வினை. கௌதமனுக்கும் அதுவே நடந்தது. இந்தியாவெங்கும் வியாபித்து நின்ற வைணவ, சைவ வைதீகங்கள் கௌதமன் எழுப்பிய காரணத்தைத் தேடிய கேள்விகளை விரும்பவில்லை. அந்தக் காரணங்கள் வைதீகத்தின் மூலாதாரங்களை உசுப்பப்போகின்றது என்ற பயத்தில் பௌத்தவழி முற்றாக அழிக்கப்பட்டு மூடப்பட்டது. தமது சமூகத்தின் இருப்பையே தகர்க்கவந்த இன்னொருமுகமாக அப்போது அடையாளம் காணப்பட்ட, இப்போது மதமாக மாறிவிட்ட பௌத்தவழியை, பிறமதங்களின் பாதுகாப்பு உணர்வினால் திருப்திப்பட்டிருந்தவர்கள் மூடவே செய்தார்கள்.

அமெரிக்கா தன் இறையாண்மையை விரிக்க அமெரிக்கக் கண்டத்தில் மகிழ்வோடு இயங்கிக் கொண்டிருந்தபோது, 'தேவையில்லாமல்' லத்தீன் அமெரிக்கப்பகுதிகளில் மோட்டார்சைக்கிளில் பயணம்செய்துவிட்டு தான்பெற்ற, மக்களின் சிரமம்

**உலகத்தின் தத்துவப்போக்குகளில் இன்று நீண்டகாலமாக ஒரு சார்பு எடுத்துக்கொண்டு எதிர் கருத்து நிலைகளோடு பொருதிநின்று பிடித்துக்கொண்டிருப்பது மார்க்ஸியம் மட்டுமே. வரலாற்றினூடு நூற்றாண்டு தாண்டியும் நீட்சே, ஹைடெக்கர், ஹீஸ்ரேல், காம்யூ, ஸார்த்ரே, வெபர், அயெர், ரஸ்ஸெல் என்பார்களின் எழுத்துக்களைத் தாண்டியும் மார்க்ஸியம் நின்று பிடிக்கிறது.**

மீதான கேள்விகளினால் அதற்கேதேனும் செய்யலாம் என்று முயன்ற 'சே'யை அமெரிக்கா கொன்றதும் இதே வகையினதே. மேற்படி ஒவ்வொரு நிகழ்வினதும் அதனதன் சரிகளின் சதவீதத்துக்கும் பிழைகளின் சதவீதத்துக்கும் அப்பால் சமூகத்தில் இருப்பைக் குலைக்கும், பாதுகாப்புணர்வைக் குலைக்கும் தன்மையே முன்னால் நின்று இயங்கியதும், அந்தப்பாதுகாப்பை உணர்பவர்களே புதியதை அழிக்கவும், எதிர்க்கவும், கொலைசெய்ய முற்பட்டதையும் காணமுடிகிறது. சமூகநடைமுறையின் பாதுகாப்புணர்வுபோலவே கருத்தியல் நிலைப்பாட்டுப் பாதுகாப்புணர்வும். இக்கருத்தியல் நிலைப்பாடு வழியான பாதுகாப்புணர்வு சற்றே வேடிக்கையானது. இடது வலது இரண்டு பக்கமும் மறுக்க தவிர்க்கமுடியாதது. ஓர் சரியான தளம்பலற்ற முழுமையான ஆளுமை ஒவ்வொருவரிடமும் உள்ளதா என்பதை அறிய இன்றைய சமூகஉளவியலின் வினாப்படிவங்கள் வைக்கும் முக்கியமான கேள்வி 'உமக்கு கடவுள்/மத நம்பிக்கை இருக்கிறதா? அல்லது மார்க்ஸியத்தில் நம்பிக்கை இருக்கிறதா? அல்லது கடவுள் மறுப்பில் நம்பிக்கை இருக்கிறதா? அல்லது இவையல்லாத கோட்பாட்டு நம்பிக்கை?' இதில் ஒன்றும் இல்லையென்றால் முழுஆளுமை உடைய மனித உயிராக நாங்கள் மதிக்கப்படமாட்டோம். இதைத்தானே இன்றைய நிலைப்பாட்டுப் பாடகர்கள் கேட்கும் கேள்வியின் மறுதலை என்று ஒருவர் காணமுடியும்.

உலகத்தின் தத்துவப்போக்குகளில் இன்று நீண்டகாலமாக ஒரு சார்பு எடுத்துக்கொண்டு எதிர் கருத்து நிலைகளோடு பொருதி நின்று பிடித்துக்

1. மார்க்ஸியர்கள் அல்ல. மார்க்ஸியர்கள் - சிறப்பாக கட்சிகளின் பெயரால் இயங்குபவர்கள் - அல்லவே அல்ல.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டிருப்பது மார்க்ஸியம் மட்டுமே.[1] வரலாற்றினூடு நூற்றாண்டு தாண்டியும் நீட்சே, ஹைடெக்கர், ஹீஸ்ரேல், காம்யூ, ஸார்த்ரே, வெபர், அயெர், ரஸ்ஸெல் என்பார்களின் எழுத்துக்களைத் தாண்டியும் மார்க்ஸியம் நின்று பிடிக்கிறது. கட்சிநடத்தும் மார்க்ஸியக்காரர்கள் அவர்கள் மார்க்ஸியத்தை நம்புவதால், கேள்விகேட்கும் எல்லாம் இருப்பைக் குலைக்கவந்த கோடரிக்காம்பு என்று பார்க்கிறார்கள். கட்சி நடத்தாத, கட்சியால் நடத்தப்படும் மார்க்சியர்களும் அப்படியே. இது ஒன்றும் பேசக்கூடாத ரகசியமான விசயங்களுமல்ல. கேள்வி கேட்பது, வேறு கருத்தியல்களை, போக்குகளை, விளக்கமளிப்பு முறைகளை, பண்பாட்டுப்பார்வைகளை உதாரணம் காட்டிப்பேசுவது ஏகாதிபத்தியப்பார்வையாகவே பார்க்கப்படும் என்பதில் ஐயம் இல்லை. இதற்கு இருப்புக்குறித்த பிரச்சனையே அன்றி வேறேதும் காரணமல்ல.

ஈழத்தில் ஒரு காலத்தில் பிறவற்றுக்கு முந்தியதாக இருப்பை, பாதுகாப்புணர்வை உணர்ந்து அனுபவித்தவர்கள் இதே போன்ற அனுபவத்தை மார்க்ஸியர்களுக்கும் கொடுத்துள்ளார்கள்.

காங்கேசன்துறைத்தொகுதியில் செல்வநாயகத்தை எதிர்த்துப்போட்டியிட்ட கம்யூனிஸ்ட் வேட்பாளரின் ஆதரவாளர் "கம்யூனிஸ்ட் பொச்சா, உன் சேட்டைகள் அனைத்தும் அச்சா, தமிழ் மாணவரில் கைவைச்சா, தப்பாதுன் தலை இனியும்" என்று தமிழுணர்வாளரால் அடுக்குமொழி வரவேற்பு வழங்கப்பட்டார். இதுபோல இன்னும் பல உதாரணங்கள் காட்டிக்கொண்டே போகலாம். அதேவேளை இந்தக் கம்யூனிஸ்ட் கட்சிகளின் தீவிர போலித் தன்மை குறித்தும், செயல்பாடு குறித்தும், அனைவருக்கும் தெளிவுதான். மார்க்ஸியர்கள் குறித்தும் தெளிவுக்காக ஒரு குட்டிக்கதை-துணுக்கு சொல்லி வைப்பது நல்லது. ரஷ்யாவில் அந்தக் காலத்தில் வழங்கப்பட்ட கேள்விகள்: மார்க்ஸியர்கள் யார்? மார்க் ஸிய நூல்களை வாசிப்பவர்கள், மார்க்ஸியத்தை எதிர்ப்பவர்கள் யார்? மார்க்ஸியத்தைப் புரிந்துகொண்டவர்கள்.

ஆளுமையை நிர்ணயிப்பதாக உளவியலால் சொல்லப்பட்ட, பாதுகாப்புணர்வையும் அதனால் இருத்தலையும் தருவதான சமயமும், மார்க்ஸியமும் கூட உண்மையில் ஒருவரைப் பயமுறுத்துதலின் வழியாக பாதுகாப்புணர்வின் தேவைக்குத் தள்ளிவிட்டு பின்னர் அதைத் தருகின்றன. சமயம் தன் பாது காப்புணர்வின் திறத்தைக் காட்டுவதற்கு 2000ம் ஆண்டில் உலகை அழிக்கவிருக்கிறது. அல்லது அதற்கு அடுத்த ஆண்டில் கிறீஸ்துவை வரவழைத்து அனைத்துப்பேரையும் அழித்து, பாவிகளைக் கொன்றொழித்து நித்திய ஜீவவாழ்வை ஒரு சிலருக்கு மட்டுமே தரவிருக்கிறது. அந்த ஒரு சிலரில் நீங்களும் சேரவேண்டாமா? உலகின் முடிவில், இறுதிநாளில், கர்த்தரின் முகமுகமான தரிசனத்தின்போது ரட்சிக்கப்பட சகோதரனே, சகோதரியே யேசுவினை ஏற்பாய். இந்தப்பயம் உங்களிடம் எடுபட்டால் நீங்களும் ஆவிக்குரிய சபை ஊழியர்தாம்.

எந்தச் சமயமென்றாலும் இப்படித்தான். மரணத்தின் பின் ஸொர்க்கம் வேணுமா? கொஞ்சம் ஒழுங்காக வாழ். ஒழுங்காக வாழ வழிமுறை இருக்கு. அவனவன் தேவை அவனுக்கு; கர்மா. அவனவன் ஜாதி அவனுக்கு. வேலை ஒழுங்காய் நடந்தால் ஸொர்க்கம். இல்லையேல் கல், பூண்டு, புல், மரம் இன்னபிற ஏழுபிறப்பு.

**ஆளுமையை நிர்ணயிப்பதாக உளவியலால் சொல்லப்பட்ட, பாதுகாப்புணர்வையும் அதனால் இருத்தலையும் தருவதான சமயமும், மார்க்ஸியமும்கூட உண்மையில் ஒருவரைப் பயமுறுத்துதலின் வழியாக பாதுகாப்புணர்வின் தேவைக்குத் தள்ளிவிட்டு பின்னர் அதைத் தருகின்றன.**

இதற்குச் சற்றும் குறைவில்லாதபடி மார்க்ஸியக் கட்சிகளின் தே(ை)வஊழியர்கள் வருவார்கள். தோழரே (No தோழி please) இன்றைக்கு உலக நடப்பைப் பாருங்கள். உலகின் பொருளாதார வீழ்ச்சி என்ன சொல்கிறது. வரலாறு நமக்குக் காட்டுவது என்னவாக இருக்கின்றது. அது முதலாளித்துவத்தின் நெருக்கடிகளின் அறிகுறியும் அதன் சீர்குலைவுக்குமான சுக்குரலுமேயில்லாமல் வேறொன்றுமில்லை என்பதையே நமக்குத் தரப்பட்ட வழிகாட்டுதல்கள் உணர்த்தி நிற்கின்றனவேயல்லாமல்... (மூச்! விளங்குகிறது) நாளையே போர் வரலாம். அதற்கான முஸ்தீபுகள் நடக்கிறது. இன்னபிற. நீங்கள் வாய்பிளந்து ஆ!

மனிதனுக்கு பொதுவாய் ஒரு பயம் இருக்கிறது; மரணபயம். மேற்சொன்னவர்களின் ஆயுதம் அதைத் தூண்டிவிடுவதுதான். மரணபயம் உச்சத் துக்குப் போனால் தானாய் சரணடைய வைக்கலாம் என்பது தந்திரம். நானும் ஒருதரம் ஓர் சாதாரண மனி தனிடம் இவர்களிடம் கற்ற பாடத்தை அப்படியே விளையாடிப் பார்த்தேன். சும்மா எதுக்கும் ஆள் சேர்க்காமல்-பொதுவாய். கேஸ் எல்லாம் எழுதி, மொழிபெயர்த்து, தரகு வேலைபார்த்து, இரண்டு மூன்று வேலை பார்த்து சேர்த்த பாரிஸ் சொந்தவீடு. (எனக்கு கொஞ்சம் பொறாமை) "பார்த்தியளே இப்ப ஈராக் சண்டை உலகப்போராய் வந்திருக்கவேண்டியது, தட்டிப்போச்சு. அடுத்தது வந்தால் அநேகம் யூரோ (Euro) Vs அமெரிக்காதான். எங்கடையள் விசயம் தெரியாமல் லாச்சப்பலிலை[2] கடையளும் இந்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாவிலை வீடுமெண்டு. போர் வந்தா என்ன நடக்கும் தெரியுமோ. ஒரு சொத்தும் பெறுமதியில்லாமல் போய்விடும். பாங்கில போட்ட காசெல்லாம் பாங்க் திவாலாகி அம்போதான். கண்ணுக்கு முன்னால பாத்தனியள்தானே இந்தோனேசியா காசுமதிப்பு எப்பிடி விழுந்ததெண்டு" இதைக்கேட்டு அவருக்கு வேர்த்து விறுவிறுத்துப்போய்விட்டது. ஒரு சின்ன 'உரைக்கே' இப்படிப் பயமாக்கலாம் என்றால், தொடர்ந்த தாக்குதல்களில் எப்படி என்பது வெள்ளிடை. அது நடந்தால் ஆள் சரண்.

இப்படிப் பார்த்தால் எதுக்கும் எதுவும் குறைந்ததில்லைத்தான். 'நமது வரலாற்று நாயகர்களின் அந்தக்கால இந்தவித நடைமுறைகள் இவற்றிலிருந்து பெரிதும் வேறுபட்டதாயும், இன்றுதான் மாறிவிட்டது என்றுகூட இல்லை என்பதுதான் வருந்தத்தக்க விசயம். வாசிப்பின்போது தற்செயலாக கண்ணில் விழுந்த 'முற்போக்கு இலக்கியம்' பற்றிய மு.தளைய சிங்கத்தின் கட்டுரையிலும் இது வந்து விழுந்திருக்கிறது. "கட்சி ஏதாவது ஒரு படிக்கட்டில் கூடாரம் அடித்துக்கொண்டு குந்திவிடுகிறது. அதைமீறி வருபவர்களுக்கு அங்கு இடமில்லை. அதைப் பொறுத்தவரை யேசு அல்லது மார்க்ஸோடு மனிதவளர்ச்சி முற்றுப்பெற்றுவிடுகிறது. எல்லாவற்றையும் பைபிளிலேயே பார்க்கலாம் என்று சொல்லும் ஜெகோவாவின் சாட்சிகளும் எல்லாவற்றையுமே மார்க்ஸிடமே கேட்கலாம் என்று நினைக்கும் சோசலிஸ்ட் யதார்த்தவாதிகளும் அப்படி ஒருநிலையில்தான் இருக்கிறார்கள்."[3] ஆக, காலாகாலத்துக்கும் இப்படித்தான் என்ற நிலையாகிறது. இந்தநிலையில் நின்று விமர்சித்த தளையசிங்கம்கூட பின்னால் ஆன்மீகப் பெருகக்கடல் நீந்திய தேடல் தனிக்கதை.

இவ்வாறிருக்க, இந்த விடாக்கண்டர்கள் கொடாக்கண்டர்கள், கண்ணாடி போட்டவர்கள், கண்ணையே மாற்றியவர்கள் எல்லாருக்கும் நடுவில் புதிதான விசயங்களைப் பேச வருவதற்குப் பயமாக உள்ளதென்பதே நிலை. பிறரைப்பேச விடுவதற்குப் பயமாக உள்ளது. இதில் அனைத்திலும் அனைத்தும் இருக்காது என்பதை உணர்ந்த சிலர் இருப்பதாலும் 'ஆறுதல்'. கட்சியை வளர்ப்பதற்கு, கோட்பாடுகளைப் பெறுவதற்கு, மேற்குநாடுகளின் சிந்தனை மரபை உள்வாங்குவதற்குத் தயங்காததுபோலவே, கோட்பாட்டு நிலைகளை அணுகவும் புதிய விளக்கமளிப்பு முறைகளை, செயற்பாடுகளை எதிர்கொண்டு விமர்சிக்கவும் ஏன் அதே மரபினைப் பின்பற்றவோ, கண்கொண்டு பார்க்கவோ மாட்டார்கள் என்பதே ஆச்சரியமான விண்டயற்ற கேள்வியாக இருக்கிறது.

உலகின் தலைசிறந்த, தற்கால, சமகால, மார்க்ஸிய விமர்சகர்கள் மூவர். அதிலே ஒருவர்தான் பின்வரும் மேற்கோளைக் கூறியவர்.

"இந்தவகையான பிற(ஆய்வு) முறைகளிற்கு ஒரே பதிலீடாக இருக்கும் என்று மார்க்ஸியம் இன்று தன்னைப் பாதுகாத்துக்கொள்ளமுடியாது. அதே வேளை இம்முறைகளின் நிர்ணயம் காளான்களாக முளைவிடும் பண்பாட்டு மேற்கட்டுமானத்தின் ஏதோ ஓர் சிக்கலான உபஒழுங்கமைவினுடைய, ஏதோ ஓர் துண்டுபட்ட சமூகவாழ்வினுடைய உள்ளார்ந்த விதிகளின் பிரமாணிக்கமான குரலாகவே இருக்கின்றன. இவை பின்னர் வெற்றிகரமாக வரலாற்றினுடைய குப்பைக்கூடைக்குள் அனுப்பப்பட்டுவிடும்."[4] என்பது ஓர் தெளிவான, மார்க்ஸியத்தைப் புரிந்துகொண்டவரின், தான் கைக்கொள்ளும் கோட்பாட்டுநடைமுறையின் விளக்கமளிப்புத்திறனை சுயபரிசீலனையோடு, பிற விளக்கமளிப்பு முறைகளையும் எதிர்கொண்டு வாதிடும் தளம்பலற்ற கூற்றாகும். இவர் மார்க்ஸியத்தை நம்பியவராகத் தெரியவில்லை. அதேவேளை மார்க்ஸியத்தைப் புரிந்துகொண்டவராகவே இருக்கிறார்.

கட்டுரை எழுதிக்கொண்டிருக்கும்போது வெளிவந்த அருந்ததியனின் 'தலித்தியக் குறிப்பும்'[5] கூட இக்கட்டுரையின் ஒரு பகுதிக்குச் சான்றாக வந்தது தற்செயலானதா அல்லது வரலாற்று நிகழ்வுகளின் ஒன்றிணைவா என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்க அதேவேளை, வரலாறு 'நகராமல்' விட்டதோ என்று ஐயங்கொள்ளுமாறு தளையசிங்கம் காலத்திலிருந்து (அது (19)70கள் என்று கொண்டால்) இற்றைநாட்கள் வரைக்கும் எமது சூழல் மாறவில்லையா?

நமது தமிழிலக்கியம் இத்துடன் தவிர்க்கமுடியாதபடிக்குப் பிணைந்துவிட்ட 'அரசியல்', இவ்விரண்டின் இணைப்பினாலும் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படவேண்டிய மூலாதாரமான தத்துவம் என்பவற்றின் கூட்டிணைவாக கைக்கொள்ளவேண்டிய விளக்கமளிப்புமுறைகள், நடைமுறைகளின் விளக்கமளிப்புக்கள், பனுவல்கள் மீதான விளக்கமளிப்புக்கள் என்பவற்றை, நாம் நமக்கேயாக வகுத்துக்கொள்ளவேண்டிய நிலையொன்று உருவாகியிருக்கின்றதா? அல்லது நமக்கு வெளியே இருந்து வரலாற்று, நிலவியல், புவியரசியல் நிலைமைகளினால் நம்மீது விட்டெறியப்படும் 'சத்தாம்சமான', 'மிகுமுகம்' கொண்ட அனைத்துமுறைமைகளையும் 'நம்பிக்கையின்' அடிப்படையில் ஏற்றுக்கொள்ள வேண்டுமா? 'பிற' சமூக, பண்பாட்டுப் புலங்கள் தங்களுக்கானதை தாங்களே தெரிந்துகொள்வது இயல்பானதும், சரியானதும், கண்கூடானதுமாக இருக்கும் இன்றைய நேரப்புலங்களில் நாம் நம்மிடையே முகிழ்ப்பவற்றுக்காகத் தேடுவதா? காத்திருப்பதா? முனைவதா? என்பதையே நமது அன்றாடப் பிரச்சனைகள் குறித்தவை தவிர்த்து, இன்று முதற் கேள்வியாகக் கொள்ளமுடியும். ■

---

*2. லாச்சப்பல் : பரிஸில் உள்ள தமிழர்கள் கடைகள் நிறைந்த பகுதி.*

*3. மு. தளையசிங்கம், முற்போக்கு இலக்கியம் (சென்னை: க்ரியா, 1984) ப.18*

4. FREDRIL Jameson, The Political unconscious (London: Routledge, 1981) p.10

*5. அருந்ததியன், 'தலித்தியக் குறிப்புக்கள்', 'சரிநிகர்' 141 (1998)*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# சலிப்பு



எனது கால்கள் நடக்கச் சிரமப்படுகின்றன. உடலோ மிகவும் பாரமாக. இடங்கள் யாவும் மங்கல்களாகி என்னை மிரட்டுகின்றன. திறந்த புத்தகத்தின் மீது தூசிப்படலம். எழுத்துகளைத் துடைக்கவும் சிரமம். பேனா காய்ந்து பல வருடங்கள். அதனைக் கழுவி புதுமை விடுவதற்கோ எத்தனங்கள் எதுவுமே எனக்குள் இல்லை. கான மயில் தூரத்தில். மிகவும் தூரத்தில் எனது பார்வைக்கு எட்டாத் தூரத்தில். வான்கோழிகளோ அருகில். இவைகளும், இவைகளது நடனங்களும். நானும் எனது நடையும். எனது தனிமைப் பயணம் மௌனமானது, மெதுவானது.

நிரந்தரமாக என்னைத் துரத்தும், அத்தோடு நானாகவே மாறி விட்ட சலிப்பிலிருந்து சற்றே வெளியேறிப் போனைத் தூக்கி இலக்கங்களைச் சுழட்டுகின்றேன். முதலாவது இலக்கமே பூச்சியம். அதன்பின் வேறு இலக்கங்கள்.

"வணக்கம். தொழிலுக்கான தேசிய இலாகாவில் நீங்கள் பதிவு செய்த விளம்பரத்துக்காக உங்களைத் தொடர்பு கொள்கிறேன். கடந்த பத்துவருடங்களாகக் கோப்பைகள் கழுவுவதிலே எனக்கு அனுபவம் உண்டு."

"மன்னிக்கவும்! இந்தப் போஸ்ட்டுக்காக நாங்கள் வேறு ஒருவரை எடுத்துவிட்டோம்..."

முதலாவது தடவையாகவா இந்தப் பதிலைக் கேட்கின்றேன். கேட்டுக் கேட்டு மனது உண்மையிலேயே சலித்து விட்டது.

ஒரு காலத்திலே நாளை என்னை அச்சுறுத்தும் ஒன்றாக இருந்தது. அவநம்பிக்கைகள் தந்த ஒத்தடங்களால் இந்த நாளைகள் தரும் அச்சுறுத்தல்கள் எனக்கு மரத்துப் போய் விட்டன. நான் ஓடமாட்டேன், அதுவும் மெதுவாக. புதிய காலங்களின் சட்டங்களோடு ஒத்தூதல் எனது மதம் அல்ல.

புதிதும், புதியகாலங்களும். "மனிதம் அழிகின்றது, உனக்கேன் கவிதை?" என்று கேட்ட எனது நண்பன் தூங்கிச் செத்தபோது நான் அழவில்லை. எமது விழிகளின் கண்ணீர்களும், எமது உயிரின் கவிதைகளும் திருடப் பட்டுவிட்டன.

"எனது காதலியே!
நீ அழ வேண்டாம்.
இது இயந்திர உலகு...
கனவுகள் காணாதே,
இவைகளைத் தாக்கவும்
உனக்கு மயானம் இல்லை..."


நண்பன் எழுதிய கடைசிக் கவிதை வரிகள். இவனது காதலியை நான் ஒருபோதுமே கண்டதில்லை. காதலியா? அல்லது கனவுக் காதலியா? அவனை நான் கடைசித் தடைவையாக பாரிஸ் லக்ஸ்ஸம்பேர்க் பூங்காவிற்குள் கண்டேன். உடைகள் கசங்கியிருந்தன. விழிகளோ எதனையும் பார்ப்பதற்கு விருப்பமில்லாதது போல. என்னைக் கண்டது போலவும் காட்டிக் கொள்ளாமல் "8-6"பியரைக் குடித்துக் கொண்டிருந்தான். நான் அழைத்ததைக் கேட்டபின்தான் அவனது முகம் என்னை நோக்கித் திரும்பியது. எந்த அர்த்தங்களையும், விருப்பையும் காட்டிக் கொள்ளாத முகம்.

"10 பிராங் இருந்தாத் தா!"

நான் கொடுக்கின்றேன்.

"இந்த வாங்கிலை இரு நான் உடனை வந்துவிடுவன்."

அவனுடைய நடை அவனு






www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"எனது காலங்களே
உனது காலங்கள்
உனது காலங்களோ
எனது காலங்கள்
எமது காலங்களோ
எமது கைகளில் இல்லை
கனவுகள் புள்ளிகளாகி
மறைகின்றன...
நீரும் நிலவும் எங்களை
ஏங்குகின்றன."

டைய உள,உடலத் தளர்ச்சியை எனக்குக் காட்டுகின்றன. அவன் மாறிவிட்டான் என்றும் அல்லது மாறவில்லை என்றும் சொல்லிக் கொள்ளலாம். 10 வருடங்களின் முன்னர்தான், ஓர்நூலகத்தில் அவனை நான் முதல் தடவையாகக் கண்டேன். அவனது மனம் இலக்கியத்தால் கபளீகரம் செய்யப்பட்டது என்பதை ஊகிக்க எனக்குப் பல நிமிடங்கள் எடுக்கவில்லை. சம்பாஷனையின்போது 'வேலை' பற்றிக் கேட்டபோது "இரண்டு மணித்தியாலம் பீரோக் கிளினிங் செய்யிறன்." என்று சொல்லிக் கொண்டான்.

அன்றிலிருந்து இரண்டு, மூன்று,நான்கு மணித்தியாலங்களுக்குள் வாழும் மனிதனாகவே அவன். இவன் தனது தொழில் அனுபவங்களை எனக்குச் சொன்னதுண்டு. "எனது இயக்கம் என்ரை கனவுகளுக்கைதான் இருக்கு." எனப் பலதடவைகள் என்னிடம் அவன் சொல்லியுள்ளான். ஆனால் தனது காதலி பற்றிச் சிலதடவைகள் மட்டுமே.

"உன்ரை காதலியும் உன்னைப்போல கனவுகளுக்கைதான் தன்ரை இயக்கத்தை வைச்சிருக்கிறாளா?" என ஒருதடவை நான் கேட்டேன்.

"அவளின்ரை கனவுகளும் என்ரை கனவுகளைப் போல கருகிக் கொண்டிருக்கும் எண்டு நான் நம்புறன்."

10 பிராங்குடன் போனவன் ஓர் "8-6" உடன் திரும்பி வருகிறான். பியர்ரின் மிகவும் மெதுவாக உடைக்கப்படுகிறது.

"நீ கொஞ்சம் குடிக்கப் போறியா?"

"எனக்குப் பெரிசாத் தாக மெண்டில்லைத்தான். ஆனால் கொஞ்சம் எடுக்கிறன்" என்றபடி ஒரு மிடறை உறிஞ்சுகிறேன். கசப்பாக இருந்தது.

"உனக்கு ஒரு நல்ல சேதி சொல்லப்போறன்." என்று சொல்கின்றான்.

"சொல்"

"என்ரை காதலியும் நானும் சேர்ந்து வாழப்போறம்."

"வாழ்த்துக்கள்"

"நன்றி"

"தனிமை வாழ்க்கை உண்மையிலேயே மோசமானது."

"சேர்ந்து வாழுதலும் ஒரு பார்வையிலே மோசமானதுதான்..."

"அப்ப நீ ஏன் சேர்ந்து வாழ முடிவெடுத்தனி?"

"எனக்கு இதைவிட வேற சொய்ஸ் எதுவும் கிடைக்கேல்லை..."

"உன்ரை காதல் போலியானதா?"

"இல்லை சுத்தமானது!"

"அப்படியெண்டா ஏன் இந்தச் சஞ்சலம்?"

"இந்தக் கேள்வியின்ரை விடையை நீ ஒருநாள் தெரிஞ்சு கொள்வாய்..."

பியரைக் குடித்தபடி கவிதைகள் பற்றிப் பேசுகின்றான். அவனது கடைசிக் கவிதைகள் சில எனது பார்வைக்குள் கிடைக்கின்றன. எந்தக் குறிப்புகளையும் சொல்லாமல் வாசித்தபின்னர் கவிதைகளை அவனிடம் கொடுக்கின்றேன்.

"நான் தனிய இருக்க விரும்புகின்றேன்."

அவன் தூங்கிச் செத்த விஷயம் எனக்குப் பிந்தியே கிடைத்தது. நான் இதற்காக வருந்தவும் இல்லை,காரணங்களைத் தேடவும் இல்லை. இது பற்றி வேறு எவராவது வருந்தினரா, காரணங்களைத் தேடினரா என்பதுவும் எனக்குத் தெரியாது. வாழ்வின் பல பக்கங்கள் மர்மமானவை. இந்தப் பக்கங்களை வாசிக்க வேண்டும், விளங்க வேண்டும் என்கின்ற எந்த முனைப்புகளுமே எனக்குள் இல்லை. என்னை அணைப்பது சலிப்பு மட்டுமே. எனது பிரார்த்தனை - இது ஒரு வேளை வெளிச்சமில்லாத உலகா?

எனது ஹான்ட் போன் அலறுகின்றது.

"ஒரு வேலையொண்டு இருக்கு. உடனடியா இந்த நம்பரை எழுதும். உடனடியா இதுக்கு அடியும்..."

இன்னொரு நண்பர். நான் நன்றி சொல்ல முன்னரேயே தொடர்புகட் ஆகின்றது. குரலின் அவதியையும், அவர் அந்தக் கணத்தில் எங்கேயிருந்து அடித்தார் என்பதையும் சில சத்தங்களுக்கூடாக ஊகித்துக் கொண்டேன். அவர் ஓட விரும்பாதவர். ஆனால் ஓடும் உலகத்துக்குள்.

தொடர்பு கட் பண்ணப்பட்ட பின்னர்தான் என்ன வேலையைக் கேட்டு அவர் தந்த இலக்கத்திற்கு நான் போன் பண்ணவேண்டும் என்பதைக் கேட்காது விட்டது நினைவுக்கு வந்தது. இது தொடர்பாக நான் அலட்டிக் கொள்ளவில்லை. முன்பும் பல தடவைகள் அவர் எனக்கு இலக்கங்கள் தந்துள்ளார். றெஸ்ரோரன்ட் வேலை இலக்கங்களே. நான் அவைகளுக்கு அடித்ததில்லை. அவர் மீளவும் அடித்துக் கேட்டால் "அடித்தேன், ஒருவரை ஏற்கனவே எடுத்திட்டினம் எண்டு பதில் கிடைச்சது." என்று சொல்லிக்கொள்வேன். எனது மொழிகளை அவர் நம்பினாரா என்பது எனக்குத் தெரியாது.

ஆனால் இந்தத் தடவையோ நான் அடித்தேன். காரணம்: இரண்டு மாத வீட்டு வாடகை, இரண்டு மாத மின்சார பில், ஹான்ட் போன் பில் இவைகளைக் கட்டாது விட்டால்... நிச்சயமாக நான் வெளியே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மணி அடித்தது. தொடர்பு கிடைத்தது. நான் "ஹலோ" சொல்ல முன்பே ஒருபெண்ணின் குரல்.

"ம்! ம்! எனது உடல் மிகவும் சூடாகவுள்ளது. நான் மிகவும் செக்ஸியானவள். எனது உதடு களைக் கண்டால் உங்களுக்குத் தாகம் வந்துவிடும். உங்களது காமத் தேவைகள் அனைத்தை யும் நீங்கள் என்னுடன் தீர்த்துக் கொள்ளலாம். எனது வயது 22. கூந்தலின் நிறம் பிறவுண். எனது நிறை 47 கிலோ. என்னுடன் தொ டர்பு கொள்ள இரவு 8மணிக்குப் பின்னர் அடிக்கவும்."

போனில் என்னுடன் பேசியது பதிவு நாடாவே. இலக்கத்தை தவறுதலாக கொம்போஸ் பண் ணிவிட்டேன் போலும் என நினை த்து மீண்டும் அடிக்கின்றேன். திரும்பவும் பதிவு நாடாவே பேசு கின்றது. மனது சலித்து உடல் முழுதும் ஒருவித களைப்பு. வேலைதேடும் இலாகாவுக்குப் போவதில் உள்ள சிறிய முனை ப்பும் உடைந்து நொருங்குவது போல ஓர் பிரமை. போர்வையால் உடல் முழுவதையும் மூடித் தூங்க வெளிக்கிடுகின்றேன். தூக்கம் வர மறுக்கின்றது. ஏன் அசைதல் வேண்டும் என்ற ஒரே யொரு கேள்விமட்டுமே எனக்குள்.

கதவு தட்டப் படுகின்றது. பொல்லாந்தடி கொண்டு யாரோ தலையில் ஓங்கி அடிப்பது. எழு ந்து கதவுவரை போகவோ, யார் தட்டுவது என்பதை அறியவோ மறுக்கின்றது மனம். கதவு மீண் டும் தட்டப்படுகின்றது. மிகவும் சிரமப்பட்டு கதவைத் திறக்கின் றேன்.

இலக்கம் தந்த நண்பர் கத வின் முன்னே. "அடிச்சனியோ?" கேட்கின்றான்.

"ஓம்"

"வேலை கிடைச்சிட்டுதோ?"

"வேலை இல்லையாம்..."

"அடுத்தகிழமை ஒரு வக்க ன்ஸ் வேலை கிடைக்கும். செய் வீரோ?"

"இல்லை" என்றால் கோபித்து விடுவாரோஎனப் பயந்து "ஓம்"என் கின்றேன். பின்னர் அவர் வேறு சமாச்சாரங்களை என்னுடன் கதைக்க வெளிக்கிடுகின்றார்.

"பியர் ரின்னோடை திரியிற உன்ரை பிறண்ட் ஏன் தற்கொலை செய்தவனெண்டு உனக்குத் தெரி யுமா?" எனத் தொடங்குகின்றான்.

"அவன்ரை தற்கொலைக் கான காரணங்களை நான் தேட வெளிக்கிடேல்லை ஏனென்டா என்ரை தேடல்கள் ஊகிப்பாக மட்டுமே இருக்கும். ஊகிப்புகள் உண்மைகளாக இருக்கலாம் எண்டு அடிச்சுச் சொல்லிற துணிச் சல் என்னிட்டை இல்லை."

"காதல் பிறேக் எண்டும், வேலை கிடைக்கேல்லை எண்ட தும் காரணமாக இருக்கலாம் எண்டு கதைக்கிறாங்கள்."

"இவைகள் ஊகிப்புகளே" எனச் சலிப்புடன் சொல்லிக் கொள்கிறேன்.

"அவன்ரை கவிதையள் புத் தகமா வரப்போகுதாம் எண்டு கேள்விப்பட்டனான். உன்னட்டை அவன்ரை கவிதையள் ஏதும் இருக்கோ?"

"கவிதைகளை அவன் காட் டேக்கை வாசிச்சிருக்கிறன். ஆனா ஒரு பிரதியுமே என்னிட்டை இல்லை..."

வக்கன்ஸ் வேலை செய்யும் றெஸ்ற்ரோறன்டினது முகவரி யைத் தந்துவிட்டு - கட்டாயம் போய்க் கதைக்கவேண்டும் என்ற எச்சரிக்கையையும் தந்தபின்னர் அவர் போகின்றார். நான் மீண்டும் போர்வைக்குள் தஞ்சமடைந்து கொள்கின்றேன்.

"எனது காலங்களே
உனது காலங்கள்
உனது காலங்களே
எனது காலங்கள்
எமது காலங்களோ எமது
கைகளில் இல்லை
கனவுகள் புள்ளிகளாகி
மறைகின்றன...
நீரும் நிலவும் எங்களை
ஏங்குகின்றன."

முதலாவது தொடர்புகளின் போது - அவன் காட்டிய கவிதைக ளில் ஒன்று என் முன் பளிச்சிடு கின்றது. அவன் அவநம்பிக்கை களை சுவாசித்தவன். அவனது முடிவின் காரணங்கள் மர்மமா னவை. இந்த மர்மத்தின் மூலங் களைத் தேட நினைத்தாலும் அவனது சுத்தத்தில் கரியைப் பூசிவிடும் என்று கருதியபடி தூங்க முயற்சிக்கின்றேன்.

எந்த எத்தனங்களும் இல் லாத ஓர் முயற்சி மட்டுமே. இன்று போல நாளையும் என் முன் மறை கின்றது. அவாக்கள் யாவும் நீறா கின்றன. ■


| | |
|---|---|
| இறைஞ்சிப் பெறுவதல்ல | உரிமை |
| உறிஞ்சப் படுவதற்கல்ல | உழைப்பு |
| ஒடுக்கப்படுவதல்ல | ஜனநாயகம் |
| ஒடுங்கியே வாழ்வதல்ல | சுதந்திரம் |
| கப்பம் செலுத்துவதல்ல | விடுதலை |
| காலனி என்பதல்ல | நாடு |
| கனவில் திளைப்பதல்ல | வாழ்வு |
| இறந்த பின்பல்ல | சொர்க்கம் |
| தண்டிப்பது மட்டுமல்ல | நீதி |
| வெறும் பிணங்கள் வாழ்வதல்ல | தேசம் |
| விரல் மைபூசிக் கொள்வதேயன்றி முகம் கரிபூசிக் கொள்வதல்ல | தேர்தல்! |

மேகவண்ணன்



தமிழத தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**மீரா முகர்ஜி**
சிற்பம் (செம்பு+பித்தளை 56x32cm)

'நன்றி' Expressions & Evocations
Contemporary Women Artists of India
Edited by Gayatri Sinha



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தென்னாசிய சமூகத்தில் பெண்நிலைவாதம்

தமிழில் : லசஷ்மி

பெண்ணிலைவாதத்தின் அடிப்படைகள் குறித்தும் தென்னாசிய சமூகத்தில் அதன் பொருத்தப்பாடு பற்றியும் கேள்வி-பதில் வடிவில் KAMLA BHASIN, NIGHAT SAID KHAN ஆகியோர் ஆங்கிலத்தில் வெளியிட்ட, Some Questions on Feminism and its Relevance in South Asia என்ற சிறுநூல் ஒரு தசாப்தத்திற்கு முன் வெளிவந்ததாயினும் இந்நூல் எழுப்பும் கேள்விகள் இன்றும் விடைகளைத் தேடிநிற்கின்றன. இந்நூலின் முக்கியமான சில பகுதிகளின் மொழிபெயர்ப்பு இங்கு இடம்பெறுகிறது. (மொ-ர்)



ஒடுக்குமுறைச்சட்டங்களுக்கு எதிராக ஈரானியப் பெண்கள்

'எங்களுடைய தேசத்தில் நாங்கள் நூற்றாண்டுக்கணக்கில் எவ்வளவோ துயரங்களை அனுபவித்திருக்கிறோம் எங்கள் சமூகத்தில் பெண்கள் ஹரியனர்களாக, தாழ்த்தப்பட்டவர்களாகவே கருதப்பட்டுவருகின்றனர்."

-பெண்கள் ஒடுக்குமுறைபற்றி இந்தத் தொனியிலேயே உரையாற்றிக்கொண்டிருக்கும் ஒருவர், பிறகு சற்று நிறுத்தி திட்டவட்டமாக அறிக்கையிடுவார், 'ஆனால் நான் ஒரு பெண்ணிலைவாதியில்லை' என்று.

இவ்வாறு பேசுபவர் ஒரு பெண் பிரதமராக, உயர் தொழில் அதிகாரியாக, அல்லது ஒரு கலைஞராகக் கூட இருக்கலாம். இவர்களெல்லாம் ஆண்களின் ஆதிக்க உலகில் தம் வாழ்நாளெல்லாம் போராடியிருக்கக்கூடிய துணிச்சலான பெண்களாகவும் இருந்திருப்பார்கள். ஆனால் இம்மாதிரிப் பெண்களிடமிருந்து, 'ஆனால், நான் ஒரு பெண்ணிலைவாதியல்ல' என்ற குரல் வரும்போது அதனைக் கேட்டு நாம் பெரும் வியப்பிற்குள்ளாகிப்போகிறோம். 'பெண்நிலைவாதி' என்றால் அவர்கள் என்ன கருதுகிறார்கள் என்று அவர்கள் தரப்போகும் விளக்கத்திற்காகக் காத்திருக்கிறோம். ஆனால் அதுபற்றி ஒரு விளக்கமும் அவர்களிடமிருந்து வருவதில்லை.

'நான் ஒரு பெண்ணிலைவாதியல்ல' என்று தீர்மா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னமாக அவர்கள் சொல்வதால் மட்டுமே அவர்கள் பெண்நிலைவாதிகளாக இல்லாமல் போய்விடமாட்டார்கள். ஆனால் இவ்வாறு கூறுவதன் விளக்கம் என்னவென்றால் அவ்வாறு ஒரு பெண்நிலைவாதியாக இருப்பது என்பது நல்ல விஷயமல்ல என்பதும், அவ்வாறு பெண்நிலைவாதியாக இருப்பவர்கள் தவறான வழிகாட்டலின் பேரிலும் அனாவசியமாவும் தான் அவ்வாறு உள்ளனர் என்பதும் தானாகும்.

இப்படியான வாக்குமூலங்களைக் கேட்கும் பொழுது ஆச்சரியப்படாமல் இருக்கமுடியாது. பெரும்பாலானோர் ஒரு விஷயத்தை முக்கியமானதாகக் கொள்ளும்பொழுது, ஏன் பொதுவாக அதை நிராகரிக்கவேண்டிய தேவையை உணருகின்றார்கள்? இதிலிருந்து நாங்கள் எப்படியான ஒரு முடிவுக்கு வரமுடியுமென்றால் அவர்களுக்கு பெண்நிலைவாதம் பற்றிச் சிந்திப்பதற்கு எதனையும் கொடுக்கவில்லை அல்லது அவர்கள் பெண்நிலைவாதிகளுக்கும் பெண்நிலைவாதத்திற்கும் எதிரான பொய்ப்பிரச்சாரங்கலைப் போதியளவு கிரகித்துக்கொண்டிருக்கின்றார்கள். உதாரணமாகப் பிரச்சார சாதனங்களை எடுத்துக்கொண்டால், பெருமளவு ஆண்களின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் இவைகள், பெண்நிலைவாதிகளைப்பற்றிய தவறான புரிதல்களிற்கு, அதாவது 'மார்புக்கச்சை எரிக்கும்' பெண்கள், 'ஆண்களை வெறுக்கும்' பெண்கள், 'குடும்பங்களைக் கலைக்கும்' பெண்கள் என்று, பாலம் வகுத்துக் கொடுக்கின்றன. இந்தப் பிரச்சாரமானது பெண்களின் விடுதலை அல்லது அவர்களின் அடிமைத்தளை நீக்கம் என்பதனை, ஏனைய குழுக்கள் அல்லது அமைப்புக்கள் ஒரு அச்சுறுத்தலாகப் பார்க்குமளவுக்கு வலுவாக்கப்படுகின்றது. இதன் விளைவாக எங்களுடைய நாடுகளில் உள்ள பெண்கள் தாக்கப்படுவதுடன் 'நடுத்தரவர்க்க', 'மேற்கத்தையமயமாக்கப்பட்ட', 'வேர்களற்ற' பெண்கள் என புறந்தள்ளப்படுகின்றார்கள்.

எப்படியிருப்பினும், தென்னாசியப் பெண்ணிலைவாதிகள் மார்புக் கச்சைகளை ஒருபோதும் அடையாளத்திற்காகக்கூட எரித்ததில்லை என்பது உண்மை. பெரும்பாலானவர்கள் திருமணமானவர்கள், குழந்தைகளைப் பெற்றவர்கள், தங்களுடைய குடும்பங்களை வேறு எந்த ஒரு சாதாரண பெண்ணும் மாதிரியே நன்றாகவோ அல்லது கூடாமலோ நடத்துகிறவர்கள். இப்போது கேள்வி என்னவென்றால், இந்தப் பெண்நிலைவாதிகள் ஏன் இவ்வளவு தாக்குதல்களிற்கு உள்ளாகின்றார்கள்? பெண்நிலைவாதம் ஏன் பெரும்பாலும் தவறாக விளங்கிக் கொள்ளப்படுகின்றது? என்பதுதான். ஆயினும் சிலர் பெண்நிலைவாதம் என்றால் உண்மையில் என்ன, பெண்நிலைவாதிகள் என்ன செய்வதற்கு முயற்சிக்கிறார்கள் என்பதுபற்றி அறிந்துகொள்ள விழைகிறார்கள் என்று நாங்கள் நம்புகின்றோம். இது பெண்நிலைவாதம் சம்பந்தமாக எழுப்பப்படும் சில பொதுவான கேள்விகளுக்கும் சந்தேகங்களிற்கும் விடையளிப்பதாகவும், சில தவறான அர்த்தப்படுத்தல்களை நிவர்த்திசெய்வதற்கும் உதவும் என்பதற்கான ஒரு சிறு முயற்சியாகும்.

### ● எனவே, பெண்நிலைவாதம் என்றால் என்ன?

❑ மற்றைய பலவிதமான 'இசம்'களைப் போன்று, பெண்நிலைவாதமும் தன்னுடைய சித்தாந்த அல்லது கருத்துத் தளத்தை ஏதாவது ஒரு தனி சித்தாந்த/கோட்பாட்டுச் சூத்திரமாக்கலில் இருந்து பெறவில்லை. எனவே இங்கு பெண்நிலைவாதத்திற்கு எல்லாக் காலங்களிலும், எல்லாப் பெண்களுக்கும் பொருத்தமான தனித்துவமாகப் பிரித்தெடுக்கக் கூடிய வரைவிலக்கணம் இல்லை. எனவே இந்த வரைவிலக்கணம் மாறமுடியும்/மாறும். ஏனெனில் பெண்நிலைவாதமானது வரலாற்றுரீதியான, கலாச்சாரரீதியான இறுக்கமான யதார்த்தங்களிலும் பிரக்ஞை மட்டங்கள், மனத்தோற்றங்கள், நடவடிக்கைகள் என்பவற்றிலும் தங்கியுள்ளது. இது எதைக் கருதுகிறது என்றால், பெண்நிலைவாதம் 17ம் நூற்றாண்டில் (முதன்முதலாக இந்தச் சொல் பாவிக்கப் பட்டபொழுது) ஒரு கருத்தைக் கொண்டிருந்தது. 1980களில் முற்றிலும் வேறான ஒரு கருத்தைக் கொண்டிருக்கிறது. உலகின் வெவ்வேறு பாகங்களிலும் ஒரு தேசத்திற்குள்ளேயும் வெவ்வேறு பெண்களினால் வெவ்வேறு மாதிரியாக அவர்களுடைய வர்க்கப் பின்னணி, கல்வித்தரம், பிரக்ஞை இத்தியாதி என்பவற்றிற்கமைய பெண்நிலைவாதமானது கைக்கொள்ளப்படமுடியும். மேலும் ஒரேவகையான பெண்களுக்கிடையில்கூட பெண்நிலைவாதச் சிந்தனைகுறித்து வித்தியாசமான ஓட்டங்களும் வேறுபட்ட விவாதங்களும், குறிப்பாக தந்தைவழி சமூகம் அல்லது ஆணாதிக்கம் தொடர்பான காரணங்கள் (அ+து வரலாற்று மூலங்கள்), வர்க்கம், சாதி, இனம், பால்சார்பு இவைகளிலிருந்து விடுபட்ட சுரண்டலில்லாத சமூகத்திற்கான பெண்களின் போராட்டத்தின் இறுதித் தீர்வு என்பவற்றைப் பொறுத்து இருக்கும். இருந்தபோதிலும் இன்று எங்களிற்கான பெண்நிலைவாதத்தின் விரிந்த வரைவிலக்கணம்: 'சமூகத்தில், வேலையில், குடும்பத்தில் நிலவும் பெண்களின் மீதான ஒடுக்குமுறை, சுரண்டல் என்பவற்றின் மீதான

> பெண்நிலை வாதத்தின் விரிந்த வரைவிலக்கணம்: சமூகத்தில், வேலையில், குடும்பத்தில் நிலவும் பெண்களின் மீதான ஒடுக்குமுறை, சுரண்டல் என்பவற்றின்மீதான அக்கறையும் இந்த நிலையை மாற்றுவதற்கு பெண்களினாலும் ஆண்களினாலும் மேற்கொள்ளப்படும் பிரக்ஞாபூர்வமான நடவடிக்கைகள்ஸி என்பதாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**'பெண்நிலைவாதம்' என்னும் சொல் ஒருவேளை எங்களுக்கு அந்நியமாக இருக்கும்பொழுது, இந்தக் கொள்கை அல்லது கருத்து நிலை ஒரு மாற்றத்திற்கான செயன்முறையை வேண்டி நிற்கின்றது.**

அக்கறையும் இந்த நிலையை மாற்றுவதற்கு பெண்களினாலும் ஆண்களினாலும் மேற்கொள்ளப்படும் பிரக்ஞாபூர்வமான நடவடிக்கைகள்' என்பதாகும். (அண்மையில் நடந்த தென்னாசியப் பட்டறை ஒன்றில் பங்குகொண்ட பங்களாதேஷ், இந்தியா, நேபாளம், பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த பெண்கள்.ஏற்றுக்கொண்ட வரைவு)

இந்த வரைவிலக்கணத்தின்படி, சமூகத்தில் நிலவும் பால் அடிப்படையிலான ஒடுக்குதல், ஆணாதிக்கம், தந்தைவழி சமூகம் என்பவற்றின் இருப்பைக் கண்டுகொண்டு, இவற்றிற்கு எதிரான ஏதாவது நடவடிக்கைகளில் ஈடுபடும் ஒருவர் பெண்நிலைவாதி ஆவார். இந்த வரைவிலக்கணத்திலிருந்து துல்லியமாகத் தெரிவது என்னவென்றால், பால் அடிப்படையிலான ஒடுக்குதலைக் கண்டுகொள்வதுடன் மட்டும் நின்றுகொள்ளாது ஆணாதிக்கத்திற்கு சவாலான நடவடிக்கைகளிலும் ஒருத்தி/ஒருவன் ஈடுபடவேண்டும். ஆனால் இந்த நடவடிக்கை எந்த வடிவத்தையும் எடுக்கமுடியும். உதாரணத்திற்கு, ஒரு பெண், பெண்நிலைவாதச் செயற்பாடுகளாக அவள் கல்வி கற்பதற்கு, ஒரு தொழிலைத் தொடர்ந்து செய்வதற்கு, பர்தா போடுவதற்குத் தனது எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கு, குழந்தை பெறாமலிருக்க முடிவு செய்வதற்கு முனைதல் , அந்த முடிவுகள் இழிவுபடுத்தப்படக்கூடாது. இப்படியான செயற்பாடுகள் ஒழுங்குபடுத்தப்பட்ட போராட்டங்களோடு ஒத்ததாகும்.

வேறுவிதமாகக் கூறினால், ஒருத்தி/ஒருவன் பெண்நிலைவாதியாக இருப்பதற்கு ஒரு குழுவில் அல்லது ஒரு அமைப்பில் அங்கம் வகிக்கவேண்டிய அவசியமில்லை. இருந்தாலும் எதையாவது காத்திரமாகச் செய்வதற்கு ஒரு குழுவில்/அமைப்பில் இருத்தல் நன்று.

இன்றைய பெண்நிலைவாதிகளுக்கும் முன்னைய பெண்நிலைவாதிகளுக்கும் இடையில் உள்ள முக்கியமான வித்தியாசம் என்னவென்றால், ஆரம்பத்தில் போராட்டமானது பெண்களின் ஜனநாயக உரிமைகளிற்கானதாக இருந்தது. அது பெண்களின் படிப்புரிமை, தொழிலுரிமை, சொத்துரிமை, வாக்குரிமை, பாராளுமன்றத்தில் நுழைவதற்கான உரிமை, குழந்தை பிறப்புக் கட்டுப்பாட்டு உரிமை, விவாகரத்துக்கான உரிமை இத்தியாதி. இதை இன்னொருவிதமாகக் கூறினால், ஆரம்பத்தில் பெண்நிலைவாதிகள் சட்டச் சீர்திருத்தங்களிற்காக/சமூகத்தில் சட்டரீதியான சம அந்தஸ்திற்காகப் போராடினார்கள். இப்போராட்டங்களானது அடிப்படையில் வீட்டுக்கும் குடும்பத்திற்கும் வெளியிலானதாக இருந்தன. இன்று பெண்நிலைவாதிகள் பாரபட்சங்களை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்கு, தனித்த சட்டச் சீர்திருத்தங்களிலிருந்து வெகுதூரம் மேலே போய்விட்டார்கள். அவர்கள் பெண்களின் அடிமைத்தளையைக் களைவதை நோக்கிப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே இப்போது பெண்நிலைவாதமானது, வீட்டிற்குள்ளே பெண்களின்மீதான ஆணின் அடக்குமுறைக்கெதிரான, குடும்பத்தினால் பெண்கள் சுரண்டப்படுதலுக்கு எதிரான, மேலும் தொழில், சமூகம், கலாசாரம் (பண்பாடு), மதங்களில் தொடர்ந்தும் கீழான நிலைகளிலேயே வைத்திருக்கப்படுவதற்கு எதிரான, உற்பத்தி-இனஉற்பத்தி என்னும் இரட்டைச் சுமைக்கு எதிரான போராட்டங்களையும் தன்னுள் அடக்குகின்றது. அத்துடன் பெண்நிலைவாதம் பெண்தன்மை, ஆண்தன்மை என்பவற்றின் நிஜமான கருத்துக்களை, பிரத்தியேகமான உயிரியல் ரீதியான வகைப்படுத்தல் என்று சவால் விடுகின்றது.

இவ்வாறாக பெண்நிலைவாதிகள் பாரபட்சங்களிற்கு எதிராக மட்டும் போராடினால் போதாது. அடிமைத்தளையை உடைப்பதற்கும் அரசு, சமூகம், ஆண்கள் என்பவற்றால் விளைவிக்கப்படும் எல்லாவிதமான ஒடுக்குமுறைகளிலிருந்தும் விடுதலை வேண்டியும் போராடவேண்டுமென்பதைக் காண்கின்றார்கள். சுரண்டல் (உ+ம்: சமனற்ற கூலி, குறைந்த சம்பளம்), இரண்டாம் பட்சமாகக் கருதப்படுதல் (உ+ம்: ஆணாதிக்கத்தின் கீழ்), ஒடுக்குமுறை (உ+ம்: பெண்களிற்கு எதிரான வன்முறை) என்பவற்றுக்கு பெண்கள் ஆளாகியதைத் தெரிந்து கொண்டதிலிருந்து , மற்றப்பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளைப் புரிந்துகொள்ளும் ஒரு நிலையில் நாங்கள் இருக்கிறோம். அத்துடன் நாங்கள் எங்களுடைய நிலையை மாற்றுவதற்கும், சமூகத்தை அதனளவில் மாற்றுவதற்கும் போராட்டத்தை ஆரம்பிக்கவேண்டும் என்றும் கண்டுகொள்கிறோம்.

அதனுடைய சாராம்சம் என்னவென்றால் இன்றைய பெண்நிலைவாதம் என்பது பெண்களின் சமத்துவம், கௌரவம், அவர்களுடைய வாழ்க்கையினதும் உறவினதும் மீதான சுதந்திரம் என்பவற்றை வீட்டிலும் வெளியிலும் அடைவதற்கான போராட்டம்.

இங்கு நாங்கள் சொல்ல விரும்புவது என்னவென்றால், ஒரு பெண் தன்னுடைய சமூகத்தில் ஆணுடனான சமத்துவத்தைக் கோருதல் மட்டும் போதுமானதன்று. உதாரணமாக, தலித் ஆணுக்கு நிகராக ஒரு தலித் பெண் வந்தாலும் அது அவளை வெகுதூரத்திற்குக் கொண்டு செல்லாது. ஏனெனில் அந்த தலித் ஆண் ஏற்கனவே சமூகத்தில் கொடுமைப்படுத்தப்படும், சுரண்டப்படும், தாழ்த்தப்படும் ஒரு நிலையில் இருக்கிறான். எனவே பெண்நிலைவாதிகள் பெண்களுடைய சமத்துவத்தினை மட்டும் கேட்டுப் போராடவில்லை. ஆண்களுக்கும் பெண்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளுக்கும் நியாயமான பாரபட்சமற்ற ஒரு சமூகத்தைத் தான் கேட்டுப் போராடுகிறார்கள்.

**● பெண்நிலைவாதம் ஒரு மேற்கத்தைய கருத்தாக்கம் இல்லையா? எனவே தென்னாசியாவிற்கு முற்றாகப் பொருத்தமற்றதாகாதா?**

❏ இக்கேள்வி அபூர்வமாக, ஒரு கேள்வியாகக் கேட்கப்படுகின்றது. வழக்கமாக இது ஒரு குற்றச் சாட்டாக, ஒரு தாக்குதலாக அல்லது ஒரு யதார்த்த மாகக்கூடக் கேட்கப்படுகின்றது. இப்படியாக பெண் நிலைவாதிகள் 'இயல்பாக' தண்டிக்கப்படுகிறார்கள், அலட்சியப்படுத்தப்படுகிறார்கள். இதில் சுவாரஸ்ய மானது என்னவென்றால், மிகவும் மேற்கத்தைய நாக ரிகத்தையும் ஆங்கிலக் கல்விப்புலமையையும் கொண்ட அந்த ஆண்களினால் (சில பெண்க ளினாலும்) தான் பெருமளவு உக்கிரமாக இக்குற் றச்சாட்டு வைக்கப்படுகிறது. மேற்கத்தையமயப்ப டுத்தலின் விளைவுகளான நவீனவிஞ்ஞானம் அல் லது நவீனமயமாதல் என்பது பற்றி எப்போதுமே இந்த வகையான குற்றச்சாட்டுகள் இருந்ததில்லை.

இதே நபர்கள் உதாரணத்திற்கு பாராளுமன் றமுறை அல்லது ஜனாதிபதிமுறையின் கட்டமைப்பு பற்றி அல்லது முதலாளித்துவத்தின் வளர்ச்சிபற்றி அல்லது தனியார்மயமாக்கல்பற்றி அல்லது நிலப் பிரபுத்துவமின்மைபற்றி அல்லது இடதுசாரிகளின் கருத்தியல்பற்றி எல்லாம் பேசும்போது அந்நிய மூலங்கள்பற்றிக் கேள்விகேட்பதில்லை.

ஒரு பேச்சுக்கு, பெண்நிலைவாதம் என்பது தென் னாசியாவில் பிறக்கவில்லை என்றே எடுத்துக் கொள்வோம். அப்படியென்றால் கைத்தொழிற்புரட்சி, மார்க்சியம், சோசலிசம் இன்னும் தென்னாசியா விலுள்ள சில சமயங்கள் என்பனவும்தான் இங்கே பிறக்கவில்லை. ஐன்ஸ்டைன் லாகூரிலோ, மார்க்ஸ் கல்கத்தாவிலோ அல்லது லெனின் டாக்காவிலோ பிறக்கவில்லை. இருந்தும் அவர்களுடைய மேற் கத்தைய மூலங்கள் எங்களுக்குப் பொருத்தமற்ற கருத்துக்களாக இருந்ததில்லையே அல்லது அவை கள் பொருத்தமற்றன என்று கருதப்படவில்லையே. ஏனெனில் கருத்துக்கள் தேசிய, புவியியல் எல்லை களுக்குள் கட்டுப்படமுடியாதவை.

எப்படி இருப்பினும், 'பெண்நிலைவாதம்' என்னும் சொல் ஒருவேளை எங்களுக்கு அந்நியமாக இருக் கும்பொழுது, இந்தக் கொள்கை அல்லது கருத்து நிலை ஒரு மாற்றத்திற்கான செயன்முறையை வேண்டி நிற்கின்றது. 19ம் நூற்றாண்டில் பெண்களின் இழிநிலைக்கு எதிராக, ஒழுங்கமைக்கப்பட்டதும் தெளிவானதுமான ஒரு நிலைப்பாடாக, தென்னா சியாவில் ஒரு செயன்முறை ஆரம்பிக்கப்பட்டது. எனவே பெண்நிலைவாதமானது செயற்கையாக அல் லது அந்நியக் கருத்தியலாக இங்கு திணிக்கப்பட வில்லை. ஜனநாயக உரிமைகளும், பாதிக்கு மேற் பட்ட ஜனத்தொகையினுடைய அடிப்படை உரி மைகள் மறுக்கப்படும் அநீதியும் பற்றிய பிரக்ஞை வளர்ச்சியடைந்த பொழுது ஆசியாவில் பெண்நி லைவாதமும் பெண்நிலைவாதப் போராட்டங்களும் உதயமாகின. உண்மையில் பெண்நிலைவாத பிர க்ஞை ஆசியாவில், சில முக்கிய வரலாற்றுக் கால கட்டங்களில், அரசியல் பிரக்ஞைகள் மேலோங்கி இருந்தபொழுது - முக்கியமாக 19ம் நூற்றாண்டில், இன்னும் 20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் நிலப் பிரபுத்துவச் சக்கரவர்த்திகளின் உள்ளூர் எதேச்சா திகாரத்திற்கு எதிராகவும் அந்நியராட்சிக்கு எதி ராகவும் எழுந்த போராட்டங்களின்போது தோன் றியது. விதவைகளின் மறுமணம், பலதார மணத் தடை என்பவற்றை வேண்டியும் பர்தா போடும் முறை க்கு எதிராகவும் பெண்களின் கல்வியையும், சட்ட பூர்வமான விடுதலையையும் வேண்டி பெண்களின் அடக்குமுறைக்கு எதிரான குரல்கள் எழுந்தன.

**● பெரும்பாலும் கேள்விப்படும் சொல்லான தந்தை வழி சமூகம் அல்லது ஆணாதிக்க அமைப்பு என்பதைச் சுருக்கமாக விளக்கமுடியுமா?**

❏ அந்தச் சொல்லுக்கான கருத்து அதனுள் ளேயே இருக்கிறது. அதாவது ஒரு தந்தையின் அல் லது தந்தைவழி ஆட்சி. அது எதைக் கருதுகிற தென்றால் ஒரு குடும்பத்தின் எல்லா அங்கத்த வர்களும், எல்லாச்சொத்துக்களும் மற்றும் பொரு ளாதார வளங்களும் தந்தையின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும், சகல முடிவுகளையும் அவரே எடுக்கும் ஒரு சமூக அமைப்பு. இந்த சமூக அமைப்புடன் தொடர்புபடுத்தும் கருத்தியல் அல்லது நம்பிக்கை கள் பின்வருமாறு: ஆண் பெண்ணைவிட உயர்ந் தவன், பெண்கள் ஆண்களால் வழிநடத்தப்படுபவர் கள் அல்லது வழி நடத்தப்படவேண்டும், பெண்கள் ஆணின் உடைமைகளில் ஒரு பகுதி என்பன. பெரும் பாலான மதக் கட்டுப்பாடுகள், சமய நடைமுறை களின் அடிப்படையை இச்சிந்தனை உருவாக்கு கின்றது. இது பெண்களை வீட்டினுள் அடைத்து வைக்கும், அவர் களுடைய வாழ்வைக் கட்டுப்ப டுத்தும் சமூகநடை முறைகள் யாவற்றையும் விளக் குகின்றது. நல்லொழுக்கத்தின் அல்லது அறநெறி யின் இரட்டைநிலைப் பாடும், பெண்களைவிட ஆண் களுக்கு அதிக உரிமைகளைக் கொடுக்கும் சட்டங் களும் இந்த தந்தை வழி அல்லது ஆணாதிக்க சமூக அமைப்பை அடிப்ப டையாகக் கொண்ட துதான்.

இன்று ஒருவர், 'தந்தைவழி சமூகம் அல்லது

**பெண்களது பிரச்சனைகள்
என்று வரும்போது மட்டும்
இந்த முற்போக்காளர்கள்
கலாச்சாரத்தின் காவலர்களாக
வருவது ஆச்சரியமானதாக
இல்லையா?**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆணாதிக்க அமைப்பு' என்னும் சொல்லைப் பாவிக்கும்போது, பெண்களைத் தனிப்பட்ட வகையிலும் பொதுவாகவும் ஒடுக்கும், பெண்களை இரண்டாம் பட்சமாகக் கருதும் ஒரு அமைப்பைக் கூறுகின்றது.

● **வேலைத்தலத்தில் ஆண் – பெண் சமத்துவமின்மைக்கு உண்மையான காரணம் என்னவென்றால் பெண்கள் குடும்ப வாழ்க்கையில் அல்லது வீட்டில் கூடிய சிரத்தை உள்ளவர்களாக இருக்கிறார்கள். இதனால் ஆண்களிலும் பார்க்க குறைந்த பலனைத் தரக்கூடியவர்களாக அல்லது குறைந்த உற்பத்தித்திறன் கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்பதில்லையா?**

❒ முதலாளித்துவம் இந்த வாதத்தை வைக்கின்றது. ஒரு ஆண் குடும்பத்தின் தலைவனாக இருப்பதால் அவனுக்கு வழங்கப்படும் கூலி குடும்பக்கூலி - அதாவது அவனுக்கும் அவனது மனைவிக்கும் குழந்தைகளுக்குமான தேவைகளை நிறைவுசெய்வதற்கான ஊதியம். இப்படிப் பார்த்தால் உற்பத்தியில் ஈடுபடும் பெண்களின் உழைப்பு குடும்ப வருமானத்துக்கு ஒரு மேலதிக ஊதியமாகவே இருப்பதனால், ஒரேயளவு உழைப்பிற்குக்கூட பெண்களுக்கு ஆண்களை விடக் குறைந்த ஊதியம் வழங்கப்படலாம். ஆனால் யதார்த்தம் எப்படியோ கொஞ்சம் வித்தியாசமாகத்தான் உள்ளது. கணக்கெடுப்புகள் அல்லது புள்ளி விபரங்கள் தெரிவிப்பது என்னவென்றால் அநேக நாடுகளில் 25%-40%மான குடும்பங்கள், ஒன்றில் பெண்களின் உழைப்பில் வாழுகிறார்கள் அல்லது பெண்களின் தலைமையில் இருக்கும் ஒற்றைப் பெற்றார் குடும்பமாக இருக்கின்றார்கள். இந்தப் பெண்களில் பெரும்பாலானவர்கள் வறுமைக்கோட்டில் வாழுகிறார்கள் அல்லது குறைந்தளவு ஊதியம் வழங்கப்படும் தொழில்களைச் செய்கின்றார்கள். மேலே குறிப்பிட்ட முதலாளித்துவ, ஆணாதிக்க மேற்கோள்களினால் இவர்கள் வேலைத்தலங்களில் பாகுபாடாக நடத்தப்படுகின்றார்கள்.

பெண்கள் தொழிற்சாலை, களனி அல்லது தோட்டங்களில் செய்யும் வேலையுடன் வீட்டுவேலைகளான - சமையல், துப்புரவு செய்தல், கழுவுதல், பிள்ளை பராமரித்தல் என்பன போன்றவற்றிற்கும் பல மணிநேரம் செலவழிக்கவேண்டும் என்பதும் உண்மையாகும். எனவே, பெண்கள் இரட்டை நாள், இரட்டைச்சுமை போன்றவற்றை அனுபவிக்கின்றார்கள். அதாவது இவர்கள் 'ஊதியத்திற்கான' வேலை (தொழிலாளசக்தியின் ஒரு பகுதியாக)யினதும் 'ஊதியமற்ற' வேலை (வீட்டுவேலைகள்) யினதும் சுமையைத் தாங்குகிறார்கள். இந்த இரட்டைச் சுமையானது இவர்கள் தொழில்ரீதியாகப் பயிற்சி பெற்று முன்னேறுவதற்கும் நல்ல ஒரு உத்தியோகத்தைப் பெறுவதற்கும் தடையாக உள்ளது.

> உண்மையான அனுபவங்கள் பற்றியது. அதனுடைய திட்டவட்டமான வடிவம் வெவ்வேறு சமூகங்களில் வேறுபடலாம். எங்கள் கருத்தாக்கத்தின் இந்த நிலையற்ற (ஆனால் வளரும், கிளைவிடும்) நிலை எதிர்நிலையில் உள்ளவர்களிற்கு பாதகமானதாக இருக்கலாம் எங்களிற்கு இது சாதகமானதே.

● **இவ்வளவும் இருப்பினும், நவீனமயமாதலுடன் பெண்களுக்கு சமூகத்தில் அவர்களுக்குரிய இடம் கிடைக்கும் – அவர்களுடைய வீட்டுப்பழுக்கள் குறையும். அவர்கள் வெளியே செல்வார்கள். பொருளாதார ரீதியாக சுதந்திரம் அடைவார்கள்?**

❒ நவீனமயமாக்கப்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தலிலும் கருத்துருவாக்கத்திலும் இயல்பாயமைந்துள்ள ஆண்சார்பு, பெண்களை விளிம்பு நிலைக்குத் தள்ளியிருப்பது கண்கூடு. உண்மையில் பெண்களை சில சந்தர்ப்பங்களில் தொழிலாள சக்தியில் இருந்து வெளியேற்றி இருக்கின்றன. உதாரணமாக, இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் அதிகரிக்கப்பட்ட இயந்திரமயமாக்கலுடனான பசுமைப் புரட்சி பல பெண்களை அவர்களுடைய அன்றாட விவசாயத் தொழில்களிலிருந்து அப்புறப்படுத்தியிருக்கின்றது. தொழில்நுட்பவேலைகள் முதன்மையாக அல்லது முழுதாக ஆண்களிற்குப் பகிரப்பட்டதில் இருந்து பெண்கள் வேலையற்றவர்களாக்கப்பட்டார்கள். மேலும் அப்படியான தொழில் ஸ்தாபனங்களினால் உருவாக்கப்படும் அதிகரித்த செல்வம், செல்வந்த ஆண்கள் தங்களது குடும்பப் பெண்களை வீடுகளினுள்ளேயே வைத்திருந்து, சமூகத்தில் ஒரு உயர்நிலையில் இருப்பதற்கான அந்தஸ்தைக் காட்டுவதற்கு சாதகமாக இருக்கின்றது. இலங்கையில் மகாவலித்திட்டம் இதேமாதிரியான சில பிரச்சனைகளைக் கொண்டு வந்தது. தனிப்பட்ட பெண் விவசாயிகளுக்கு மிகக்குறைந்த அளவு நிலமே ஒதுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இந்தப் பெண்களுக்கு கடன் வழங்கல், பயிற்சி பெறுதல் என்பன மறுக்கப்பட்டது. இதனால் இவர்கள் தேர்ச்சி பெறாத தொழில்களுக்குத் தள்ளப்பட்டார்கள் அல்லது வீடுகளிற்குத் திருப்பி அனுப்பப்பட்டார்கள். இதன்மூலமாக பொருளாதார சுதந்திரத்திற்கான எந்தச் சந்தர்ப்பமும் இவர்களுக்கு மறுக்கப்பட்டது. இதே மாதிரியான போக்குகள் பங்களாதேஷிலும் நேபாளத்திலும் இருக்கின்றன. எனவே இப்படிப்பட்ட அபிவிருத்தி, நவீனமயமாக்கல் எங்களுடைய நாடுகளில் உள்ள எல்லாப் பெண்களினதும் உண்மையான நிலையை மாற்றும் அல்லது செம்மையாக்கும் என்பது மிகக் குறைந்த அளவு நம்பிக்கைக்குரியதாகும். அபிவிருத்தியானது பெண்களிற்கெதிராக செயற்படுவதை எடுத்துக்காட்டுவதும், நல்ல கொள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கைகளையும் திட்டங்களையும் உருவாக்குவதும் பெண்நிலைவாதிகளின் தேவையாகின்றது.

● வெறும் வீட்டுத்தலைவி*யாக இருக்க முடிவு செய்யும் ஒரு பெண்ணை நீங்கள் பெண்நிலைவாதி என்று எடுத்துக்கொள்வீர்களா?

❑ எல்லாவற்றுக்கும் முதலில், வீட்டிலிருக்கும் ஒரு பெண் என்ன செய்கின்றாள் எவ்வளவு செய்கின்றாள் என்பதை நாங்கள் அறிந்து வைத்திருப்பதிலிருந்து, நாங்கள் 'வெறும்' குடும்பத் தலைவி* என்று சொல்லமாட்டோம். உண்மையில் எங்களுடைய பெரிய போராட்டங்களில் ஒன்று, வீட்டு வேலையை அங்கீகரிப்பதும் அதற்குப் பெறுமதி வழங்குவதுமாகும். அப்போதுதான் இந்த வேலையைச் செய்யும் பெண்கள் அங்கீகரிக்கப்படுவார்கள். பெறுமதி இருக்கும். அத்துடன் மதிக்கப்படுவார்கள். வீட்டுவேலை மதிக்கப்படுமாயின் அதனால் அங்கீகரிப்பும் பெறுமானமும் கிடைத்துவிடும். ஆண்கள் இதனை ஏற்றுக்கொள்வதுடன் மட்டும் நின்றுவிடாது அவற்றைச் செய்வதற்கும் தொடங்கலாம்.

வீட்டில் ஒரு வீட்டுத்தலைவி*யாக இருக்கப்போவதைத் தெரிவு செய்யும் பெண், தன்னுடைய தனித்துவமும் திறமையும் முற்றாக அதனால் உபயோகிக்கப்படுவதை உணருவாளாயின் அவள் ஒரு பெண்நிலைவாதியாக இருக்கமுடியும். ஒரு பெண்நிலைவாதியாக இருப்பவர் வீட்டிற்கு வெளியே சென்று மக்கள் மத்தியில் பணி புரிவது என்று கருதவேண்டிய அவசியமில்லை. முழுமையாக எதைக் கருதுகிறதென்றால், சம சந்தர்ப்பங்களை அடிப்படையாகக் கொண்டு ஒரு உண்மையான தெரிவைக் கொள்ளுதல் என்பதே. இங்கு முக்கியமானது என்னவென்றால், இந்தத் தெரிவு பெண்களின் சொந்த விருப்பத்தின் பேரில் எடுக்கப்பட்டது என்பதுதான். உண்மையாகவே பெண்கள் தாங்கள் முழுநேர வீட்டுவேலை செய்பவர்களாக இருக்கமுடியாது என்னும் ஒரு தெரிவைத் கொள்வார்களாயின் வீட்டுவேலை செய்யும் பலரைக் காணமுடியாது என்றுதான் நாங்கள் நினைக்கின்றோம்.

ஆனால் இந்தத் தெரிவு நேர்மையானதாக இருக்கவேண்டும். இந்த முடிவு நிர்ப்பந்தத்தினாலானதாக இருக்கக்கூடாது அல்லது மற்றவர்களின் நேரடியான அல்லது மறைமுகமான நெருக்கத்தின் விளைவாக இருக்கக்கூடாது. எப்படியாயினும் இன்றைய நிலையில் 'நிபந்தனைக்குட்பட்ட' முடிவு எது 'சுயமாக எடுக்கப்பட்ட' முடிவு எது என்று வரையறுப்பதிலும் நிறையச் சிக்கல்கள் உள்ளன. எங்களுடைய வளர்ப்பு முறைகள், எங்களுடைய உள்வாங்கல்கள், எங்களுடைய நிர்ப்பந்தங்கள் வரையறுக்கப்பட்டனவும் அபத்தமானவையுமாகும். எனவே உண்மையில் எது சுயமான முடிவு என்று கண்டுகொள்வது கடினமானது. இதைக் கூறியதன்மூலம், ஒரு பெண்நிலைவாதி அது அவளுக்குத் திருப்தியை அளிக்குமென்றால்; அவள் தன்னுடைய சுதந்திரத்தையும் தனித்துவத்தையும் பேணமுடியுமென்றால்; இன்னும் அவளுடைய துணைவன், அவள் ஊதியம் பெறுவதில்லையென்று, அவளின்மீது தனது அதிகாரத்தைப் பிரயோகிக்காமல் இருந்தால்; ஒரு முழுநேர வீட்டுத்தலைவி*யாக இருப்பதைத் தெரிவுசெய்யமுடியும் என்பதை நாங்கள் திரும்பத் திரும்பக் கூற விரும்புகிறோம். வீட்டில் சமத்துவமும் பரஸ்பர மதிப்பும் நிலவவேண்டும். பெண்கள் என்ன செய்யவேண்டும் அல்லது என்ன செய்யக்கூடாது என்பதைக் கற்பிப்பதல்ல பெண்நிலைவாதம். ஒரு பெண் எது விடயத்திலும் தனது தெரிவைச் செய்வதற்கான சுதந்திரத்தைக் கொண்டிருக்கும்: அதாவது வீட்டுத்தலைவி*யாக இருக்க நிர்ப்பந்திக்கப்படாமல் இருப்பதற்கும், பெண்களின் 'பாரம்பரிய' வேலைகளைச் செய்வதற்குத் தள்ளப்படாமல் இருப்பதற்கும், குறைந்த ஊதிய 'பெண்களிற்கான' வேலைகளிற்குள் தள்ளப்படாமல் இருப்பதற்கும், அவளை மரியாதையுடன் நடத்துவதற்குமான ஒரு சமூகத்தைக் கோரிப் பெண்நிலைவாதிகள் போராடுகின்றார்கள்.

மொழி தன்னுள் அதனுடைய கருத்தியல், கலாச்சார, வரலாற்று அழுத்தங்களைக் கொண்டிருக்கின்றது. மொழி பற்றிய பிரக்ஞை மிகவும் முக்கியமானது. எங்களுடைய மொழிகள் பாலியல் பாகுபாட்டைக் கொண்டவை. அவை ஆணாதிக்கத்தை எடுத்துச் செல்கின்றன. அவை பெண்களைப் புறக்கணிக்கின்றன என்பதை நாங்கள் கண்டுகொள்ளுதல் வேண்டும்.

ஆண்-பெண் எதிரிடையையும் ஆண்-பெண் மாதிரிகளையும் எதிர்க்கின்றோம். ஒவ்வொரு பெண் பிள்ளையும் தனது விருப்பத்திற்குச் செயற்படுவதற்கான சந்தர்ப்பத்தையும் சுதந்திரத்தையும் அதற்கான திறமையையும் கொண்டிருத்தல் வேண்டும். அவள் ஒரு பெண்ணாகப் பிறந்ததனால் பாவைப் பிள்ளைகள், சட்டிபானைகள் மட்டும்தான் இயல்பாகவே அவளுடைய விளையாட்டுப் பொருட்களாக இருக்கவேண்டிய அவசியமில்லை அல்லது அவளுடைய அங்கங்களை அசைக்கமுடியாதபடி உடைகள் அணியத் தேவையில்லை அல்லது நான்கு சுவர்களுக்குள் அடைபட்டுக் கிடக்கவேண்டிய அவசியமில்லை அல்லது அவளுடைய கணவனின் குடும்பத்தினரைச் சமாளிப்பதற்காக அடங்கி ஒடுங்கி இருப்பதற்குக் கட்டாயப்படுத்தத் தேவையில்லை. பெண்நிலைவாதிகளினது விவகாரங்கள் இவ்வளவு இலகுவானவையும் நியாயமானவையும் ஆகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

> "பெண்நிலைவாத மானது எங்கள் சமூகத்திற்குத் தேவை யானது மட்டுமல்ல, இதில் பங்கு கொள்ளும் (இதை வரையறுப்பதில், செயற்படுத்துவதில், ஒழுங்கமைப்பதில், சீராக்குவதில், அதனுடன் வாழ்வதில்) அனைவருக்கும் இது பெரிய உத்வேகத்தைக் கொடுக்கும் என்றும் கண்டுகொள்கின்றோம்."

எப்படியிருப்பினும், பெண்நிலைவாதிகளின் கவனம் மிகவும் இறுக்கமாக வரையறுக்கப்பட்ட பெண்களின் பிரச்சனைகளான பாலியல் பலாத்காரம், மனைவியைத் துன்புறுத்தல், கருத்தடை, சமஊதியம் இவைகள்மீதானதுமட்டுமல்ல. உலகில் உள்ள எல்லாப் பிரச்சனைகளும் பெண்களுடன் சம்பந்தப்பட்டது என்றுதான் எங்களில் பலர் நம்புகின்றார்கள் ஏனெனில் எல்லாமே எங்களைப் பாதிக்கின்றன. பெண்நிலைவாதிகள் அசமத்துவம், ஆதிக்கம், ஒடுக்குதல் என்பவற்றின் எல்லாவிதமான வடிவங்களையும் இல்லாதொழிப்பதற்கு ஒரு சரியான சமூக-பொருளாதார ஒழுங்கை, தேசிய அளவிலும் சர்வதேசிய அளவிலும், உருவாக்குவதனூடாக ஆராய்வதிலிருந்து எல்லாப் பிரச்சனைகளும் பெண்களின் பிரச்சனைகளாக இருக்கின்றன. எல்லாப் பிரச்சனைகளிலும் பெண்களின் நோக்கு என்று ஒன்று இருக்கவேண்டும் அல்லது இருக்கின்றது. பெண்நிலைவாதிகள் இன்று சொந்த வாழ்க்கையினதும் தேசிய வாழ்க்கையினதும் எல்லாத் தளங்களிலும் பெண்நிலைவாத நோக்கினாலான ஒரு பார்வையை இணைப்பதற்காக ஆராய்கிறார்கள். எனவே பெண்கள் எல்லாவற்றிலும் பங்குகொள்ள வேண்டும். அது அணு ஆயுதப்போராக இருந்தாலென்ன, யுத்தமாக இருந்தாலென்ன, இனக்குழுக்களுக்கிடையேயான முரணாக இருந்தாலென்ன, அரசியல் பொருளாதார அபிவிருத்திக் கொள்கைகள், மனித உரிமைகள், குடியுரிமைச் சுதந்திரங்கள், சுற்றுப்புறச்சூழல் சார்ந்த விஷயம் இவைகள் போன்ற எல்லாவற்றிலும் பெண்களின் பங்கு இருக்கவேண்டும். உண்மையில், அவர்களுடைய மனித மற்றும் வளங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தபோதிலும், மேற்கூறியவற்றில் பலவற்றுடன் பெண்கள் அமைப்புகள் ஈடுபாடாக உள்ளன. உதாரணமாக, இலங்கையில் இனப்பிரச்சனைக்கு ஒரு அரசியல் தீர்வு தேவை என்று பெண்கள் தீவிரமாகப் போராடுகிறார்கள். பாகிஸ்தானில், பெண்கள் இஸ்லாத்தின் பெயரால் தங்களின்மீது திணிக்கப்பட்ட சட்டங்களை எதிர்த்தார்கள். இதனை எதிர்ப்பதன்மூலம் அவர்கள் இராணுவ ஆட்சிமுறையையும் இஸ்லாமிய அடிப்படைவாதத்தையும் எதிர்த்தார்கள். இந்தியாவில் சுற்றாடல், இனப் பலாத்காரம் உட்பட்ட பல விடயங்களில் பெண்கள் தீவிரமாகப் பங்கேற்றிருக்கின்றார்கள். தென்னாசியாவிலுள்ள பெண்களின் அமைப்புகள், அரச அபிவிருத்தித் திட்டங்கள் கொள்கைகளை பெண்நிலைவாத நோக்கில் இருந்து விமர்சித்திருக்கிறார்கள். இன்னும் தேசிய வாழ்க்கையின் வேறு பல தளங்களிலும் பங்கேற்றிருக்கிறார்கள்.

**● ஆனால் பெண்நிலைவாதிகள் சின்னச்சின்ன விஷயங்களுக்கெல்லாம் தேவையில்லாமல் பொங்கியெழுகின்றார்கள். உதாரணமாக, ஒரு பெண்ணை அவைத் தலைவன் (chairman) என்று அழைப்பது பொருட்படுத்தக்கூடிய விஷயமா? நிச்சயமாக நாங்கள் எல்லாவற்றையும் மாற்றமுடியாதல்லவா?**

❐ எங்களுடைய எந்த ஒரு பெரிய அளவிலான பிரச்சாரங்களிலும், மொழியானது எப்போதும் ஒரு பாரிய பிரச்சனையாக எடுத்துக்கொள்ளப்படாவிட்டாலும், அதை ஒரு சவாலாகக்கொண்டு அதனுடைய பாவனையை மாற்றுதலுக்கான தேவையையும் முயற்சியையும் முக்கியமானதாகக் காண்கிறோம். மொழி தன்னுள் அதனுடைய கருத்தியல், கலாச்சார, வரலாற்று அழுத்தங்களைக் கொண்டிருக்கின்றது. மொழி பற்றிய பிரக்ஞை மிகவும் முக்கியமானது. எங்களுடைய மொழிகள் பாலியல் பாகுபாட்டைக் கொண்டவை. அவை ஆணாதிக்கத்தை காவிச் செல்கின்றன. அவை பெண்களைப் புறக்கணிக்கின்றன என்பதை நாங்கள் கண்டுகொள்ளுதல் வேண்டும். மதமும் கருத்தியலும் போல மொழியும் ஆண்சார்ந்த, ஆண்நோக்கைத் திணிக்க முயலுகின்றது. எனவே எங்களை அவமதிக்கும் புறந்தள்ளும் அல்லது எங்களது இருத்தலை, எங்களது உண்மையான செயற்பாடுகளை அங்கீகரிக்காத ஒரு மொழியை நாங்கள் ஏன் ஏற்றுக்கொள்ளவேண்டும். முன்பு, பெண்கள் தொழில்களில் புதிய தளங்களிற்குச் செல்லாமல் இருந்தபொழுது (தலைமைகளில், விளையாட்டுக்களில், பத்திரிகைத்துறையில் இல்லாதிருந்தபொழுது) மொழியானது அவைத் தலைவன் (chairman), விளையாட்டுவீரன் (sportsman), தகவல் பரிவர்த்தனையாளன் (mediaman) போன்ற அன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

றைய யதார்த்தமான சொற்களை உருவாக்குவற்குத்தான் சிந்தித்தது. இப்பொழுது மொழியில் குறிப்பிட்ட சிலபகுதிகள் காலாவதியாகிவிட்டன. ஏனெனில் சமூக யதார்த்தங்கள் இப்போது மாறிவிட்டன. மொழிரீதியான நீதியைப் பெண்களுக்கு வழங்குவதற்கு பெரிய முயற்சி தேவையில்லை. தேவையானது என்னவென்றால் பிரக்ஞாபூர்வமாக எங்களுடைய அகராதியில் இச்சொற்களுக்கு இடமளிப்பதற்கான முயற்சிதான்.

● பெண்நிலைவாதிகள் நிம்மதியான குடும்பங்களைச் சிதைக்கின்றார்கள் அல்லது உடைக்கின்றார்கள் அல்லவா?

❐ ஆமாம் நீங்கள் சொல்வது சரிதான். பல பெண்நிலைவாதிகள் உண்மையில் குடும்பங்களை உடைக்கலாம். 'நிம்மதியான' என்பதைப் பிறகு கவனிப்போம். அவர்கள் அதனைச் செய்கிறார்கள்தான் எப்படியென்றால், தாழ்த்தப்பட்டவர்கள் மலம் அள்ள மறுக்கும்போது ஒரு நிம்மதியான, அமைதியான சமூகம் எப்படிக் குழம்புகின்றதோ அல்லது குழப்பப்படுவதாகக் கருதப்படுகின்றதோ அதைப் போலத்தான். குடியானவர்கள் அல்லது ஆலைத்தொழிலாளிகள், ஒரு பண்ணையாருக்கு அல்லது தொழிலதிபருக்கு எதிராக நிற்கும்போது அமைதியும் நேசமும் குழப்பப்படுகின்றது போலத்தான். எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு மனிதனுடைய நிம்மதி இன்னொருவனுக்கு நஞ்சாகலாம்.

ஒரு பெண் தன்னுடைய சுரத்தில்லாத வாழ்க்கையை, சுற்றிச்சுற்றி ஒரே புத்திக் கூர்மையற்ற வீட்டுவேலைகளைச் செய்து கொண்டிருப்பதை, தனது அடிமைத்தன வாழ்க்கையை, வருடத்திற்கொரு பிள்ளை பெற்றுக்கொண்டிருப்பதை உணர்ந்து கொள்ளத் தொடங்குவதை நீங்கள் குடும்பத்தைக் கலைத்தல் என்று சொல்லலாமா? தன்னுடைய கணவனின் வெறும் நிழலாக மட்டும் இருப்பதை எதிர்க்கும் ஒரு பெண்ணை, கணவனின் ஆசைகளின் எதிரொலியாக இருப்பதை மறுக்கும் ஒரு பெண்ணை, தன்னுடைய வாழ்க்கையின் மீதிநாட்களை அவனுடைய இலட்சியங்களை அடைவதற்கு உதவி செய்வதை மறுக்கும் ஒரு பெண்ணை ஒரு குழப்பவாதி என்று நீங்கள் அழைப்பீர்களா? இலட்சிய, தியாக, சுய-அழிப்பு மனைவியாக இருப்பதை மறுத்து தனக்காகவும் வாழ்வதற்கு விரும்பும், தன்னுடைய சொந்தக் கனவுகளையும் இலட்சியங்களையும் கொண்ட ஒரு பெண்ணை நீங்கள் குடும்பத்தைக் கலைப்பவள் அல்லது வீட்டு நிம்மதியைக் குலைப்பவள் என்று கூறமுடியுமா? அப்பெண் குடும்பத்தைக் கலைப்பவளா அல்லது அவளை இப்படியெல்லாம் நிர்ப்பந்தப்படுத்தும் ஒரு ஆண் உண்மையான நிம்மதியைக் குலைப்பவனா?

[ஒரு பெண் தன்னை மரியாதையாக நடத்தும்படி கோரும்பொழுது அவளுடைய குடும்பமும் கணவனும் அதனைக் கண்டுகொள்ளாது விடுதல், நிச்சயமாக வீட்டின் நிம்மதியைக் குலைக்கும். அந்த நிம்மதி குலைவதற்கான பொறுப்பு மற்றவர்களைத்தான் சாருமேயன்றி பெண்ணையல்ல.]

பெண்நிலைவாதிகள் (மரியாதையையும் கௌரவத்தையும் எதிர்பார்க்கும் பெண்கள் என்பது கருத்து) குடும்பங்களைக் குலைக்கின்றார்கள் ஆனால் 'நிம்மதியான' குடும்பங்களையல்ல. ஏனெனில் பல குடும்பங்களின் 'நிம்மதி' என்பது ஒரு முகப்புத் தோற்றம். அதன் பின்னால் இருப்பவை எண்ணிலடங்காப் பெண்களின் சிதைக்கப்பட்ட உணர்வுகள், தனித்துவங்கள், உணர்ச்சிகள், கனவுகள் என்பவைதான். இப்படியான அநீதிகளுக்கெதிராகப் பெண்கள் புறப்படாதவரைக்கும் அங்கு 'நிம்மதி' இருக்கும். வீட்டுவேலைகளைப் பகிர்ந்து கொள்ளும்படி ஆண்களைப் பெண்கள் கேட்காதவரைக்கும், அழும் குழந்தைகளை இரவில் எழும்பிப் பராமரிப்பதற்கு சுழற்சி முறையில் பங்குகொள்ளாதவரைக்கும் அங்கு 'நிம்மதி' இருக்கும். பெண்கள் சமத்துவத்திற்காகவும் நீதிக்காகவும் கேள்வி கேட்கும்போது பிரச்சனை தொடங்குகின்றது. பெண்கள் தங்களுடைய வேதனையை, அவமதிப்பை, விரக்தியைக் கண்டு கொள்ளத் தொடங்கும்பொழுது நிம்மதி குலைக்கப்படுகின்றது. நீங்கள் பின்வருமாறான குற்றச்சாட்டுக்களைக் கேட்கலாம். "மனிசன் நாள் முழுக்க வேலைசெய்துபோட்டு நிம்மதியாய் வீட்டை போய் இருப்பமெண்டால்... இதுகளோடை மனிசர்..."

எங்களுடைய நிம்மதியான குடும்பங்களை மிக நெருங்கி அவதானித்தால் அங்கு முரண்பாடுகளும் முறுகல்களும் பலாத்காரமும் நிலவிக்கொண்டிருப்பதற்கான ஏராளமான சாட்சியங்கள் உண்டு. லட்சக்கணக்கான வீடுகளில் பெண்கள் அடி, உதை வாங்குகின்றார்கள்; தனித்து வைக்கப்படுகின்றார்கள்; அத்துடன் வேறு பல நிர்ப்பந்தங்களுக்கும் உள்ளாகின்றார்கள். ஒரு பெண்குழந்தையின் பிறப்பு அல்லது வருகை ஒரு சாத்தானின் வரவாகக் கொள்ளப்படுகின்றது. பெண் சிசுக்கொலை எத்தனையோ நூற்றாண்டுகளாக எங்களுடனேயே இருக்கின்றது. மேலும் ஆண்குழந்தைகளுடன் ஒப்பிடும்பொழுது பெண்குழந்தைகள் குறுகிய காலத்திற்கே பாலூட்டப்படுகின்றார்கள். குறைந்தஅளவு உணவை உட்கொள்கிறார்கள். குறைந்தளவு மருத்துவக் கண்காணிப்புக் கிடைக்கின்றது. போதாத சீதனத்திற்காக மணப்பெண்கள் கொழுத்தப்படுதல், வில்லங்கமான விவாகரத்து அல்லது உறவினர்களினால் உடல்ரீதியாக அங்கவீனமாக்கப்படல் என்பன பெண்களுக்கு 'நிம்மதி'யானதா?

இப்படியான ஒரு 'நிம்மதி'யை எந்த விலைகொடுத்தும் காப்பாற்ற விரும்புபவர்கள், இந்தியாவில் உள்ள கிராமங்களில் அமைதியையும் நேசத்தையும் நிச்சயப்படுத்துவதற்காக சாதி அமைப்புமுறையைக் கட்டிக் காக்க விரும்பும் பார்ப்பனியர்களைப் போல அல்லது தங்கள் கூலிகளுடனான தொழில் உறவைத் தொடர்ந்து பேணும் பண்ணையார்கள் போலத்தான். பெண்களது பிரச்சனைகள் என்று வரும்போது மட்டும் இந்த முற்போக்காளர்கள் கலாச்சாரத்தின் காவலர்களாக வருவது ஆச்சரியமானதாக இல்லையா? இவர்கள், தலித்துகளும் தொழி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லாளர்களும் இந்தக் கட்டமைப்பை மாற்றியமைப்பதற்கு முயற்சி செய்யும்போது, அவர்களைக் குறைகூறுவதில்லை. ஆயினும் அடிமைப்படுவதை மறுக்கும், அடக்குதலை எதிர்க்கும், தவறான பாவனைக்குட்படும் பெண்கள் இந்தக் கட்டமைப்பை எதிர்க்கும்போது அமைதியின்மையை உண்டாக்குவதாகக் குற்றஞ் சுமத்தப்படுகிறார்கள். இன்னும் தெளிவாகக் கூறுமிடத்து, பெண்களையும் அவர்களுடைய ஆளுமைகளையும் சிதைக்கும் இந்த ஆணாதிக்க சமுதாய அமைப்பு முறை, வேற்றுமைகளை உருவாக்குவதற்கும் குடும்பங்களைக் கலைப்பதற்கும் பொறுப்பாகின்றதல்லவா?

பெரும்பாலான பெண்நிலைவாதிகள் வீட்டுக்கும் குடும்பத்திற்கும் எதிர்நிலையாக இல்லாதிருக்கும் பொழுது, இரண்டையும் காப்பாற்றுவதற்கு பெண்-ஆண் உறவுகளின் தன்மையில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற நிலைப்பாட்டைத்தான் நாங்கள் எடுக்கின்றோம். இனிமேலும் பெண்களுக்கு விலை கொடுத்தும், பெண்களை விற்றும் அமைதியையும் நிம்மதியையும் காப்பாற்ற முடியாது. ஆணாதிக்கம் வீட்டிற்குள் இருக்கும்வரையும் நாங்கள் குடும்பத்திற்கு வெளியே ஜனநாயகத்தைப்பற்றிப் பேசமுடியாது. உண்மையான ஜனநாயகங்கள், சமத்துவமான சமுதாயங்கள் எப்போது நிறுவப்பட முடியுமென்றால் நாங்கள் குடும்பத்தினுள் ஜனநாயகம், சமத்துவம், பரஸ்பர மதிப்பு என்பவற்றைக் கடைப்பிடிக்கும்பொழுதுதான். சமூகத்தில் உண்மையான அமைதி எப்போது நிலவுமென்றால் வீட்டில் நாங்கள் நிம்மதியையும் அமைதியையும் அனுபவிக்கும்போதுதான்.

● **ஆனால் பெண்நிலைவாதிகள் தாய்மைக்கு எதிரானவர்களா?**

❒ பிள்ளைகளை வைத்திருக்கும் அல்லது பிள்ளைகளைப் பெற்றிருக்கும் பெண்களுக்கு எதிரானவர்களல்ல பெண்நிலைவாதிகள். ஆனால் நாங்கள் தாய்மை என்பது ஒவ்வொரு பெண்ணுக்குமான தலைவிதி என்று கருதவில்லை அல்லது தாய்மையையும் பெண்ணையும் சமப்படுத்த விரும்பவில்லை. ஒவ்வொரு பெண்ணும், தான் பிள்ளை பெற்றுக் கொள்வதா வேண்டாமா என்பதைத் தெரிவு செய்யவேண்டும் என நாங்கள் நினைக்கிறோம். இன்று அப்படியான ஒரு தெரிவு சட்டரீதியாகவோ, சமூகரீதியாகவோ அல்லது உளவியல்ரீதியாகவோ, எங்களுடைய நாடுகள் பலவற்றில் இல்லை. எனவே எங்களது போராட்டம் பெண்களிற்கான அந்த உரிமையைப் பெறுவதற்காகவும்தான்.

மேலும் சொல்லப்போனால், ஒரு பெண்ணால் மட்டும்தான் பிள்ளையைப் பெறமுடியும். ஆனால் பிள்ளையை வளர்ப்பதற்கு அல்லது பராமரிப்பதற்கு எவராலும் முடியும் என்று உணருகின்றோம். அதாவது இன்னொரு மனித உயிரியைப் பராமரித்து, கவனமெடுத்து வளர்ப்பது ஆகும். அதாவது இன்னொரு மனித உயிரியை உடல், உள, உணர்ச்சிரீதியாக வளர்வதற்கு உதவி செய்தல். இப்படியான பராமரிப்பை எவராலும் செய்யமுடியும். குழந்தையைப் பெற்ற பெண்ணினால் மட்டுந்தான் முடியும் என்பது அவசியமற்றதாகின்றது. பிள்ளை பெற்றுக்கொள்ளாதவர்களாக இருக்கும் எத்தனையோ பெண்கள் சிறந்த தாய்மார்களாக இருக்கின்றார்கள். இன்னொருபுறம் பார்த்தால் எத்தனையோ பிள்ளைகளைப் பெற்ற பெண்கள் தாயாக இருக்கமுடியாதவர்களாக இருக்கின்றார்கள். தாயாக இருப்பதற்கு, பராமரிப்பதற்கு திறமையும் இயல்பும் இயற்கையானதாக இருக்கத் தேவையில்லை. இது உயிரியல்ரீதியாகத் தீர்மானிக்கப்பட்டதல்ல. பராமரிப்பதை பயிலுவதிலும் விரும்புவதிலும் இது தங்கியுள்ளது. இது ஆண்களாலும் மிகவும் இலகுவில் செய்யக்கூடியதாகும். ஆண்களும் தாயாக இருக்கமுடியும். பெரும்பாலான பெண்கள் அநேகமாக எப்படியென்றாலும் தாய்மை அடைவதைத் தங்களுடைய இலட்சியம் என்று கருதுகிறார்கள். இது வேறு மாற்றீடில்லாத தன்மை, தாய்மையை வழிபாட்டிற்குரியதாகக் கொள்ளல் என்னும்

> *பெண்ணாகப் பிறந்ததனால் பாவைப் பிள்ளைகள், சட்டிபானைகள் மட்டும்தான் இயல் பாகவே அவளுடைய விளையாட்டுப் பொருட்களாக இருக்கவேண்டிய அவசியமில்லை அல்லது அவளுடைய அங்கங்களை அசைக்கமுடியாதபடி உடைகள் அணியத் தேவையில்லை அல்லது நான்கு சுவர்களுக்குள் அடைபட்டுக் கிடக்கவேண்டிய அவசியமில்லை அல்லது அவளுடைய கணவனின் குடும்பத்தினரைச் சமாளிப்பதற்காக அடங்கி ஒடுங்கி இருப்பதற்குக் கட்டாயப்படுத்தத் தேவையில்லை.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரண்டினாலும்தான். பெண்கள், அவர்களுடைய தியாக மனப்பான்மை, துன்பங்களைச் சகித்துக் கொள்ளுதல், மற்றவர்களுக்காக வாழுதல் என்பவற்றுக்காக ஆராதிக்கப்படுபவர்கள். இப்படியான போற்றுதல்கள் அவர்களுக்குக் கொடுக்கப்படும் போதை வஸ்த்து போலாகின்றது. இந்த இனிமையான மயக்கத்திற்காக தங்களை அசைய விடாது கட்டி வைக்கும் ஒரு பணியில் எத்தனையோ சந்ததிகளாக ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். பெண்களுக்கு குழந்தைகளைப் பராமரிப்பதற்கு மேலதிக அல்லது வித்தியாசமான அவயவங்கள் இல்லை அல்லது அன்பையும் கவனிப்பையும் உற்பத்தி செய்யும் விசேட சுரப்பிகள் இல்லை.

உண்மையிலேயே தாய்மையைத் தியாகம் என்றும் மற்றவர்களுக்காக அன்பு செய்து வாழுதல் என்றும் அதுவே எல்லாச் செயற்பாடுகளிலும் சிறப்பானதென்றும் உலகம் கருதியிருக்குமாயிருந்தால் (அதற்காகத்தான் நீங்கள் நோபல் பரிசுகளைப் பெற்றிருப்பீர்களானால்), ஆண்கள் இதற்காகப் பெண்களைத் தனிஉரிமை கொண்டாட விட்டிருக்கமாட்டார்கள். இவ்வளவு பெருமைகளுடன் கூடிய இச் செயலை ஆண்கள் ஏன் தாங்கள் செய்வதற்கு விருப்பமற்றவர்களாக இருக்கின்றார்கள். உண்மையில் தியாகம், மற்றவர்களுக்காக வாழுதல் என்பவை எல்லாவற்றிலும்விட உயர்ந்ததும் சிறப்பானதும் என்றால், அது ஒரு மனித உயிரிக்குத் திறமையைக் கொண்டு வரும் என்றால், நாங்கள் இதில் சுயநலவாதிகளாக இருக்கக் கூடாதென்று உணருகின்றோம். ஆண்களும் பராமரிப்பு, பகிர்ந்து கொள்ளல், கவனித்தல் என்பவற்றை அனுபவிப்பதற்குச் சமனான சந்தர்ப்பத்தை பெண்கள் அவர்களுக்கு வழங்கவேண்டும்.

யதார்த்தத்திற்கு மிகவும் புறம்பானதாக, பிள்ளைகள் தங்களுடைய பெற்றார் இருவரிடமிருந்தும் மிக நல்லவற்றைப் பெற்றுக்கொண்டால் அவர்களும் நல்லவர்களாக வளர்வார்கள் என்று பெண்நிலைவாதிகள் கருதுகின்றார்கள். தாய்மை என்பது பெற்றார் இரண்டுபேர்களினாலும் பகிரப்படுமாயிருந்தால் பெண்களின்மீது மட்டுமான சுமையாக அது இருக்காது. தாய்மை என்பது அப்போது தான் அல்லது அப்போது மட்டும்தான் உண்மையில் ஒரு சிருஷ்டியாக, சந்தோஷமாக, விளையாட்டாக (சுமையற்றதாக) அது சம்பந்தப்படும் ஒவ்வொருவருக்கும் இருக்கும். சுருக்கமாக, பெண்நிலைவாதிகள் தாய்மைக்கு அல்லது தாய்மைப் பராயத்துக்கு எதிரானவர்களல்ல. இவர்கள் விரும்புவது என்னவென்றால் ஒவ்வொரு பெண்ணும் தான் குழந்தைகள் பெறுவதா இல்லையா என்பதை முடிவு செய்யக்கூடிய உரிமை இருக்க வேண்டும். மேலும் தாய்மையை, பராமரிப்பை ஆண்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றார்கள்.

● **இவைகள் எல்லாம் நியாயமானவையாகத்தான் தெரிகின்றன. ஆனால் ஏன் பெண்நிலைவாதம் இவ்வளவு அச்சமூட்டுவதாக இருக்கின்றது? ஏன் இது எப்போதும் தாக்கப்படுகின்றது அல்லது தாக்குதலுக்கு உள்ளாகின்றது? ஏன் இது அநேகமாக பரிகசிப்புக்கும் தவறான வர்ணிப்புக்கும் விளக்கத்திற்கும் உள்ளாகின்றது? ஏன் இவ்வளவு விரோதத்தைச் சம்பாதிக்கின்றது?**

❑ எல்லோரும் பெண்நிலைவாதத்தைக் கண்டு அச்சமாக உணர்வது எந்தவிதத்திலும் ஆச்சரியமூட்டுவதல்ல. அவர்கள் பின்வருமாறு சொல்லும் போது மிகவும் நேர்மையாக இருக்கின்றார்கள்.

"உங்களுக்குத் தெரியுந்தானே, பெண்கள்நல அமைப்புகள்பற்றி எங்களுக்குப் பரவாயில்லை. ஆனால் இந்தப் பெண்நிலைவாதம் ஒரு பிரச்சனை"

பெண்நிலைவாதம் எல்லோரையும் அசௌகரியப்படுத்துகின்றது. ஏனெனில் இந்த ஒரு 'இசம்' மட்டும்தான் வீட்டின் அல்லது குடும்பத்தின் பரிசுத்தத்திற்குள் நுழைகின்றது. இது எங்களுடைய மிக நெருங்கிய உறவுகளுடன் சம்பந்தப்பட்டது. எங்களுடைய மிகத் திடமான நம்பிக்கைகள், நடைமுறைகள், பழக்க வழக்கங்கள் என்பவற்றையும் எங்களுடைய மதங்களையும் விழுமியங்களையும் கேள்விக்குள்ளாக்குகின்றது. இவை எல்லாவற்றையும் ஒருமித்துச் செய்யும் ஒரு விஷயம் அச்சமூட்டுவதாகத்தான் இருக்கும்.

நாங்கள் ஆணாதிக்கத்தை அல்லது தந்தை வழி சமூகத்தைக் கேள்விக்குட்படுத்தும்பொழுது, நாங்கள் ஆண்மேல்நிலையை கேள்விக்குட்படுத்தும்பொழுது, நாங்கள் எங்களுடைய சொந்தத் தகப்பன்களுடன், சகோதரங்களுடன், கணவன்களுடன், மகன்களுடன், நண்பன்களுடன் முரண்பாடு கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகின்றோம். ஏனெனில் இவர்கள்தான் ஆணாதிக்கத்தை எங்கள்மீது பிரயோகிக்கும் நேரடி நபர்களாவதும், இது அவர்களைத் துன்பப்படுத்துவதும் காரணமாகின்றது. இது கேள்விக்குட்படும் ஆண்களுக்கு மட்டுமல்ல, கேள்விகேட்கும் பெண்களுக்கும் வேதனையானதுதான். நாங்கள் அநேகவேளைகளில், நாங்கள் செய்வது சரிதானா என்று ஆச்சரியப்படுகின்றோம். இது உண்மையில் பிரயோசனமானதுதானா? இந்த தந்திரமிக்க அல்லது வெளிப்படையான பாலியல்பற்றி உணர்ந்து கொண்டிருப்பதனால் ஏற்படும் கசப்புக்களைத் தவிர்க்க எங்களால் முடியுமா? எங்களுடைய உழைப்புக்காகவும் எங்களுடைய கணவர்கள் ஊதியம் பெறும்போது நாங்கள் என்ன செய்கிறோம்? அல்லது அவர்களுடைய வேலை, உத்தியோகங்கள், இலட்சியங்கள் எங்களை மேவும்பொழுது என்ன செய்கின்றோம்? தன்னுடைய சகோதரனுக்குத் தன்னைவிட அதிக உணவும் வெளியே சென்று கல்விகற்க அனுமதியும் அல்லது வேறுவிடயங்களில் முன்னுரிமையும் கொடுக்கப்படும்பொழுது ஒரு பெண் குழந்தை என்ன செய்கிறது? குடும்பச் சொத்தில் பங்கில்லாமல் போகும்போது ஒரு மகளுக்கு என்ன நடக்கின்றது? நாங்கள் அவமதிக்கப்படும்பொழுது, கேலி செய்யப்படும்பொழுது, ஒடுக்கப்படும்போது நாங்கள் என்ன செய்வது? ஆயினும் இப்படியான நடத்துதல்களிற்கு மறுப்புத் தெரிவிக்கும் மெல்லிய சைகைகள் அல்லது சிறிய உணர்த்தல்கள் அச்சமூட்டுவதாகக் கொள்ளப்படுமானால், முன்பு கூறியதுபோல்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எந்தச்சவாலும் சமூகஅந்தஸ்து பதவிக்கு அச்சமாகத்தான் இருக்கும்.

பெண்நிலைவாதம், சமூகத்திற்கு அதன் ஒவ்வொரு நிலையிலும் சவால் விடுவதால், அதாவது பரஸ்பர தனிப்பட்ட குடும்ப உறவுகளில் சமூக அந்தஸ்துநிலையை ஒரு சவாலாக்குகின்றது. இப்படியான ஒரு சவாலினால் ஏற்படும் வேதனை ஆண்கள் பெண்கள் இருவருக்குமேயானது. ஆனால் பெண்கள் இந்த வேதனையைச் சந்திப்பதற்கு ஆயத்தமாகின்றார்கள். ஏனெனில் சமூக அந்தஸ்து நிலையைத் தக்கவைத்துக் கொண்டிருப்பதன் மூலம் ஏற்படும் வேதனை அதைவிடப் பெரியது. தங்களிற்கென்று விலங்குகளைத் தவிர வேறெதுவுமில்லாத பெண்கள் போராடுவதன்மூலம்தான் நன்மையடையமுடியும். பெண்நிலைவாதிகள் கட்டியெழுப்ப நினைக்கும் புதிய சமூகத்தில் ஆண்களுக்கும் நன்மைகள் உண்டு. ஆனால் பெரும்பாலானவர்கள் தேவையில்லாமல் இதனை விரோதமாக எண்ணுகிறார்கள். குறிப்பாக நடுத்தரவர்க்க, நகர்ப்புற, புத்திஜீவித்தனமான ஆண்கள் தங்களுடைய வர்க்க மூலம் இப்படி இருக்க, பெண்நிலைவாதிகளை பிரிவினைவாதிகள் என்றும் மத்தியதர வர்க்கம் என்றும் அடிக்கடி தாக்குகின்றார்கள்.

● பெண்நிலைவாதம் ஒரு மத்தியதரவர்க்கத் தோற்றப்பாடா?

❐ தென்னாசியாவில் பெண்நிலைவாதமானது, ஒரு மட்டத்தில், நடுத்தரவர்க்கத்துடன் மட்டுப்படுத்தப்பட்டது மாதிரி தோற்றமளித்தாலும் அதுவே உண்மையல்ல. அப்படியான தோற்றப்பாட்டுக்கு இரண்டு காரணங்கள் கூறலாம்.

ஒன்று, தொடர்புச் சாதனங்கள் நகர்ப்புறங்களில் நடப்பவற்றை மட்டுமே கண்டுகொள்ளுகின்றன. இரண்டாவது எங்களுடைய மத்தியதரவர்க்கப் பெண்நிலைவாதிகள் கூடிய தெளிவானவர்கள். இவர்கள் போராடுவதுடன் மட்டும் நின்றுவிடாது பிரச்சனைகளைப்பற்றி எழுதுகிறார்கள். தங்களுடைய கருத்துக்களை பத்திரிகைகள், சஞ்சிகைகள், வீதி நாடகங்கள், பாடல்கள், தொலைக்காட்சி என்னும் வேறுவேறு தொடர்பு சாதனங்களின் மூலம் பகிர்ந்து கொள்கிறார்கள். நகர்ப்புற, மத்தியதரவர்க்கப் பெண்களையும் அவர்களது அமைப்புகளையும்பற்றி நாங்கள் அதிகம் கேள்விப்படுவதனால், பாட்டாளி வர்க்கப் பெண்களும், தலித் பெண்களும் தாங்கள் ஒடுக்கப்படுவதாக உணர்வதில்லை என்றோ அல்லது அவர்கள் இது குறித்து எதுவும் செய்யாமல் இருக்கின்றார்கள் என்றோ நினைக்கத் தோன்றுகிறது. இது உண்மைக்குப் புறம்பானது. உண்மையில் நூற்றுக்கும் இன்னும் ஆயிரத்துக்கும் அதிகமான பாட்டாளிவர்க்கப் பெண்களும், பெண்கள் அமைப்புகளும் பெண்களின் பிரச்சனைக்குக் குரல் கொடுக்கின்றார்கள். வர்க்கம், வறுமை பற்றிக் குரல்கொடுக்கும் அதேநேரத்தில் மதுபாவனை, மனைவியைத் துன்புறுத்தல், சமஊதியம், பாலியல் தொந்தரவுகள் இப்படியான விடயங்களிற்கு குரல் கொடுக்கின்றார்கள். பெண்களின் நோக்கில் இருந்து சுற்றாடல், சக்தி தொடர்பான விடயங்களில் தங்கள் கருத்துக்களை முன்வைத்திருக்கின்றார்கள். தனிப்பட்ட மட்டங்களில்கூட பெண்கள் கல்வி கற்பதற்கான ஊக்கம், ஆண்களின் விருப்பத்திற்கு எதிராக பெண்கள்குழு அமைக்க உதவுதல் அல்லது நிலப்பிரபுக்கள், உத்தியோகத்தர்கள் அல்லது பொலிஸ்காரர்கள் இவர்களினால் அனுபவிக்கும் பாலியல் சீண்டல்களை எதிர்த்து பொதுமக்களை விழிப்படையச் செய்தல் என்பவற்றிற்கு பெண்நிலைவாதப் போராட்டங்கள் வழிவகுத்திருக்கின்றன. எங்களுடைய சமூகங்களில் பெண்நிலைவாதத்தின் வித்துகள் ஒவ்வொரு பெண்ணிடமும் உண்டு. பெண்நிலைவாதியாக இருப்பதற்கு சொற்கள் அல்லது சொற்கட்டுகளைத் தெரிந்து வைத்திருக்கவேண்டிய அவசியமில்லை. ஒரு கோட்பாடு அல்லது தத்துவத்தைக் கொண்டிருக்கத் தேவையில்லை. தேவையானது எல்லாம் ஆணாதிக்கத்தைக் கண்டுகொள்ளலும், இரட்டை நிலைப்பாடுகளையும், அநீதியையும், ஆணாதிக்கத்தையும் ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதற்கான துணிவைக் கொண்டிருப்பதும்தான். ஒரே வேலைக்குச் சமனற்ற கூலி வழங்கப்படுதல் அநீதியானது என்பதனையும், தன்னை யாராவது துன்புறுத்துவதற்கோ அல்லது கொடுமைப்படுத்துவதற்கோ அல்லது பாலியல் பலாத்காரம் செய்வதற்கோ எவருக்கும் உரிமையில்லை என்பதையும் கண்டு கொள்வதற்கு, ஒரு தலித் பெண்ணுக்கு கொள்கைகளுடனான பரிச்சயம் தேவையில்லை.

எது எப்படி இருப்பினும் முன்பு குறிப்பிட்டதுபோல், நடுத்தரவர்க்க, கல்வியறிவுள்ள பெண்கள் கூட்டங்கள் கிளர்ச்சிகள் என்பவற்றைச் செய்வதற்கு கூடிய தெளிவுள்ளவர்கள், கூடிய தீவிரமானவர்கள். ஆனால் இது மிகவும் அருமையாக அவர்களுக்கெதிரானதாகக் கொள்ளமுடியும். இந்த முரண்பாட்டில் உள்ள உண்மை என்னவென்றால் இவர்கள் தங்களுடைய கல்வியையும் பொருளாதார சுதந்திரத்தையும் தங்களிற்காகவும் மற்றப் பெண்களிற்காகவும் போராடுவதற்குப் பாவிக்கின்றார்கள். இந்தப் போராட்டம் அவர்களிற்குச் சாதகமானதாகத்தான் இருக்கும். பெண்நிலைவாத அமைப்புக்களில் மத்தியதர வர்க்கப் பெண்களின் பங்கு, வேறு எந்த சமூகஅமைப்புகளிலும் மத்தியதர வர்க்கத்தின் பங்குபோலவே அமையும்.

●பெண்நிலைவாதிகள் ஆண்களை வெறுப்பவர்களா?

❐ பெண்நிலைவாதிகள் ஆண்களை வெறுப்பவர்களல்ல. ஆனால் இவர்கள் தந்தைவழி ஆதிக்கம், ஆண் மேல்நிலை, ஆண்களில் உள்ள ஆண்தன்மை (இவற்றைப் பிரதிபலிக்கும் பெண்கள்) - அதாவது மேலாதிக்கம், சுயநலம், சண்டையிடும் அல்லது சமர்புரியும் தன்மை, பலாத்காரம் என்பவற்றிற்கு எதிரானவர்கள். பெண்களைத் தங்களிற்குச் சமமாக ஏற்றுக்கொள்ளாத, பெண்களைத் தங்கள் உடைமையாகக் கொள்ளும் அல்லது பெண்களை ஒரு பாவனைப் பொருளாக மட்டும் எண்ணும் பார்வை கொண்ட ஆண்களிற்கு நாங்கள் எதிரானவர்கள். துரதிர்ஷ்டவசமாக பெரும்பாலான ஆண்கள் மேலோங்கி இருக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கின்றார்கள். இப்படியான தன்மைகளைக் கொண்டுள்ளார்கள். இது உண்மை. மிகவும் ஆர்வமுள்ள 'ஜனநாயக', 'சோசலிச' ஆண்கள்கூட, சமூகத்தின் சமத்துவமின்மைபற்றி இவர்கள் பிரக்ஞை கொண்டிருக்கும்பொழுதும், தங்களுடைய வீடுகளில் பரஸ்பர ஆண்-பெண் உறவுகளில் சமத்துவத்தை மறுக்கிறார்கள். பெண்களாக மட்டும் இருப்பது - கூடியளவு பராமரிப்புத்தன்மை அல்லது கவனிப்பு உடையவர்கள் என்பது - இயற்கையானதோ அல்லது இயல்பானதோ அல்ல. அல்லது ஆண்கள் இயற்கையிலேயே சண்டையிடும் தன்மை கொண்டவர்களாயும், மேலாண்மை உள்ளவர்களாகவும் இருப்பது யதார்த்தத்திற்கு அல்லது இயற்கைக்கு முரணானது என்று நாங்கள் கருதுகின்றோம். பெண்கள் உண்மையாகவே தங்களுடைய சொந்தப் பிரக்ஞையாலும், கட்டுப்பாடுகளாலும், நிர்ப்பந்தங்களினாலும் சமூகம் அவர்களிற்குத் தீர்மானித்து வைத்துள்ள பணிகளாலும் அது ஏற்படுத்தி வைத்திருக்கும் விம்பங்களினாலும் பெண்ணாகத் தண்டிக்கப்பட்டவர்கள்.

எங்களுடைய பிரச்சனை என்னவென்றால் பெரும்பாலான ஆண்கள் இதனை அங்கீகரிப்பதாகத் தோற்றம் தருவதில்லை. மிகச் சொற்பமானவர்களே தங்களை இவற்றிலிருந்து விடுவித்து பெருமளவு மனிதத்தன்மை உள்ளவர்களாகவும், உண்மையான ஜனநாயகத்திற்காகவும் போராடுகின்றார்கள். இன்னும் சொல்லப்போனால் தங்களை உணர்ந்து கொள்வதற்கு உதவிசெய்யுமுகமாக ஒரு செயலைப் பெண்கள் செய்யப்போனால் அது ஒரு விரோதமான செயலாக ஆண்களினால் கொள்ளப்படும்.

● **ஆண்களின் விடுதலையானது பெண்களின் விடுதலையுடன் இவ்வளவுதூரம் தொடர்புபட்டிருக்குமாயின், அவர்கள் இந்தக் கட்டமைப்புக்குள் கட்டுப்பட்டிருக்கிறார்களானால் ஏன் அவர்கள் பெண்நிலைவாதத்தைக் கண்டு அச்சமடைகின்றார்கள்?**

❒ ஆண்கள் பெண்நிலைவாதத்தைக் கண்டு பயப்படுகிறார்கள். தங்களிற்கு உதவியாயிருக்கக் கூடிய ஒரு மாற்றத்திற்கு எதிராக இருக்கின்றார்கள். ஏனெனில், அடிப்படையில் இன்றைய சூழல் அவர்களுக்குப்பலவழிகளில் மிகவும் ஒத்தாசையாக இருக்கின்றது. பெண்நிலைவாதமானது ஆணாதிக்கத்தையும் சமூகத்தில், வேலையில், வீட்டில் ஆண்மேல் நிலையையும் கேள்விக்குள்ளாக்குகின்றது. இது அவர்களுடைய செயற்திறன்மீதானதாக அல்லாமல் பால்மீது கட்டப்பட்ட ஆணதிகாரத்தைக் கேள்வி கேட்பதனால், ஆண்களை அவர்களுடைய நடைமுறைகள், செயற்பாடுகள், நிலைகள் குறித்து மீள் பார்வை செய்வதற்குத் தள்ளுகின்றது. இது சுலபமானதோ அல்லது சந்தோஷப்படக்கூடியதோ அல்ல. அதிகாரத்திலிருக்கும் எவரும் அதிகாரம் கைநழுவிப்போவதை விரும்பமாட்டார்கள்.

இன்றைய கட்டமைப்பில் ஆண்கள் பெறும் நன்மைகள் எண்ணற்றவை. அவர்கள் பிறந்த காலத்திலிருந்து அவர்களிற்கு வழங்கப்படும் அன்பு, பாசம், மரியாதை, மேல்நிலை என்று ஆரம்பித்து இவைகளெல்லாம் ஒவ்வொரு ஆண்பிள்ளைக்கும் பிறப்புரிமைகள் ஆனால் பெண்பிள்ளைக்கு மட்டும் இவையொன்றுமில்லை. எனவே நல்ல உணவு, நல்ல மருத்துவப்பராமரிப்பு, நல்ல கல்வி, ஆண்பிள்ளைகளிற்கு வழங்கப்படுகின்றது. அவர்களிற்கு உடல்ரீதியான சுதந்திரம், தெரிவுக்கான சுதந்திரம் மற்றும் பேசுதலுக்கான சுதந்திரம் இவைகள் உண்டு.

சுதந்திரமான போட்டிபோடும் பெண்களைப்பற்றி ஆண்களுக்கு வேறு பயங்களும் இருந்தன. தங்களுடைய தொழில்களிற்குப் போட்டியாகப் பெண்கள் வந்துவிடுவார்கள் என்று பயம் இருக்கிறது. பெண்களின் முக்கியமான பாத்திரம் வீட்டுத்தலைவி* என்று வரையறுத்தால், அவர்களுடைய உழைப்புதேவைப் படும்பொழுது அவர்களை வாடகைக்கு அமர்த்திவிட்டு தேவையற்றபோது துரத்திவிடலாம். பெண்களின் பாத்திரத்தின் வரைவிலக்கணம் மாறினால், பெண்களுடைய முன்னேற்றத்திற்கான திறமை, அவர்களுடைய தகுதி இவற்றைக் கருத்திலெடுத்த பின்பு அவர்களைப் புறந்தள்ளுவது இயலாத காரியமாகும். எல்லோரும் அவரவர்களுடைய தகுதிக்கேற்றமாதிரி ஆண்-பெண் என்ற பால் அடிப்படையிலல்லாது தொழில்களைப் பெறுவார்கள். இது நிச்சயமாக ஆண்களால் வரவேற்கப்படும் ஒன்றல்ல.

முதலாளித்துவமும் பெண்நிலைவாதத்திற்கு எதிரானது. பெண்களினுடைய பிரக்ஞை மாறினால் அவர்கள் இப்போது செய்யக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும் குறைந்த ஊதிய, குறைந்த நுட்பமான வேலைகள் என்பவற்றை மேலும் சகித்துக்கொள்ள மாட்டார்கள். அவர்கள் (முக்கியமாக அழகுசாதனப் பொருட்களை, தேவையற்ற) அளவுக்கு மீறிய நுகர்வோராவதைத் தடுப்பார்கள். பாலியல் பண்டங்களாக இருப்பதற்கு எதிராகப் போராடுவார்கள்.

சுருக்கமாக, பெண்நிலைவாதம் சமூக அந்தஸ்து நிலைக்குப் போட்டியாவதாலும், சமூகத்தில் அடிப்படை மாற்றத்தைக் கோருவதாலும் (அங்கு ஆண்களின் இப்போதைய நன்மைகள் இல்லாமல் போகும் ஆபத்து இருப்பதாலும்) ஆண்கள் இப்படியான மாற்றத்திற்குப் பயப்படுவதால் பெண்நிலைவாதத்துக்கும் பயப்படுகின்றார்கள்.

● **ஆண்கள் இப்போதைக்கு இதனைப் புரிந்து கொள்ளாவிட்டாலும், காலப்போக்கில் இது ஆண்களுக்கும் பெண்களுக்கும் நன்மைபயக்கும் என்று கூறுகின்றீர்களா?**

❒ நிச்சயமாக. பெண்நிலைவாதிகள் எல்லாவிதமான சமனின்மைகளையும், மேலாண்மையையும், ஒடுக்குமுறையையும் இல்லாதொழித்து நியாயமான சமூக, பொருளாதார ஒழுங்கை வீட்டில், நாட்டில், உலகளவில் உருவாக்குவதற்கு விழைகின்றார்கள். இந்தப் புதிய ஒழுங்கு ஆண்களையும் கட்டாயமாக உள்ளடக்குகின்றது. நிச்சயமாக, இப்படியான சந்தர்ப்பத்தில் அவர்கள் தங்களுடைய ஆண் அதிகாரத்தை, மேலாதிக்கத்தை, ஏனைய அனுகூலங்களை இழக்கத்தான் போகின்றார்கள். ஆனால் சமூகம் பெறப்போகும் நன்மைகளை அவர்கள் வேறுவி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமாக அடைவார்கள். உதாரணத்திற்கு குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு பிள்ளையும் ஆண்/பெண் வேறுபாடின்றி நன்கு வளர்வதற்கு ஊக்குவிக்கப்படுமானால் குடும்பத்திலும் நாட்டிலும் அதிகரித்த திறமையும் சிருஷ்டிப்பும் இருக்கும். குடும்பங்களும் கூடிய வருமானமுள்ளனவாகவும் பொருளாதாரரீதியாக கூடிய சுதந்திரமுள்ளனவாகவும் இருக்கும். அத்துடன் பெண்களிற்கான பாதுகாப்பும், உதவியும் ஒரு நிர்ப்பந்தமாக இல்லாமற்போகும்பொழுது ஆண்களுக்குப் பொருளாதாரப் பொறுப்புகளும் அழுத்தங்களும் குறையும். முக்கியமாக, புதிய சமூகத்தில் தங்களுடைய சொந்த உயர்ச்சிகளைப்பற்றிப் பிரஸ்தாபிக்கமுடியும். 'பெண்களுக்கான' வேலைகள் என்று இப்போது கருதப்படும் வேலைகளைச் செய்யமுடியும். அவர்கள் வீட்டிலிருக்க விரும்பினால் அல்லது அவர்களால் இப்போது செய்யமுடியாதென்றுவிட்ட சகல செயல்களையும் அவர்களால் செய்யமுடியும். பெண்நிலைவாதமானது ஆண்களையும், சமூகம் ஆண்கள்பற்றி வைத்திருக்கும் விம்பங்களிலிருந்து அவர்களையும் விடுவிக்கும்.

**● பெண்நிலைவாத இயக்கத்தினால் ஆண்களுக்கும் நன்மை பயக்குமென்றால், ஏன் பெண்கள் பொதுவாக தங்களுக்குள்ளேயே பெண்கள் குழுக்களைக் கட்டியமைக்கின்றார்கள்?**

❒ முதற்படியாக, பெண்களிற்கிடையில் ஒரு குறிப்பிட்ட பொதுவான அக்கறை இருக்கும் எண்ணத்துடன் பெண்களின் இயக்கம் இப்படியாகக் கட்டப்படுகின்றது. பெண்நிலைவாத இயக்கம் எல்லாருக்கும் நன்மை பயக்கக்கூடிய ஒரு சமூகத்தை முன்மொழிகின்ற அதேவேளையில், போராட்டத்தின் சில குறிப்பிட்ட நிலைகளில், வேறுஅமைப்புகளுடன் வேலைசெய்யும்போது, தங்களுடைய ஒடுக்குமுறையின் தன்மையைப் புரிந்து கொள்வதற்கும், இந்த நிலையை மாற்றுவதற்கான திட்டமிடலுக்கும் அவர்கள் தங்களுக்குள் இணைவது அத்தியாவசியமாகின்றது. இதிலுள்ள நியாயப்பாடானது, ஏனைய ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் சுயநிர்ணய உரிமைக்கான உறுதுணைக்குப் பாவித்ததிலிருந்து எந்தவிதத்திலும் வேறுபட்டதல்ல. உதாரணத்திற்கு நாங்கள் தலித் அல்லது தொழிலாள போராட்டங்களுக்கு உறுதுணையாக இருக்கின்றோம். நாங்கள் இன/வர்க்க, தேசிய சுயநிர்ணய உரிமைப் போராட்டங்களிற்கு உறுதுணையாக இருக்கின்றோம். பெண்களின் இயக்கம் இங்கு அதிக வலுப்பெறுகின்றது. ஏனெனில் இந்தப் பிரச்சனையானது மிகவும் சிக்கலானதும் நீண்டகாலமாக இருந்து வருவதுமாகும். இதனுடைய இறுதித்தீர்வு ஒரு குழுவின்மேல் இன்னொன்று வெற்றிவாகை சூடுவதல்ல. (இந்தச் சந்தர்ப் பத்தில், பெண் ஆணின்மேல்) ஆணினால் சமூகத் தின் எல்லா விஷயங்களிலும் ஒரு மீள்சிந்தனை, ஒரு மீளமைப்பு. ஏனைய வர்க்கங்கள் தந்தைவழி ஆதிக்க/ஆணாதிக்க அமைப்பினுள்ளேயே தங்களுடைய குறிக்கோள்களை அடையமுடியும்; தங்களுடைய விரோதிகளை வென்றோ அல்லது அழித்தோ அவர்கள் வெற்றியை அடையமுடியும்; அவர்கள் உள் வர்க்க, சாதி, மத, இன வேறுபாடுகளற்ற ஒரு பொதுக் காரணத்தைக் கண்டுபிடிக்கமுடியும். ஆனால் பெண்கள் அமைப்பு/இயக்கம் இவைகளில் எதையும் செய்யமுடியாது. அது அதனுள்ளேயே வர்க்கம் மற்றும் வேறுபாடுகளைக் களைந்து வெல்லுதல் வேண்டும். அது சமூகத்தின் சாராம்சத்தை மாற்ற வேண்டும்; அது விரோதப்போக்கைத் திசை திருப்ப வேண்டும். இந்தவிதத்தில் இது எல்லாவற்றையும்விட மிகக்கஷ்டமான போராட்டமாகும். பெண்கள் தங்களை எந்தவிதமான நடைமுறையுடன் அடையாளம் காட்டுகின்றார்கள் என்பது முக்கியமானது. இன்னொரு வகையில் கூறினால், வித்தியாசமான வேறு வேறு பெண்கள் அமைப்புகள் தேவையாகவும் முக்கியமானதாகவும் இருக்கின்றன. ஆனால் இவை ஒரு படிநிலை மட்டுமே. சமூகத்தின், ஏற்கனவே இருக்கும் ஸ்தாபனங்களின் நடைமுறைகளின் அடிப்படை மாற்றங்களுக்காக படிப்படியாக இந்த அமைப்புகள் இணைந்துகொள்ளும். ஆனாலும்கூட நாங்கள் வேறு வேறு பெண்கள் குழுக்களாக இருந்த போதிலும் எங்களுக்கு ஆதரவான ஆண்களையும் அவர்களுடைய ஆதரவையும் வரவேற்கின்றோம்; பாட்டாளிவர்க்க, கிராமத்துக் குழுக்களினுடைய போராட்டங்களிலும் சிவில் உரிமைகளிற்கான மனித உரிமை களிற்கான, சிறுபான்மை உரிமைகளிற்கான, சுற் றுப்புற சூழலிற்கான போராட்டங்களில் இணைந்து கொள்கிறோம்.

முடிவாக நாங்கள் என்ன சொல்லவிரும்புகின்றோமென்றால், பெண்நிலைவாதமானது எங்கள் சமூகத்திற்குத் தேவையானது மட்டுமல்ல, இதில் பங்கு கொள்ளும் (இதை வரையறுப்பதில், செயற்படுத்துவ தில், ஒழுங்கமைப்பதில், சீராக்குவதில், அதனுடன் வாழ்வதில்) அனைவருக்கும் இது பெரிய உத்வேகத்தைக் கொடுக்கும் என்றும் கண்டுகொள்கின்றோம்.

ஏனைய பல 'இசம்'கள் தர மறந்ததை அல்லது தரமுடியாததை பெண்நிலைவாதம் தரமுடியும் என்று நாங்கள் நிச்சயமாக நம்புகின்றோம்; இவற்றில் அநேகமானவை மனித குலத்தின் பாதியை மறந்தன அல்லது புறக்கணித்தன. அவர்கள் சமூக பொருளாதார அல்லது ஸ்தூலமான யதார்த்தங்களை மட்டும் கருத்தில் கொண்டு, உடல், உணர்ச்சிகள் சம்பந்தமான பகுதியை முற்றாக ஒதுக்கினார்கள். பெண்நிலைவாதக் கண்டுபிடிப்புகளின் நீண்டபாதையின் இறுதியில் ஒரு ஒளியைப் பெண்நிலைவாதிகள் காணுகிறார்கள் - நியாயமானதும் மனிதாபிமானதுமான ஒரு சமூக ஒழுங்கை நோக்கி இந்த ஒளி எங்களை அழைத்துச் செல்கிறது; இதற்காகத்தான் எல்லாப் பிரச்ச



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னைகளிலும் (பொருளாதார, சமூக, அரசியல், கலாச்சார) பெண்நிலைவாதம் தனது நோக்கை அல்லது பார்வையை அபிவிருத்தி செய்வதற்கு முயலுகிறது.

இது மனவெழுச்சி கொள்ள வைக்கின்றது. ஏனெனில் இது எங்களுக்கு ஒரு சவாலாக அமைகின்றது. எதையும் மீள் பார்வை செய்தல், மீள்வரைவு செய்தல், அநேகமான மிக நெருங்கிய உறவுகளை, மிகத் தனிப்பட்ட நம்பிக்கைகளை, எங்களுடைய மனதிலும் இதயத்திலும் அதிகம் பாவிக்கப்படாதிருக்கும் தளங்களை மாற்றுதல். முதன்முறையாக ஒரு 'இசம்' சமூகத்தின் எல்லாத் தளங்களிலும், தனிப்பட்டமுறையிலும் மிகவும் ஆழமான மாற்றத்தை முன்மொழிகின்றது.

இது மனவெழுச்சி தரக்கூடியது ஏனெனில் இது முடிவாக எங்களிற்காக எங்கோ யாரோ ஒருவரால் வரையறுக்கப்பட்டதல்ல. நாங்கள் எல்லோரும் பெண்நிலைவாதம் என்பதன் கருத்தாக்கத்தைக் கண்டுபிடிக்கும் நடைமுறையில் பங்குகொள்ள வேண்டும்/பங்குகொள்ள முடியும். பெண்நிலைவாதத்திற்கான ஒரு கருத்தாக்கத்தைக் கொண்டுவந்தால் அது எல்லாருக்குமான போராட்டத்தையும் இலகுபடுத்துவதற்கு பிரயோகிக்கக்கூடியதாக இருக்கும் என்று அநேகர் யோசிக்கலாம். ஆனால் இப்போது தோன்றுகின்ற கருத்தாக்கத்தின் இன்றைய மாறிக் கொண்டிருக்கின்ற அல்லது நிலையற்ற இந்த நிலை ஒரு கூடாத விஷயமல்ல. ஏனெனில் முதன்முறையாக ஒரு கோட்பாட்டு உருவாக்கத்தின்முன், எல்லாநிலைகளிலும் வாழ்க்கைமுறையில் பரீட்சிக்கப்படுகின்றது. எங்களிற்கு இது கற்றுக்கொள்வதற்கும் கண்டுபிடிப்புகளிற்குமான முக்கிய செயன்முறையாகும். அத்தியாவசிய மானதாக, இச்செயன்முறை மெதுவானதும் நிச்சயமில்லாததுமாகும். இதனால்தான் பெண்நிலைவாதிகளிற்கிடையில் கூட இதில் வேறுபாடுகள் உள்ளன. ஏனெனில் நாங்கள் எல்லோரும் செயன்முறையின் வெவ்வேறுவிதமான படிநிலைகளில் கற்றுக் கொண்டிருக்கின்றோம். ஏனெனில் பெண்நிலைவாதம் வாழ்க்கையின் உண்மையான அனுபவங்கள் பற்றியது. அதனுடைய திட்டவட்டமான வடிவம் வெவ்வேறு சமூகங்களில் வேறுபடலாம். எங்கள் கருத்தாக்கத்தின் இந்த நிலையற்ற (ஆனால் வளரும், கிளைவிடும்) நிலை எதிர்நிலையில் உள்ளவர்களிற்கு பாதகமானதாக இருக்கலாம்; எங்களிற்கு இது சாதகமானதே. கருத்தாக்கத்திற்கு அல்லது கோட்பாட்டுருவாக்கத்திற்கு வரும்போது பரீட்சித்துப் பார்க்கப்பட்டிருக்கும்.

**நாங்கள் தாய்மை என்பது ஒவ்வொரு பெண்ணுக்குமான தலைவிதி என்று கருதவில்லை. அல்லது தாய்மையையும் பெண்ணையும் சமப்படுத்த விரும்பவில்லை.**

கருத்தாக்கத்தை உருவாக்கும் செயன்முறையிலும் எங்கள் ஒவ்வொருவருக்குமான நல்ல வாழ்க்கையொன்றை உருவாக்குவதிலும் பங்குகொள்வதற்கு நாங்கள் உங்களை அழைக்கின்றோம். ■

**பெண்நிலைவாதத்தைக் கண்டு அச்சம் கொள்ளவேண்டாம். எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள்.**

* இந்த உரையாடலில் housewife என்னும் ஆங்கிலப்பதத்திற்கு வீட்டுத்தலைவி என்னும் சொல் பாவிக்கப்பட்டு இருக்கிறது. இது முற்றிலும் சரியானதல்ல. இல்லாள், இல்லத்தரசி, மனைவி, குடும்பத்தலைவி என்ற சொற்பதங்கள் எல்லாம் wife என்ற ஆங்கிலச்சொல்லுக்கு இணையானவை என்று கொள்ளலாம்.
ஆனால் housewife என்று பாவனையில் வரும்போது வீட்டோடு இருக்கும் பெண் என்று அர்த்தப்படுத்தப்படுகிறது. தமிழ்மொழியில் இதனுடன் வீட்டைச் சேர்த்துக்கொள்ளும் தேவையை நமது ஆண்மொழியியலாளர்கள் வைக்கவில்லை. ஏனெனில் பெண்ணை ஆணோடு சேர்க்கும்போது வீட்டையும் சேர்த்துத்தான் என்னும் அர்த்தத்திலேயே தமிழ்மொழியில் சொல்லமைவுகள் வழக்கத்தில் இருந்துவருகின்றன.
வீட்டில் செய்யப்படும் வீட்டுவேலைகளை பொதுவானதாக எடுத்துக்கொள்ளாமல் (வீட்டில் இருப்பவர்கள் அனைவரினதும் பங்கீடாக இல்லாமல்) அல்லது அதை ஒரு தொழிலாக அங்கீகரிக்காமல், பெண்ணுடன் மட்டும் பிணைத்துவிட்ட ஆணாதிக்கச் சொற்கள்தான் அனைத்தும்.
வீட்டுவேலைகளும் ஒரு தொழிலாக அங்கீகரிக்கப்படும்போது வீட்டுத்தலைவி என்ற சொல் உட்பட ஆணுடன் சேர்ந்து வாழும் ஒரு பெண்ணைக் குறிப்பதற்குப் பாவிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் அனைத்துச் சொற் பிரயோகங்களும் (இல்லாள், இல்லத்தரசி, மனைவி, குடும்பத்தலைவி) இல்லாதொழிக்கப்படும். (மொ-ர்)

**இவ்வுரையாடல்களில் இருந்து மேலும் புதிய கருத்துக்களைத் தெரிவிப்பின் அது பெண்நிலைவாதம் தொடர்பான அறிதலை மேலும் வளர்க்க உதவும்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# Les Sources

Laure

**En rentrant aux "Sources", Henri prit le cahier neuf qu'il s'était procuré afin d'y écrire sa vie, ou un journal, ou peut être des histoires... Comme il ne savait pas comment l'intituler, il laissa vierge la page de garde. Par où commencer? Il verrait bien ce qui viendrait sous sa plume. Il ne réussit qu'à se voir écrire : "Dimanche 23 novembre. Annette est morte. Moi aussi." Ce journal, ce n'était sûrment pas une bonne idée.**

Le Silence se fit lorsqu' Henri pénétra dans l'ascenseur. La doyenne K. dodelina de sa tête blanchie du 7$^e$ au rez-de-chaussée. Martial G. s'efforça de placer son fauteuil roulant de manière à sortir le premier. Marthe A. et Jean V. restèrent agrippé l'un à l'autre, dans l'éclat douteux de leurs yeux usés. Hormis Henri, tous émirent un bref "Ah" quand les portes ouvriront sur le hall d'entrée.

Après la mort de Délie, Henri s'était enfermé chez eux près de deux ans. Il avait ensuite convenu que la claustration lui pesait et s'était installé à la "Résidence Les Sources" le 4 janvier, alors qu'on décrochait les guirlandes en cassant quelques boules. Leurs deux fils n'osèrent pas suggérer de vendre l'appartement, qui demeura ainsi en l'état.

Henri roula jusqu'a la loge, se leva lestement de son fauteuil, qu'il plia aussitôt pour le confier au concierge le temps d'une évasion. Si l'on ne l'avait jamais vu debout à l'intérieur de la maison de retraite, personne n'ignorait cette récurrente métamorphose. Valide ou non, chacun recevait comme une humiliation le fait qu' Henri ne daignât marcher que "dehors". Seule une toute petite Astrid M., vieille fille démesure fripée, y révérait le signe d'une admirable passion pour sa défunte épouse. Elle croyait, sans aucune preuve, que le fauteuil roulant incriminé avait appartenu à ladite Délie.

Ceux qui se trouvaient présents se précipitèrent lentement vers les baies vitrées pour s'abîmer dans la contemplation de cette guérison perpétuellement miraculeuse.

"A voir comment qu'y s'est mis, y va par chez c'te fille!" cria la grosse Rosemonde. Marthe A. et Jean V. signifièrent leur retrait, dignes, d'une telle conversation, par un "Oh!" réprobateur mais avide. Avec une curieuse vivacité, les autres tendirent le cou.

✧✧✧✧

Henri, trop en avance pour attendre l'heure du rendez-vous, s'engouffra dans le bâtiment du CNRS, courant presque pour abréger son malaise d'oser pareille transgression. Avec son air le plus "septuagénaire", il se fit indiquer le bureau d'Annette et se jeta dans l'ascenseur. Il vit par la lucarne qu'elle arpentait d'un bon pas, absorbée, ses 12 m$^2$. En poussant la porte, il l'arrêta net. Il lui prit doucement le cou entre ses mains, et le visage d'Annette perdit la moitié de ses vingt-huit ans. Elle lui donnerait tout, elle serait sa fille et sa mère, sa femme et sa maitresse, son ange et son démon.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

◇◇◇◇

Aux caissières du supermarchés "ceux des Sources" ne racontaient plus *leur vie* - qu'ils reduisaient eux-mêmes à un discours informe sur de très menues quotidiennetés - mais des histoires sur "c'te fille" qui voulait sûrement se récupérer l'héritage d'un des leurs, et même qu'elle le tuerait certainement, à lui faire faire des choses *plus de son âge*; c'est bien une honte, alors on a écrit à ses fils, c'est pour son bien, il faut quand même pas tout laisser faire, hein!

La boulangère avait incité le buraliste à doubler son appovisionnement, le jour où *Le Monde* publia un portrait d' "elle". (Il y avait avec un article s'enthousiasmant pour les recherches révolutionnaires d'Annette sur les formes du don dans l'Egypte pharaonique.) Tout le quartier pouvait maintenant la reconnaître.

◇◇◇◇

Surprise en pleine effervescence intelleuctuelle par un coup de sonnette, Annette courut ouvrir : elle vit soudain deux têtes de cadres s'encadrer dans sa porte, avec deux paires de lunettes, deux cravattes et deux âges indéfinnissables mais sérieux. "On dirait des huissiers, non, des notaires, ou des croque-morts" pensa-t-elle; mais elle dit simplement "Heu" parce qu'après tout, sa connaissance de ces professions ne provenait que de la litterature, or là, ils étaient dans la réalité - enfin peut-être?

Les deux cadres se révélèrent être ingénieur, haut fonctionnaire et fils d' Henri. La beauté inquète de "la... l'a - mie" de leur père avait à la fois confirmé leurs soupçons et embarrassé leur élocution, si bien qu'Annette mit une demi-heure à comprendre qu'elle était accussé de captation d'héritage - et encore, parce qu'elle venait de relire *Ursule Mirouët*. Elle ne sût que sourire et répondre "Heu, non". Ils sortirent après les quelques minutes de silence qui suivirent cette éloquante réplique.

Abattue, elle s'écrassa dans son fauteuil et laissa ses yeux errer sur un compte-rendu de son ouvrage *Qu'est-ce qu'un don? L'échange sacré en Egypte*, jusqu'à ce qu'elle aperçut que le journaliste y avait relevé une faute d'impression qui faissait contre-sens. Elle fondit en larmes, oublia ses clefs et dévala l'escalier pour aller se réfugier auprès d' Henri.
Toute pleine de pleurs encore, à la station d' Henri, Annette avisa une petite vieille hésitant au bas de l'escalier. Comme elle lui prenait le bras pour l'aider, la vielle tourna vers elle un gentil visage qui se contracta aussitôt pour éructer : "*VOUS*, ne me touchez pas, espèce de *fille!*". Annette ouvrit la bouche pour un cri silencieux, les mains sur les oreilles pour ne plus entendre, elle recula, recula, recula tant qu'elle glissa sous le métro suivant.

◇◇◇◇

Henri savait pourquoi il y avait beaucoup d'hommes à l'enterrement d'Annette. Pour eux tous elle représentait le génie et l'angoisse, la puissance de travail et le déchainement érotique; pour lui, elle était la Joie. Ils comprirent que son visage les avait éclairées, *cette nuit-là*, par la pureté du don sans réserve qu'elle avait fait à chacun de tout l'amour, qu'elle s'était épuisée à retrouver sans cesse pour sans cesse l'offrir. Jusqu'à Henri. Donner absolument, avec une telle violence érotique, cela avait été, faute de comparaison possible, ce qui s'apprentait le plus à être aimée. "Nous avons seulement su prendre, comme des cons, *lui* il savait recevoir".

En rentrant aux "Sources", Henri prit le cahier neuf qu'il s'était procuré afin d'y écrire sa vie, ou un journal, ou peut être des histoires... Comme il ne savait pas comment l'intituler, il laissa vierge la page de garde. Par où commencer? Il verrait bien ce qui viendrait sous sa plume. Il ne réussit qu'à se voir écrire : "Dimanche 23 novembre. Annette est morte. Moi aussi." Ce journal, ce n'était sûrment pas une bonne idée.

◇◇◇◇

La grosse Rosemonde cria encore plus fort pour couvrir le bruit de ferraille d'une civière qu'on montait : "Eh ben y fait plus tant son fier, le joli coeur. L'ose plus s'faire voir!". Les têtes acquiescèrent en une vague tremblotante. Quand la civière redescendit, sous le drap, il y avait Henri.

La vieille fille, Astrid M., pleura de dépit cet homme duquel elle avait projeté d'apprendre *le devoir conjugal*. C'était sûr qu'il l'aurait épousée, puisqu'il n'avait plus "la petite". Qu'elle ne lui eût encore jamais adressé la parole ne changeait rien; elle avait préparé des phrases qui lui aurait bien fait voir toute son âme, la prochaine fois qu'elle l'aurait vu. Parce que l'amour, c'est tout de même pas des mots, c'est l'assemblage des âmes (et des corps). ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# + கூட்டலும் கழித்தலும் —

■ "ஈழத்துப் பெண் கவிஞர்கள், அவுங்க இந்தக் காலத்துல, அந்த நெருக்கடியை ஒட்டிய கவிதைகளைத்தான் எழுதமுடியும். அவர்கள் பிற்காலத்தில் நல்ல கவிதைகள் எழுதுவார்கள் என்பதற்கான சூசகங்களாகத்தான் இருக்கு. இப்ப எழுதியிருக்கிறது நல்ல கவிதைன்னு சொல்ல மாட்டேன்."

அம்பை
ஜனவரி - மார்ச் 98
காலச்சுவடு, நேர்காணலில்

நல்ல(?) கவிதைகளைத் தேடிக்கொண்டிருக்கிறோம்.

நடையின்போது
பல காலடிகளின்
மிதிபட்ட
ஓர் கணத்தில் கிழிபட்டு
காலம் எங்களை விட்டு
இறந்து கொண்டிருக்க
ஞானோதயம்
எந்த இடத்தில்
எந்த இடமென்று
சுயமாக ஒன்றுண்டா
அதன் முன்னால்
மேலே
அருகருகாகவென்று
சார்ந்து சார்ந்து இருப்புக்கள்
எந்த இடம் - தோழிபுடன்
நடந்து கொண்டிருந்த
மிதிபட்ட படிக்கட்டு

1998 March

அட்டைப் படம்:
'தாயும் இறந்த குழந்தையும்'II, 1937
பபிலோ பிக்காசோ
'நன்றி' Art and Power,
Europe under the dictators 1930-45

■ "கலைஞர்களுக்கு பட்டம் கொடுத்துக் கௌரவிப்பதுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"
அது கொடுப்பவர்களும் வாங்குபவர்களும் சம்பந்தப் பட்ட பிரச்சனை.

மனோகரன் (ex-ஓசை. அம்மா ஆசிரியர்)
பாரீஸ் ஈழமுரசு (02-08 ஏப்ரல் 98) பேட்டியில்

'சபாஷ்!'...... .சரி(வா)யா.....ன பதில்!

■ "தமிழ் வளர்க்க தமிழன் வேண்டும்."
சி.சிவசேகரம்
(தினமணி பேட்டியிலிருந்து) 12.04.98 தினகரன்

தமிழை வளர்க்கவும் ஆண்தானா தேவை?

■ "அகஸ்தியர் மார்க்சியச் சிந்தனைகளின் போக் கில் சிறுகதைகள் எழுதியுள்ளார் எனச் சொல்லி மார்க்சியத்தைக் கொச்சைப் படுத்தவேண்டாம் என்று உரிமையுடன் கேட்டுக் கொள்கின்றேன்."

ஷோபாசக்தி
அகஸ்தியர் 14.12.97 நினைவஞ்சலிக் கூட்டத்தில் (பாரிஸ்)

ஹீ .....! ஹீ.....! ஹீ.....! உரிமை............. ?

■ "சத்தியஜித்ரே போன்றோர் படைப்புகளை விஞ்சி விட்டதாக மிஞ்சிய விமர்சனங்களை முன்வைப்பது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும்."

D.B.S. ஜெயராஜ்
'முகரம்' ஐப்பசி 97, 'முகம்' திரைப்பட விமர்சனத்தில்.

சொன்னா நம்ப மாட்டாங்கள்!

■ "புகலிட இலக்கியங்களுக்கு இன்னும் அங்கீகாரம் கிடைக்கவில்லைத்தான். அதுபற்றிக் கவலை கொள்ளத் தேவையில்லை. எப்பவாவது ஒருநாள் கிடைத்தே தீரும்."

இரா. வெங்கடாசலபதி(தமிழ்நாடு)
சந்திப்பு ஒன்றில் (பாரிஸ்)

யார் கேட்டார் இந்த அரியாசனம்?

■ எப்போதும் பாலுறவின்போதும்கூட ஆண்களின் அதிகாரத்துவப் பாலுறவு நிலவிவருகிறது. ஆண்களுக்கு தேவையான போது பாலுறவுக்கு தயாராய் இருத்தல், ஆணின் தேவைக்கிணங்க வளைந்து கொடுத்தல் என்பன சாதாரணமாக நிலவுகிற விடயம். எனவேதான் இப்படியான லெஸ்பியன் போக்குக்கு ஆணாதிக்கம் பயப்படுகிறது.

சுனிலா அபேசேகர
சரிநிகர் - 142 -

என்ன செய்வது வயித்தில புளி சில முற்போக்கு முத்திரைகளுக்கு!.


www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அரவிந் அப்பாதுரை

# தமிழ் இலக்கியச் சூழலில் கலைஇயக்கங்கள்

அபத்தநாடகம், வளைவு நடை இலக்கியம் (non linear litterature), ஓங்கிய யதார்த்த தேடல்கள் (surrealisme), என்று இன்றைய தமிழ் இலக்கிய சூழலில், பல திசைகளில் படைப்பு முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இக்கால கட்டத்தில், கலை அல்லது இலக்கிய இயக்கம் என்றால் என்ன என்பதை, மீண்டும் ஒருமுறை சிந்தித்துப் பார்ப்பது நல்லது என்று கருதுகிறேன்.

## புதிய கலை இயக்கம் ஒன்று எப்படிப் பிறக்கிறது?

ஞானசாஸ்திரம் போதிக்கும் சிந்தனை முறைகள், விஞ்ஞான வளர்ச்சி: அதனால் ஏற்படும் மாற்றங்களின் விளைவுகள், அரசியல் சூழ்நிலை, பொருளாதார அமைப்பு போன்ற அம்சங்கள் மனிதவாழ்வில் ஏற்படுத்தும் தாக்கத்தின் விளைவாக ஏற்படும் ஆன்மீகத் தேவைகளை அணுகி அவைகளைப் புரிந்து கொள்ளவும், வெளிப்படுத்தவும் தோன்றுகின்றன கலை இயக்கங்கள். இவற்றைப் புரிந்துகொள்ள 1920ம் ஆண்டுகளில் ஒருபுறம் ருசியாவில் 1917ம் ஆண்டின் புரட்சிக்குப் பின் கலைஞர்கள் கன்ஸ்ட்ரக்டிவிசம் என்ற இயக்கத்தை இயற்றி பின்பற்றினார்கள். அதே காலகட்டத்தில், முதல் உலகப்போரினால் ஏற்பட்ட சேதத்தைப் பொறுக்கமுடியாமல், அந்த நிலைக்கு உலகை அழைத்து வந்த அரிஸ்டாட்டலின் ஞானசாஸ்திரத்தை மாற்றி, புதிய உலகை உருவாக்கவேண்டும் என்ற மனநிலை உருவாக்கியதுதான் சர்ரியலிசம்.

ஒரு காலகட்டத்தில் தோன்றும் கலைஞர்களின் மத்தியில் நிலவும் மனோபாவமும் ஒரு கலை இயக்கம் பிறப்பதற்கு முக்கிய காரணமாக விளங்குகிறது. ஏனென்றால், மேற்கூறிய விடயங்களின் ஆற்றலினால் இந்த இயக்கத்தில் பங்குபெறும் கலைஞர்களின் அனுபவங்களில், ஒரு தனித்துவத்தையும் அந்தக் காலகட்டத்தில் வாழ்ந்த ஒவ்வொரு கலைஞனின் தனிமனித அனுபவத்திற்கும் இடையில் சில உறவுகள் இருப்பதையும் அறியலாம். உதாரணத்திற்கு 19ம் நூற்றாண்டில் புகைப்படக்கலை கண்டுபிடிக்கப்பட்டபின் ஓவியத்தின் தேவை குறைந்துவிட்டதாக சமூகத்தால் கருதப்பட்டது. அதற்கு பதில் சொல்லும் வகையில் இம்பிரெசனிசம் தோன்றியது. இம்பிரெசனிசத்தின் கொள்கை (ஓவியத்தைப் பொறுத்தமட்டில்) வடிவத்திற்கு செலுத்தும் கவனத்தைக் குறைத்து, காட்சிகளிலிருந்து வெளிவரும் வண்ண ஒளி சூழலை மட்டும் (atmosphere), படம் வரைந்து தரலாம் என்பது. இம்பிரசனிசத்தின் முக்கிய பிரதிநிதிகளுக்குள் இருந்த கடிதப் போக்குவரத்து அவர்களுக்குள் இருந்த மனநிலை ஒற்றுமையை நிரூபிக்கும் வண்ணம் அமைந்துள்ளது.

## ஐரோப்பிய கண்டம், இந்தியக் கீழ்கண்டம் : இரு கலை இக்கச் சரித்திரங்கள்

ஐரோப்பிய கண்டத்தின் ஞான சாஸ்திர வரலாற்றை அவதானித்தோமானால், சாக்ரட்டீசுக்கு முன் தோன்றிய ஞானசாஸ்திரிகளிலிருந்து தற்கால ஞானசாஸ்திர தேடல்கள்வரை ஒரு தொடர்ச்சி இருப்பதைக் காணலாம். அதேபோல் கலைஉலகிலும் ஒன்றன்பின் ஒன்றாக இயக்கங்கள் பிறப்பதையும், பின் வாழ்ந்து மடிவதையும் அவதானிக்க முடிகின்றது. கி.மு. 5ம் நூற்றாண்டிலிருந்து உருப் பெற்ற புதிய கலை 'இயக்கங்கள்' ஐ அவதா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னித்தோமானால் கீழ்வரும் பட்டியலை இயற்றலாம்.


கி.மு. 5ம் நூற்றாண்டு - கிரேக்க நாகரிகம் வடிவ லட்சணங்களை வரையறுத்த காலம். கட்டடக் கலை, சிற்பக்கலை, நாடகம் ஆகியவற்றின் ஊடாக கலைவடிவங்களின் அளவுகோல்கள் உருவாக் கப்பட்டன.

கி.பி. வந்த நூற்றாண்டுகளில் கிறித்துவமதம் மத்திய அரேபியக்கண்டம் மேலும் ஐரோப்பிய கண் டத்தின் சிலபகுதிகளிலும் நிறுவப்பட்ட காலம். இக் காலகட்டத்தில் கிரேக்க வடிவ லட்சணங்களின் மவுசு குறைந்துவிட்டது.

பின் மத்தியகாலம், இது கிட்டத்தட்ட ஆயிரம் ஆண்டுகள் நீடித்தது. இந்தக் காலகட்டத்தில் கலை உலகில் பெரிய கண்டுபிடிப்புக்களோ, படைப்புகளோ இல்லாவிட்டாலும், கலைஇருள் சூழ்ந்த இப் பத்து நூற்றாண்டுகளில் மறுமலர்ச்சி (15ம் நூற்றாண்டு) காலத்தின் படைப்புகள் சூல்கொண்டன. இதன் விளைவாக மறுமலர்ச்சி காலம் தொடங்கியது.


மறுமலர்ச்சி (Renaissance) - ப்ருய்னலெச்சி என்ற இத் தாலிய கலைஞர் கணிதத்தின் துணையுடன், காட்சி மெய்யியலை (Perspective theory) இயற்றி நிருபித்தார். அதற்கு முன் தட்டையாகவும், மேலும் கீழுமாகவும் பரிமாண பொருத்தம் இல்லாமல்தான் ஓவியங்கள் வரையப்பட்டு வந்தன. காட்சி மெய்யியலைப் பின் தொடர்ந்து வரையப்பட்ட ஓவியங்கள், நாம் நிஜ வாழ்க்கையில் காணும் காட்சிகளைப் போன்ற மாயையை சுவர், துணி, காகிதம் போன்ற இரு பரி மாணம் கொண்ட பொருட்களின் மீது வரையப் பயன் பட்டது (illusion of ambient space on plans or bi-dimensionel supports). மறுமலர்ச்சியின்போது கட்டடக்கலையி லும் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டன.

பிறகு கிளாசிக்கல், நியோ கிளாசிக்கல், ரோமா ன்ரிக், இம்பிரசனிசம், எக்ஸ்பிரசனிசம், ரியலிசம் (யதார்த்தம்), நாச்சுரலிசம், சர்ரியலிசம், எக்சிஸ் டென்சியலிசம், போஸ்ட் மாடர்னிசம் என்று ஒன் றன்பின் ஒன்றாக ஒவ்வொரு இயக்கமும் தனித்துவம் நிறைந்த அழகியல் கோட்பாடுகளுடன் உயிர் பெற்றன.



இந்திய சிற்ப வடிவங்கள்

சர்ரியலிசம் (ஓவியர்: சல்வடோர் டாலி)



ஒவ்வொரு இயக்கம் பிறப்பதற்கும்,

இவையாவும் ஐரோப்பிய சூழ்நிலைகள் பெற்றெடுத்த சிந்தனைப் போக்குகள். இந் திய கண்டத்தின் சூழ்நிலை முற்றிலும் வேறாக இருக்க இவ்வியக்கங்களை இறக்கு மதி செய்வது சாத்தியமா?

விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களை (மின் சாரம் போன்றவற்றை) இறக்குமதி செய்வது சாத்தியம். இவை வாழ்வின் வேலைச் சுமையை குறைக்கப் பயன்படுகின்றன. ஞான சாஸ்திரம் மேலோங்கிய போதனைகளைத் தருவதால் அச் சிந்தனைகள் எங்கு தோன் றினாலும் அவற்றை எல்லோரும் பயின்று பய னுறலாம். மதங்கள், நம்பிக்கையை அஸ் திவாரமாக கொண்டு வளர்வதால் அவற்றை இறக்குமதி செய்வது சாத்தியம். ஆனால் கலை இயக்கங்கள் மேற் கூறியதுபோல், ஒவ் வொரு நாகரிக வளர்ச்சியின் கண்ணாடியாக விளங்குவதால் அவற்றை வேறு நாக ரிகங் கள் வழங்கும் நாடுகளுக்கு இறக்குமதி செய் தல் சாத்தியமா என்பது கேள்விக்குறி. அப்ப



தமிழத தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டியே பிடிவாதமாக இறக்குமதி செய்ய முற்பட்டாலும் உயிரற்ற உடலை இறக்குமதி செய்வது போலாகும். இருப்பினும் ஒவ்வொரு கலை இயக்கமும் படைக்கும் சிந்தனைகள் வேறு மாகாணங்களில் வழக்கத்தில் இருக்கும் கலைக்கோட்பாடுகளை சிந்திக்கவும் தேவை இருக்குமெனில் திருத்தி அமைக்கவும் பயனாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

## இந்திய கீழ்க்கண்டத்தில் கலைக் கோட்பாடுகள்.

ஓவியம், சிற்பம், கட்டடகலை(சிற்ப சாஸ்திரம்), நடனம் (நாட்டிய சாஸ்திரம்) மற்றும் எந்தக் கலை யாகினும் அவற்றின் அழகியல் கோட்பாடுகள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னமே இந்தியாவில் இயற்றப்பட்டுவிட்டன. அவைகளின் புனித தன்மையை இனம் கண்டுகொண்ட நம் முன்னோர்கள் அவற்றை வேதங்களுடன் இணைத்துக் காப்பாற்றி வந்தார்கள். உபவேதத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் சிற்ப சாஸ்திரத்தை ஸ்தாபத்திய வேதம் என்றும் அழைக்கின்றோம். இவை இயற்றப்பட்ட காலகட்டத்தின்பின் வந்த கலைஞர்கள் அவற்றிற்கு சிறிய மாற்றங்களைச் சேர்த்து அவற்றை பயன்படுத்தினார்களே தவிர கலைவடிவங்களின் அஸ்திவாரங்களைப்பற்றி திரும்ப சிந்திக்கவேண்டும் என்ற தேவை இந்திய மண்ணில் எழுந்ததாகத் தெரியவில்லை.

ஆங்கிலேயரின் ஆட்சி இந்தியாவிற்கு வந்தபின்



இந்திய சிற்ப வடிவங்கள்

- பெண்ணியம் : ஆண்-பெண் சமஉரிமை என்ற காலம் வரும்வரை தமிழ் சமுதாயத்தால் பெண்களுக்கு இழைக்கப்படும் இன்னல்களுக்கு கண்டனம் தெரிவிக்கவும், சமஉரிமைக்குப் போராடவும் ஒரு இயக்கம் தேவை. கலைப் படைப்புக்களையும், கட்டுரைகளையும் ஆயுதமாகக்கொண்டு இந்த இயக்கம் செயற்படலாம்.
- இடம்பெயர்ந்த தமிழர் : இன்று உலகின் பல நாடு களில் தமிழர் வெவ்வேறு காரணங்களுக்காக வசிக்கிறார்கள். அவர்களுடைய அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள ஒரு இயக்கம் நிச்சயமாகத் தேவை.

னும், இந்திய அறிவு ஜீவிய சமுதாயத்திற்கு கொண்டுவரப்பட்ட ஆய்வுமுறைகள்கூட இந்தியக் கலைக் கோட்பாடுகளைப்பற்றிச் சிந்திக்க வேண்டிய தேவையை ஏற்படுத்தவில்லை என்பதை அவதானிக்கவேண்டும். இதன் காரணம் இந்தியக்கலை இந்துசமயம் என்ற மரத்தின் கனியாகவும், மேற்கத்திய கலை கிறிஸ்துவ மதத்தின் வரலாற்றோடு இணைந்திருக்கும் காரணத்தால் இவை இரண்டிற்கும் இடையில் உடன்பாடுகள் இருக்க வாய்ப்பில்லை என்ற கருத்து வழக்கில் இருந்திருக்கலாம்.

## காலத்தின் மெய்யியலில் முரண்பாடு.

இந்தியாவில் நிரந்தர அழகியல் கோட்பாடுகள் வழக்கத்தில் இருந்து வருவதற்கு காலம் குறித்த மெய்யியல் ஒரு காரணமாக இருக்கக்கூடும். இந்திய பிரக்ஞைக்கு காலம் சக்கர வடிவிலானது. பொற்காலத்திற்குப் பின் துற்காலம், அதன்பின் மீண்டும் பொற்காலம் பிறக்கும் என்ற எதிர்பார்ப்பு, இந்தியக் கலாச்சாரத்தின் தனித்துவமாகும். அதேபோல் இயற்றப்பட்ட கோட்பாடுகளை விட்டு விலகிச் சென்றால் அவற்றிற்குத் திரும்ப வருவோம் என்ற நம்பிக்கை நிலவுமே தவிர, இயற்றப்பட்ட கோட்பாடுகளை சீர்திருத்தி முன்னேற்றி அமைக்கமுடியும் என்று யாரும் எதிர்பார்ப்பதில்லை. பரதநாட்டிய கலையில் சில கலைஞர்களின் முயற்சிகளும் அவை ஏளனப்படுத்தப்படும் விதத்தையும் அவதானித்தால் விளங்கும்.

கிரேக்கஞான சாஸ்திரத்தின் மைந்தனான ஐரோப்பிய கலாச்சாரத்தில் காலம் ஒரு நேர்கோட்டைப் போன்றது. மனிதனின் எந்தப் படைப்பும் முற்றிலும் நிறைவு பெறாதது என்ற நம்பிக்கை. ஆகையால் இயற்றப்பட்ட எதையும் வெவ்வேறு ஆராய்ச்சிகளால் செம்மைப்படுத்த வேண்டிய நிபந்தனை. காலத்தின் இந்த மெய்யியலே ஐரோப்பாவின் கலை இயக்க சரித்திரத்தின் அடிக்கல் என்றால் தவறாகாது.

இப்படி இரு நாகரிகங்கள் மாறுபட்ட இரு திசைகளில் அமைந்திருக்க, ஒருவரின் கலை இயக்க வரலாற்றைக் கொண்டு மற்றவர் எப்படிப் பயனுற முடியும் என்பதைப்பற்றி இனித்தான் சிந்திக்க வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தமிழகத்தில் ஓவியம், சிற்பக்கலை, கட்டடகலை, நாட்டியநாடக கலை ஆகியவை இந்துமதத்தின் ஒரு அங்கம். ஆனால் ஆதிமுதல் தமிழ் இலக்கியம் மட்டும் போதுமான சுதந்திரத்துடன் வந்துள்ளதை இலக்கிய சரித்திரம் நமக்குக் கற்பிக்கின்றது. நிலப்பரப்பினை குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என்று நான்கு வகையாகவும் இலக்கியவெளியை அகத்திணை, புறத்திணை என்று இருவகையாகவும் புலவர்கள் பிரித்தார்கள். ஒவ்வொரு நிலப்பரப்பிற்கும், ஒவ்வொரு வெளிக்கும் ஒரு சில வனவிலங்குகள், ஒரு சில தாவரங்கள் என்று வகுக்கப்பட்டது. இந்த கூறுகளை பின்பற்றி இயற்றப்பட்ட இலக்கியங்களை ஒரு இயக்கம் என்று அழைக்கலாம். பிறகு நீதி நூல்கள், சமயநூல்கள், கலம்பகங்கள் போன்ற கூறுகளையும் இயக்கங்கள் என்று ஏற்றுக்கொள்ளலாம். அப்படியானால் நாம் தமிழில் இலக்கியஇயக்கம் என்று அழைப்பது, மேற்கத்தைய நாடுகளில் அழைக்கப்படும் பொருளை அல்ல என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

## இன்றைய சூழ்நிலையின் தேவைகள்

ஜாதிக் கொடுமையை ஒழித்தல் : மகாராஷ்டிரத்தில் தலித் பாந்தர்கள் என்ற இயக்கத்தை கொள்கைரீதியில் தங்கள் மாதிரியாய்க் கொண்டு கொள்கை உருவாக்க கட்டுரைகள், கவிதைகள், நாடகங்கள், நாடக மெய்யியல் கட்டுரைகள் என்று பல்வேறுதுறையிலும் தாழ்த்தப்பட்டவர்கள் செயற்பட்டுக்கொண்டு வருகிறார்கள். இவர்களின் படைப்புகளை தலித் கலை கலாச்சார இயக்கம் என்ற கூற்றில்தான் சேர்க்கவேண்டும்.

சின்னத்திரை அளித்து வரும் பாரம்பரியத்தைப் பேணிக்காத்தல்: தொலைக்காட்சி உலகில் எங்கும் ஏற்படுத்தாத சேதத்தை தமிழகத்தில் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறதென்றால் அது மிகையாகாது. உதாரணத்துக்கு தமிழ்க்கிராமங்களில், சடங்குமுறை நாடகமான தெருக்கூத்துக்களுக்கு பதிலாக வீடியோ படங்கள் காண்பிக்கப்படுகின்றன. இது போல, கலைக்கென்று ஒதுக்கக்கூடிய பணம் எல்லாம் சினிமாவும் தொலைக்காட்சியும் விழுங்கிவிடுகின்றன என்றால் மிகையாகாது. இந்த கால கட்டத்தில், தமிழ்க்கலாச்சாரத்தின் வழக்கத்தில் இருந்துவரும் பல்வேறு கலைவடிவங்களையும் காப்பாற்ற ஒரு சக்திவாய்ந்த இயக்கம் ஒன்று தேவை என்பதில் ஐயமில்லை.

பெண்ணியம் : ஆண்-பெண் சமஉரிமை என்ற காலம் வரும்வரை தமிழ் சமுதாயத்தால் பெண்களுக்கு இழைக்கப்படும் இன்னல்களுக்கு கண்டனம் தெரிவிக்கவும், சமஉரிமைக்குப் போராடவும் ஒரு இயக்கம் தேவை. கலைப் படைப்புக்களையும், கட்டுரைகளையும் ஆயுதமாகக்கொண்டு இந்த இயக்கம் செயற்படலாம்.

இடம்பெயர்ந்த தமிழர்: இன்று உலகின் பல நாடுகளில் தமிழர் வெவ்வேறு காரணங்களுக்காக வசிக்கிறார்கள். அவர்களுடைய அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள ஒரு இயக்கம் நிச்சயமாகத் தேவை. ■

# [illegible]

**சிவலிங்கம் சிவபாலன்**

அவன் என்னையே கண்வெட்டாமல் பார்த்துக் கொண்டு நின்றான். வாய்க்குள்ச் சிரித் துக் கொண்டான். என்னருகே ஓடியும் வந்து விட்டான். என்னால் அவனை அப்போதுவரை அடை யாளம் கண்டுகொள்ள முடியவில்லை.

"என்னண்ணே... என்னைத் தெரியேல்லை..."

"தெரியுது..." ஞாபகம்... வர... நானே தொடர்ந்து இழுத்தேன்.

"நான்தான்... வேலு..."

"எட... வேலு..." நான் "எட" என்றே விழித்துவிட்டேன். இருந்தாலும் அவனை இப்போ 'எட' என்று அழைக்கமுடியாத அளவு அவன் வளர்ந்துவிட்டான் என்பது என் மனதை உறுத்தியது.

இருந்தாலும் அன்று பழகிய அதே உணர்வுதான் என்னிடம். எனவேதான் 'எட' என்று அழைத்ததற்குக் காரணம். என்னைப்பொறுத்தவரைக்கும் அவன் இப்போதும் அதே சின்னவன்தான்.

மினுமினுவென்ற தேகஅமைப்பு. பூரித்த முகத்தில் அதே துருதுருத்த கண்கள். குறுகிய நேரத்தினுள்ளேயே பலவித கேள்விகளைக்கேட்டுத் தெரிந்துகொள்ளும் அவனது மனப்பாங்கு. இருந்தாலும் தோற்றத்தில் அவன் இப்போ ஒரு முதலாளியாக இருக்கக்கூடியதான ஒரு எண்ணம் என் மனதில்த் தோன்றியது. என்னாலும் எடுத்த எடுப்பில் நம்ப முடியவில்லைத்தான்.

"எப்படியடாப்பா... இருக்கிறாய்..."

"இருக்கிறனண்ணே..." அவனுக்கும் என்னைக் கண்டவுடன் முகத்தில் ஒரு ஆனந்தம்! எனக்கும் அதிலொரு பிரமிப்பு. அவன் தன் மலர்ந்த முகத்தால் என்னையே உற்றுப் பார்த்துக்கொண்டு நின்றான்.

"எத்தினை வருசங்களுக்குப்பிறகு... பத்துப் பதினைஞ்சு வரிசம் இருக்கும்... என்னண்ணே..." அவன் என்னைப் பார்த்து ஆச்சரியப்பட என்ன இருக்கிறது. எதுவுமே இல்லை. ஆனால் நான் அவனைப் பார்த்து ஆச்சரியப்படுவதில் நிறையவே நியாயம் இருக்கிறது. அவனது உதடுகள் என்னைப் பார்த்துப் பலகேள்விகள் கேட்க ஆயத்தப்படுத்திக் கொண்டதையும் நான் உணராமலில்லை. எடுத்த எடுப்பிலேயே கேட்டான்.

"வெளிநாட்டிலை இருந்தா... வந்திருக்கிறீங்கள் அண்ணே..."

உண்மைதான் தலையில் இனி உதிர்வதற்கு மயிரில்லை. மீசையில் இனி நரைப்பதற்கும் இடமில்லை. கன்னங்களிரண்டும் காய்ந்து 'கோது' நிலைமை

www.tamilarangam.net

அடைந்துவிட்டநிலை. கைகளிரண்டும் இரசாயனக் கலவைகளில் ஊறி கருங்காலியாகக் காட்சிதரும் நிலை... அப்போ... நான் வெளிநாட்டிலிருந்துதான் வந்திருக்கிறேன். மறுப்பேயில்லை.

"ஓமடா வேலு... திங்கள் கிழமைதான் வந்தனான்." கூடவே வெளிநாட்டில் பட்ட அந்த நாய்ப்பாட்டையும் அந்த வெளிநாட்டையும் சொன்னேன். மற்றவர்களைப்போல் என்னால் எதையும் புழுகிச் சொல்லமுடியவில்லை. பொய்யைப் பேச எனக்கு ஒரு வேளை சோறா கிடைக்கப்போகிறது.

"இருந்தமாதிரியே... இருக்கிறீங்கள் அண்ணே..." உண்மைதான் ஒருவித முன்னேற்றமும் இல்லாமல். அப்போது கொஞ்சம் இளமையிருந்தது சந்தோசம் இருந்தது. குதூகலங்கள் யாவும் கானல்நீருடன் கைகோர்த்துக் கொண்டிருந்தாலும் நாட்கள் நல்லபடியாக நகர்ந்தது. என்மீதிருந்த நம்பிக்கை என்னிடமிருந்து விடைபெற்றுக்கொண்டிருந்தது. எல்லாமே அந்நியம்தான்.

"இப்ப... என்னடா செய்யிறாய்..." என்று கேட்டு, அவன் முன்னேற்றத்தை எண்ணி நான் வெட்கப்படவும் வேண்டிய கட்டம் அது.

வெள்ளைவெளேர் என்ற லுங்கி, அதேபோலவே அரைக்கை வெள்ளை சேட் இடுப்பிலோர் கறுப்புத்தோல் பட்டி, சேட் கழுத்துப்பரப்பில் ஒரு வெள்ளைக் கைக்குட்டை, காலில் செருப்பு, முதலாளிமார் போடுமாப்போல. அவனுடைய இந்தத் தோற்றமே அவனை எனக்குக் காண்பித்தது.

செருப்பிலேயே அவன் பாதங்கள் பட்டிராத நாட்கள். வெள்ளை என்றால் என்னவென்றே தெரிந்திராத அவனது, இனித் தைக்க இடமில்லாமல் கிழிந்த காற்சட்டையும், பொத்தான்களையே கொண்டிராத பழுப்பேறிய ஒரு சட்டை, முதுகில் ஒரு சணல் சாக்குப்பை, அதிலுங்கூட கிழிசல்களுக்குக் குறைவில்லை எண்ணையோ தண்ணியோ பட்டிராத தலையையும் நான் குறிப்பிட்டிருக்கவேண்டும். இவை யாவும் வேலுவிடமிருந்து விடைபெற வேலு இப்போ ஒரு...

பத்தாம் வகுப்புப் பரீட்சையில் தெரிந்தவரை கிறுக்கிவிட்டு, கிறுக்கன்போல திண்ணைக்கு மண் ணெடுத்த காலந்தான் அது. என்னைப் பார்ப்பவருக்கு நான் ஒரு சோம்பேறி. சிலருக்கு விரோதி. காலை ஒன்பது மணிவரை தூக்கம். கடிதக்காரனின் மணிச் சத்தம் என்னை எழுப்பும். முகம் கழுவமுதலே கோப்பி குடிக்கப்பட்டிருக்கும். பிட்டோ இடியப்பமோ காய்ந்துபோய் பழைய கறிகளுடன் எனக்காகக் காத்துக் கிடக்கும். தாத்தாவின் புறுபுறுப்புக்கு இவைமேல்.

சைக்கிளை எடுத்துக்கொண்டுபோய் ஒரு மரக்கறி, அது கீரைப்பிடியாக இருக்கும் அல்லது வாடிப்போகாத கத்தரிக்காயாக இருக்கும். ஒரு மீன் மதியச் சமையலுக்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காக நான் செய்யவேண்டிய வேலைகள் இவைதாம். வீட்டில் முருங்கை காய்த்து நிற்கும். மர வள்ளி இலையுதிர்த்து நிற்கும். கிணற்றடியில் சாம்பல் மொந்தன் குலை தள்ளி நிற்கும். மரக்கறி சமையல் நாட்களில் இவையும் சேர்ந்து கொள்ளும். புளிமாங் காய் சொதிக்கோ மீன்குழம்பு க்கோ பிடுங்கிக் கொடுப்பதுவும் அப்போது என் வேலைகளில் ஒன்று. வீட்டுவேலையென்பது எனக்கு இவ்வளவும்தான்.

மீதி நேரங்களில் உலாத்து, வாசிகசாலை, கோவில்த் தேர் முட்டி தேவையில்லாத அரட்டை, நலிவுற்றவனுக் கொதிராக நட்டாமுட்டித் தனம் புரிதல்.

இப்படியான ஒரு நேரத்தில் தான் ஒரு கொந்தல் மாங் காயைக்காந்தியபடி மதியநேரம் வேலு எங்கள் வீட்டு மதில் கரை யோரம் வந்து நின்றான். அவனது தலையையும் காலையும் கண்ட வுடன் தெரிந்து கொண்டேன் அவ னது நிலையை. முதுகில்க் கிடந்த சாக்குப்பையை இறக்கி விட்டிருந்தான்.

"அண்ணே... வளவுக்குள்ளை போத்திலோடு கிடக்கு... பொறுக் கட்டே..."

"உனக்கு எப்படித் தெரியும்... வளவுக்குள்ளை போத்திலோடு கிடக்கெண்டு..."

எனக்கும் அவனைக் கண்ட தும் ஒரு அருவருப்பு, சந்தேகம். இருந்தாலும் வளவையாவது துப் பரவாக்கட்டுமே என்ற ஒரு எண் ணமும் வந்தது.

சண்டைக்கு முந்திய காலத் துச் சாமான்களுடன் குப்பை கூள ங்களுமாக அடிவளவின் மூலை யொன்று மலையாகக் காட்சி தந் தது. அந்தப் பக்கம் யாரும் போய் வருவதில்லை. புடையனின் நட மாட்டம் நிறையவே உண்டு. பாம் புச் செட்டை தாறுமாறாகக் கிடக கும். இரவு நேரங்களில் குரக்கன மா பிட்டு வாசனை, இது பாம்பின் கொட்டாவி என்பது ஒரு சாராரின் வாதம். இது உண்மையாகவும் இருக்கலாம்.

அவ்விடத்தைத் துப்புரவாக் கவேண்டும் என்ற எண்ணம் நெடு ங்காலமாகவே எங்களிடமிருந்து வந்தது.

"உதெல்லாம் என்னாலை முடியாது..."

"உதுக்கெல்லாமா கூலி குடுக் கிறது... உன்ரை மேனிட்டைச் சொல்லிச் செய்வி."

தாத்தாவின் மிரட்டலும் அதி காரமும் அம்மாவைப் பணிய வைக்கும். அம்மாவுக்கும் கூலி கொடுத்து வளவைத் துப்புரவு பண்ண விருப்பமில்லை.

"வீட்டிலை என்ன வெட்டி முறி யிறாய்... உதுகளையெண்டாலும் செய்யக்கூடாதோ..."

நான் விழித்திருக்கிற நேர மெல்லாம் அம்மா கத்துவாள்.

"என்னை... என்னணை உந்தப் புடையன் புத்துக்குள்ளை காலை வைக்கச் சொல்லுறியே."

பதில் அப்புவிடமிருந்துவரும் "அவிச்சவிச்சுப்போடு."

தாத்தா என்னுடன் அதிகம் கதைப்பதில்லை. எதுவாக இருந் தாலும் அம்மாவை நோக்கியே கணைகள் பாயும். அவற்றை அம்மா என்னிடந் திருப்பிவி டுவாள். பள்ளிக்கூடப்பிள்ளைக ளின் இரட்டைத்தட்டு பஸ்வரும் நேரங்களில், தாத்தாவின் துன்பம் தாங்க முடியாமலிருக்கும். கழு த்தை நெரிச்சுக் கொண்டாலெ ன்ன என்கிறமாதிரியிருக்கும்.

"சரியான உடம்புளத்தி உவன்."

தாத்தாவின் வேகர வார்த் தைகள் என்னை மேலும் உலுப்பி விடும்.

இதற்கெல்லாம் முடிவு கட்டு மாப்போல வேலுவின் வருகை என்னை அவனை அணைக்கப் பண்ணியது. கேற்றைத் திறந்து குறோட்டன் செடிகளுக்கூடாக மறைத்து அவனை அடிவளவுக்கு அழைத்துச் சென்றேன்.

"கடிநாய் கவனம்" என்ற தகர அறிவிப்பு அவனை ஏதுஞ் செய்து விடவில்லை. நாங்கள் நாய் வளர்த்ததாக எனக்கு ஞாபக மில்லை. இருந்தாலும் ஒருவித பாதுகாப்புக்காகவே அந்தவித அறிவிப்பு.

தாத்தா இருக்கும்போது நாய் எதற்கு?

பிச்சைக்காரரின் தொல்லை, பூப்பறித்து மாலைகட்டி விற்பவர் களின் தொல்லை தாங்கமுடி யா மல்தான் கடிநாய் கவன எச்ச ரிக்கை.

அந்தக் குப்பைமேட்டைக் கண்டபோது வேலுவுக்கிருந்த சந் தோசம். முதுகிலிருந்த சாக் குப்பையை ஓரத்தில் இறக் கிவை த்ததுதான் தாமதம், நடவடிக்கை மேலிடத் தொடங்கியது. உடை ந்து நெளிந்த அலுமினியப் பாத் திரங்கள் ஒருபுறம், பழைய சைக் கிள் அச்சு பெல் மூடி வகையறா க்கள் ஒருபுறம் பழைய பத்திரி கைத் துண்டங்கள் படித்த படிக் காத கறையான் அரித்த கொப்பி புத்தகங்கள் என ஏகப்பட்ட வருமானம். ஒரு சில நொடியில்.

புடையனின் பயம் என்னை வாட்டியது, அவனையல்ல. வள வுக் குப்பைகள் பணம் பண்ணுவ தற்காகத் தரம் பிரித்து வைக்கப் பட்டிருந்தது.

வீட்டுவாசலில் சார்மனைக் கட்டிலில் தாத்தா உட்கார்ந்தி ருந்தாலும், கிழவனுக்கு அடிவள விலேயேதான் கண். கிழம் மோப்பம் பிடித்துவிட்டது.

"டேய்... டேய்...ஆரடாவன்..." நான் வேலுவுடன் நின்றது தெரி ந்ததும் கிழவன் புயலைவிட வேக மாக நடந்து வந்துவிட்டது. வேலு என்னையே காண்பித்து நடுங் கினான். அவனைப் பார்க்கப் பாவ மாக இருந்தது. மீண்டும் முறுகல் நிலை. போர்மேகங்கள் சூழ்ந்து கொண்டது.

"நீதான் போதாதெண்டு... கண்டவங்களையும் வீட்டுக்கை கூட்டிக்கொண்டு... வா..." நல்ல வேளை எனக்கோ வேலுவுக்கோ அடிவிழவில்லை. தாத்தாவின் பயம் வீட்டில்க் கிடக்கும் பொருள் களைத் திருடிக்கொண்டு போய் விடுவானோ என்பதுதான். நானே முறைத்தபடி தாத்தாவிடம் சொன்னேன்.

"அவன் போகுமட்டும் நான் இஞ்சையே நிப்பன்... நீங்கள் நிம்மதியாய்ப் போயிருங்கோ..." தாத்தாவின் நோக்கம் வேறொன றுமிருந்தது. பழைய சாராயப் போத்தல் யானை சோடாப் போத் தல் என்று அவன் பொறுக்கி எடுத்தவற்றை ஒரு விலைபோட்டு அவனுக்கே விற்றுவிடலாம். வரு கிற பணம் "போயிலைக்கு உத வட்டன்" என்பதும்தான். அது எனக்குப் புரிந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வீட்டைச் சுற்றி ஆறு அடி உயரச்சுவர். அதன்மேலே யாரும் ஏறிப் பாயாத மாதிரி போத்தலோட்டுத் துண்டங்கள், கறள் ஆணி என்பன சொருகப்பட்டிருக்கையில் வீட்டு அடிவளவினுள் வேலுவுக்குத் தேவையான பொருட்கள் குவிந்து கிடந்ததை அவன் எப்படிக் கண்டிருப்பான். தாத்தாவினுடைய அதே ஐயம் எனக்கும் ஏற்பட்டது. இயல்பானதே. ஏனெனில் அதே விந்துதான் நானும் கூடவே துவேசக்குணமும்.

தாத்தாவின் ஆந்தைக் கண்கள் யன்னலூடே வேலுவையே மொய்த்தது. தாத்தாவின் நோட்டம் அம்மாவையும் நன்கு பாதித்தது. அவளும் பதிலுக்கு "பொடியனை வெளியாலை அனுப்பிவிடு... கிடாரஞ் சருவஞ்சட்டியெல்லாம் கிணத்தடியிலை கிடக்குது...

"பகல்லை நோட்டம் விட்டிட்டு... இராவருட்டியில முகடு பிரிக்க வரப்போறான்." தாத்தாவும் ஒத்தூதினார். ஏன்தான் இதுகளுக்கு இந்த பேதலிச்ச புத்தியோ.

முந்நூற்று அறுபத்தைந்து நாட்களில், முந்நூறு நாட்கள் அம்மாவும் தாத்தாவும் விரதம். செவ்வாய் வெள்ளி முதற்கொண்டு பொங்கலில் ஆரம்பித்து கந்தசஸ்டி திருவெம் பாவையீறாக வீட்டில் மரக்கறி மண்டியிட்டுக் கிடக்கும். புளியும் சாம்பலும் சேர்ந்து செம்பு பித்தளை துலங்கக் காரணமாயிருக்கும். தவித்த வாய்க்கு நான்கூட அதிலே தண்ணீர் மொண்டு குடிக்கமுடியாது. நான் விரதமிருப்பதில்லையாம். கண்டகண்ட கடையிலும் நான் பேணியில் வாய்வைத்துத் தண்ணீர் குடிப்பவனாம். துப்புரவாக இருப்பதில்லையாம்.

உள்வீட்டிலேயே நிலைமை இப்படியிருக்க, மதியக் களைப்பிலிருந்த வேலு தண்ணீர் கேட்டான். வீட்டிலுள்ள செம்பில் தண்ணீர் கொடுத்தால் வேலுவுக்குந் திட்டு எனக்குந் திட்டு. எனவே அவனைக் கூட்டிக்கொண்டு போய் கிணற்றடியில் வாளியால் அள்ளிக் கொடுத்தேன். களைப்பும் தாகமும் தீர கைமண்டையால் ஏறத்தாழ ஒரு வாளி தண்ணீரையும் உள்வாங்கிக் கொண்டான்.

ஒருமுறை நண்பர்களுடன் சேர்ந்து கிளித்தட்டு மறித்து விளையாடிய களைப்பில் பள்ளிக்கூடப் பக்கத்துவீட்டு பரஞ்சோதி மாமி வீட்டுக் கிணற்றடியில் தண்ணீர் குடிக்கப்போனோம். எல்லோருக்கும் மாமியே தண்ணீர் அள்ளி வார்த்துக்கொண்டிருந்தா. நான் குடித்தவேகத்தைப் பார்த்ததும் கேட்டுவிட்டா.

"காத்தாலை என்னடா புட்டே திண்டனீ"

"இல்லை மாமி... தோசை..." என்று விட்டது ஞாபகத்துக்கு வந்தது. அவ்வளவு தூரம் தண்ணீரை வயிறு இழுத்தது. இதே போலவே நானும் வேலுவைக் கேட்டுவிட்டேன்.

"என்னடா... புட்டே திண்டனீ..." அவன் எதுவுமே பேசவில்லை. கை கால் முகத்தைத் தண்ணீரால் நன்கு கழுவிக்கொண்டான். மாமரத்தின் கீழ் காற்றிலடிபட்டு வீழ்ந்திருந்த கொந்தல்கள் வெம்பல்களைப் பொறுக்கியெடுத்துச் சப்பிக் கொண்டேயிருந்தான்.

யன்னலூடே பார்த்துக் கொண்டிருந்த தாத்தாவின் குரல் அடுத்த வீட்டையும் தாண்டிப் போய்க்கொண்டிருந்தது.

வெட்டிச் சீவிக் காயப்போட்ட மாங்காயளை பெடியன் தின்னுது உவன் பார்த்துக் கொண்டு நிற்கிறான்.

குத்தியன் முத்தாவையும் திண்டிட்டான்... கூடவே சில என்னைப் பற்றிய தகாத வார்த்தைகளும் உதிர்ந்தது. எனக்கு வேலுவைப் பார்க்கப் பாவமாக இருந்தது. ஏனடா காலமை ஏதும் சாப்பிடேல்லையோ அவன் கண்கள் மினுங்கிக் கொண்டது. இல்லை என்பதுபோல தலையை அசைத்தான்.

வறுமை அதுவும் இளமையிலேயே வறுமை. சாப்பிட்ட கையால் காகம் கலையாத செல்வச் சீமான்கள் வாழும் மண்ணில் அவனும் ஒரு பிரஜை. அவனுக்குப் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தைத் தவிர வேறெந்த அத்தாட்சிப் பத்திரமும் இல்லை. பள்ளிக்கூடம் போயிருக்கிறான். கல்விக்காக அங்கலாய்த்து இருக்கிறான்.

பகல் உழைத்தால்த்தான் இரவுக்காவது ஒருநேரச்சாப்பாடு என்ற கட்டாயமும் அவனுக்கு இருந்திருக்கின்றது. அவன் எதைப்பார்ப்பான்.

"உந்த வெய்யிலெல்லாந் திரிஞ்சு உதுகளைப் பொறுக்கிறியே உனக்கு உதிலை என்ன கிடைக்கும்."

அவன் கண்கள் முதலில் போத்திலோடுகளையே நோக்கியது.

"கோப்பாய் கிளாஸ் பக்டரியிலை குடுத்தால் ... ஒரு றாத்தலுக்கு எட்டுச் சதம் தருவாங்கள். கழுவிக்குடுத்தால் பத்திச்சாம், செம்மா தெருவிலை அலுமினியத்துண்டுகளைக் குடுத்தால் றாத்தலுக்கு அறுவாசாம் தருவாங்கள்." என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே அவன் ஒரு நாளைக்கு மூன்றுவேளைக்குப் பதில் இரண்டுவேளை சாப்பிட எவ்வளவு செல்வச் சீமான்களிடம் திட்டு வாங்கவேண்டும். எத்தனை குப்பைக் குவியல்களைக் கிளறவேண்டும். இருந்தாலும் அவன் தன்முயற்சியை கைவிடவில்லை. ஒருவேளை அவனுக்குப் பின்னால் அவனை நம்பி ஒரு குடும்பமேயிருந்தால்... அவனது நிலை.

மீண்டும் ஒரு மதியம் வந்திருந்தான். என்னைத் தேடி வாசிகசாலைக்கே வந்துவிட்டான். ஒரு சைக்கிள். அதாவது, அதில் பயணஞ் செய்யக்கூடிய அளவுக்குத் தேவையான அதிகுறைந்த பட்ச பாகங்கள்தான் அதில் உள்ளது. கைபிடியிருந்தது. பிறேக் இல்லை. லைற் பெல் என்று எதுவும் இருந்ததற்கான அடையாளம் எதுவும் இருக்கவில்லை. சீற் கூட பழைய துணியால் சுற்றப்பட்டிருந்தது.

கரியரில் ஒரு மரப்பெட்டி பொருத்தப்பட்டிருந்தது. சேகரிக்கும் பொருட்களை நிரப்பிக் கொள்ளுவதற்காக. நாற்பது ரூபாவுக்கு பொம்மைவெளியில் யாரிடமோ வாங்கியதாகச் சொன்னான். இரும்புக்கட்டைதான். இருந்தாலும் ஒற்றைத் திருக்கல் வண்டியில் ஏற்றக்கூடிய பொருட்களை அது சுமந்து தருவதில் அவனுக்கு அப்போதைக்குப் போதும் என்றே நினைத்தேன்.

அந்தக் கட்டையைக் கூட அவன் வெய்யிலில் விட்டுவிட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வில்லை.வீட்டுப்பலாமர நிழலிலே சைக்கிளைச் சாத்தியிருந்தான். பழைய சாக்குகள் சீமெந்துப்பை போன்றவற்றையும் வாங்குவதாகச் சொன்னான். அவனுடைய முகம் சற்று வெளித்திருந்தது. வாணிபத்தில் சிறு முன்னேற்றம் கண்டிருக்கிறான் என நினைக்கிறேன். அதன்பின் நான் அவனைச் சந்தித்ததாகவோ கண்டதாகவோ இல்லை.

எனது சிந்தனைகளையும் நினைவலைகளையும் தகர்த்த வாறாகவே கேட்டான்.

"வெளிநாட்டிலை நிறையச் சம்பாதிச்சீங்களா அண்ணே..." என்னத்தைச் சொல்ல.

"எல்லாத்தையும் இழந்து போய் நிற்கிறன்" என்றா சொல்லமுடியும்.

"நிறைய எண்டில்லை... ஒரு அளவுதான்..." என்று இழுத்தேன்.

"எங்கையண்ணை கொண்டுபோய் விடவேணும் சொல்லுங்கோ. சொல்லுங்கோ. கொண்டுபோய் விடுறன்." சொல்ல வெட்கமாக இருந்தாலும் சொன்னேன்.

"பாழாய்ப்போன பிரச்சினை வந்து... அம்மா அப்பா எல்லாரும் வன்னியிலை இருக்கினம்... இப்ப என்னைக் கூட்டிக் கொண்டு போக எண்டு ஒரு லொட்ஜிலை நிக்கினம்."

"தாத்தா"

"அவர் அப்பவே செத்துப் போனாரே..." தரித்திரம் இருந்துதான் என்னத்துக்கு என்று எண்ணினானோ என்னவோ. எதுவுமே பேசவில்லை.

ஒரு பழைய வெள்ளைநிற "டெலிக்கா வான்" உறுமியது. நானும் அவனும் முன்சீற்றில். அருகருகே அமர்ந்து கொண்டோம். உறவினர் என்று சொல்லிக் கொள்பவரே கண்டும் காணாதவராய் உலவும்போது வேலுவின் உதவி எனக்குப் பெரிதாகவே பட்டது.

"நீங்கள் என்ன கார் வைச்சிருக்கிறீங்கள் அண்ணே." என்னுடைய சப்பாத்தைக் கழட்டி எனக்கே அடிக்கவேண்டும் போல் இருந்தது.

"மனிசன் சாப்பாட்டுக்கே நாராய்த் தேய்ஞ்சு போனான். அதுக்குள்ளை ஒரு கார் வேண்டிக் கிடக்கு."



சிலநிமிட யோசனையின் பின் றோல்ஸ் றோய்ஸ் என்று சொன்னால்... வேண்டாம் றெனோல்ட் 25. வேண்டாம் "மேசிடஸ்" வைச்சிருந்தனான் வித்துப்போட்டன்..." மீற்றர் கணக்கில் இழுத்துவிட்டே நான் என்னை நிலைநிறுத்திக் கொள்ளவேண்டியிருந்தது.

நாவையும் இப்போது இழந்தாகிவிட்டது. அரசியல் தஞ்சம் கேட்கும்போதும் பச்சைப்பொய்யையே சொல்லி நாவிழந்தேன்.

தலைநகரத்து சாலைகளும் ஒழுங்கைகளும் அவன் சுண்டுவிரலுக்குள்ப் போலும். மின்னி மறைந்தான். முழத்துக்கு முழம் முப்படைகள் சீருடையில் நின்று போவோர் வருவோர் யாவரையும் நிறுத்தி சல்லடை போட்டுத் தேடிக்கொண்டிருந்தது. இவனது வண்டியும் சகல இடத்திலும் நிப்பாட்டப்பட்டது. பரிசோதிக்கப்பட்டது பின்போக அனுமதிக்கப்பட்டது. ஒரு முதலாளிக்கான தொனியில் அவர்களது பாசையில் பதிலளித்துக்கொண்டேயிருந்தான். எதுவித சிரமமுமில்லாமல் அவனுக்கு பாதுகாப்பு வழி விட்டுக்கொண்டது. என்னை மட்டும் துருவித்துருவி ஆராய்ந்தது. கேள்விக்கு மேல் கேள்விகள் கேட்டுத் துளைத்தெடுத்தது. காற்சட்டை இடுப்பை விட்டு இறங்கிய என்நிலையைக்கண்டும் பாதுகாப்பு என்னிடம் அநேககேள்விகளைத்தான் கேட்டது.

பதினைந்து பரப்புக்காணி நடுக்கொள்ள நாற்சார் வீடு. ஒன்றுக்கு இரண்டு கிணறுகள். வாழை மரவள்ளி, முந்திரிகையுடன் மா, பலா, இலுப்பை இவ்வளவு வருமானங்களும் இருந்த இடத்தை விட்டு, இரவல் குந்தில் குடித்தனம். இதைவிடப் பூகம்பமே மேல்.

"அம்மா ஆளைத் தெரியுதே" நான் கேட்க முதலே அம்மாவின் முகம் என்னைச் சுட்டெரித்தது. கண்டிப்பாக நினைத்திருப்பாள் இவனை இஞ்சையும் கூட்டிக் கொண்டு வந்திட்டான்.

"நீ... நீ... முந்தி வீட்டை வாறனியெல்லே." அவனும் பதிலுக்கு

"அம்மா என்னைப் பிடிச்சிட்டா"

புத்தளப் பக்கங்களில் கண்ணாடிப் பொருட்கள் மாபிள் தளவாடங்களை வேண்டி நகரப்பகுதிகளில் விற்பனை செய்கிறோம். சரிக்குச் சரி வருமானம் வருவதாகவும் சொன்னான். ஏழைக் குடும்பத்திலொருத்தியை மணந்து ஒரு ஆண்மழலைக்குத் தந்தையான சேதியையும் சொன்னான். பேர்ஸில் இருந்த கலர் போட்டோ ஒன்றையும் காண்பித்தான். மழலையும் இவனைப்போலவே துருதுருத்த கண்ணுமாக மின்னியது. அவனுடைய எதிர்பார்ப்புக்களெல்லாம் அவனது மகன்தான்.

"அண்ணே என்ரை புள்ளையும் என்னைப்போல கஸ்டப்படக் கூடாது... வெளிநாட்டுக்கு அனுப்பி அவனைப் படிப்பிக்கப் போறன்."

என்னையறியாமலே எனக்குச் சிரிப்பு வந்தது. இருந்தாலும் அவனுடைய உயரிய நோக்கை எண்ணி ஆனந்தப் பட்டேன்.

"அம்மா... நீங்கள் இஞ்சை நிண்டு சிரமப்படுறதைவிட... அண்ணையையும் கூட்டிக்கொண்டு வாங்கோ... நீர்கொழும்பிலை என்ரை வீட்டிலை நிம்மதியாய்த் தங்கலாம். சாப்பாட்டுப் பிரச்சனையும் இல்லை தண்ணிப் பிரச்சனையும் இல்லை. எவ்வளவு காலம் வேணுமெண்டாலும் தங்கலாம். ரெண்டு மாசம் பொறுத்தீங்களெண்டால் ரெலிபோனும் பூட்டித் தாறன்."

யாருக்கு வருமிந்த அரவணைப்பு. அந்தரித்த இடத்தில் வேலுவுக்கு உதவமுடியாத நாம். வெட்கித் தலைகுனியவேண்டிய நிலையில்...

அம்மா என்னைப் பார்த்தாள். அவளது கண்கள் துலங்கவில்லை. என்னை ஒரு ஓரமாக அழைத்துச் சென்றாள். வேலுவுக்குப் புரியாதபடிக்கு இரகசியமாகவே கேட்டாள்.

"நகையள் எல்லாம் கிடக்கு பொடியன் கழுத்தை நெரிச்சுக் கொண்டுபோட்டு..." ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புகலிட இலக்கிய விமர்சனம் பற்றி...

கலைச்செல்வன்

ஈழத்து இலக்கியம் என்பது பெயருக்கு மட்டுமே உச்சரிக்கப்படுகிற தமிழ்நாட்டு சூழலில் புகலிட இலக்கியமும் இப்போது கவனத்திற் கொள்ளப்பட்டு வருகிறது. அவர்களின் கவனம், அக்கறை, அங்கீகரிப்பு போன்றவை அண்மைக்கால வளர்ச்சி நிலைகள். வேற்றுக் கிரகமொழியில் பேசுகிறார்கள் என்ற அலட்சியப் படுத்தல்களைத் தாண்டி அடுத்த நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் புகலிடத்தில் மையம் கொள்வதாக எஸ். பொ. வின் கணிப்பு வேறு. அது சரிதான் என பல தலையாட்டல்கள்.

புகலிடத்தில் பலவிதமான இலக்கியப் போக்குகள் இருந்தாலும் புகலிடத்தில் குறித்த ஒரு போக்கே புகலிட இலக்கியம் என அடையாளப்பட்டு வருவதும் இது தொடர்ந்து பல தாக்குதல்களுக்கும் இம்சைகளுக்கும் ஆளாகி வருவதும் யாவரும் அறிந்ததே.

புகலிட இலக்கியம் என்றால் என்ன என்ற கேள்வி சிலரிடம் இன்னும் இருக்கிறது. புகலிடத்திற்கு வெளியிலும் ஏன் இங்கும் சிலர் புகலிடத்தில் இருந்து எழுதுவது புகலிட இலக்கியம் எனப் புரிந்து கொள்கிறார்கள். ஈழத்து இலக்கியம், இந்திய இலக்கியம், மலையக இலக்கியம் என்பது போல் புகலிடத்து இலக்கியம் என புரிந்து கொள்வதில் எதுவித தப்பும் இல்லை.

பொதுவாக புகலிட இலக்கியம், அதன் உட்பொருள் என்ன?

சர்வதேச இலக்கியத்தில் புகலிட இலக்கியம் எவ்வாறு பிரித்து இனம் காணப்படுகிறது என்பது முக்கியமானதாக இருக்கும் அதே நேரத்தில் ஈழத் தமிழர்களின் புகலிட இலக்கியம் அல்லது புகலிடத்தில் இலக்கியம் எப்படி இருக்கிறது என்பதும் மிகமுக்கியமான கேள்விதான். புகலிட இலக்கியம், தனது தேசத்தில், தனது சமூகத்தில் வாழ்வு மறுக்கப்பட்டவர் தான் இழந்துவிட்ட நாட்டையும் மக்களையும் உறவையும் அதிலிருந்து நினைக்கும் பிரிவாற்றாமையையும் வெளிப்படுத்துவதாக இருக்கிறது.

புகலிடத்தில் தமிழர்களின் புகலிட இலக்கியம் என்பது மேற்குறிப்பிட்டதோடு புகலிடத்தின் புதிய சூழல் தரும் அனுபவங்களை வெளிப்படுத்துவதாகவும் வேறுபட்ட மொழி, பண்பாடு, அரசியல், வாழ்வியல் தன்மைகளுள் அகப்பட்டுக்கொண்டு முகமிழந்த தவிப்பை வெளிப்படுத்துவதாகவும், புகலிடத்தில் அந்நியப் பிரஜையாக, தங்களுக்கு உபத்திரவம் தர வந்தவர்களாக, அவைக்குதவாதவர்களாக பார்க்கப்படும் சூழல்மீது கேள்வியை வைப்பதும் சுயத்தைத் தேடுவதுமாகவும் இருக்கிறது. இது நாட்டிற்கு நாடு அதன் சூழலைப் பொறுத்து வேறுபடுகிறது. இதில் பிரிவாற்றாமையை வெளிப்படுத்தும் படைப்புகள் பல முகங்களைக் காட்டுகின்றன. அவை தமது வாழ்வு சூறையாடப்பட்டதற்கான காரணிகளைத் தேடுகின்றன. இன்றைய தமது தேசத்தின் வாழ்நிலைகளை வெளிப்படுத்துகின்றன. யுத்தத்தினால் விளையும் சாதகமான தன்மைகளையும், சாதகமற்ற தன்மைகளையும் இனம் காட்டுகின்றன. ஆகையால் இது பல சிக்கல்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் ஆளாகின்றது. இந்த அச்சுறுத்தலின் புதிய முகம்தான் புகலிட இலக்கியத்தைப் புலம்பல் இலக்கியம் என எள்ளி நகையாடும் போக்காகும். புகலிட இலக்கியத்தில் இரண்டு தன்மைகளை இவர்கள் புலம்பல் ஒப்பாரியாக இனம் காணுகிறார்கள்.

1. யுத்தத்தினால் விளையும் மனிதஉரிமை மீறல்களை வெளிப்படுத்தும் எழுத்துக்கள்.
2. புகலிடத்தில் தங்களை தலித்தாக பிரகடனப்படுத்தும் கருத்துகள்.

ஒரு சமூகத்தின் நிலை அதன் அரசியலைக் கட்டமைப்பது போல், அதன் இலக்கியத்தையும் கட்டமைக்கிறது. ஆகையால் எப்போதும் இலக்கியத்திற்கும் அரசியலுக்கும் இடையறாத உறவும் நெருக்கமும் இருந்து வருகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈழத்தமிழர்களின் நாளாந்த வாழ்க்கையில் யுத்தமும் அதன் பாதிப்பும் தொடர்ந்து பாதிப்பைத் தருவன. அவர்களின் புகலிட வாழ்க்கையிலும் அவர்கள் ஒவ்வொரு கணமும் (வேலையிடங்க ளிலோ அல்லது பிற அலுவல்களிலோ) அந்நியர் களாகவும் வெள்ளையரல்லாதவர் என்ற வகை யிலும் என்றும் பாதிப்புக்குள்ளாகுபவர்களாகவே இருக்கின்றார்கள்.

இந்த சூழலுக்குள் இல்லாதவர்களின் எழுத் துக்கள் வேறுவிதமாக இருக்கக்கூடும். சிலர் இதற் குள் இதமாக குளிர்காய்பவர்களாகவும் இருக் கக்கூடும். அது தப்பே இல்லை. அது அவரவர்கள் இருப்பைப் பொறுத்தது. ஆனால் இவர்கள்தான் இன்று மற்றைய எழுத்துக்களைப் புலம்பல் இலக்கி யம் என்று மேலாட்சி செலுத்துகின்றார்கள்.

எந்த இலக்கியம் பலவித அச்சுறுத்தல்களுக்கு ஆளாகி வருகின்றதோ அதே இலக்கியத்தைத் தான் இவர்களும் புலம்பல் என்கிறார்கள். ஆக அச் சுறுத்தலின் புதிய புலம்பல்தான் இந்தப் புலம்பலே ஒழிய இலக்கியம் ஆணித்தரமாக அதன் வாழ்வும் வளமும் சார்ந்துதான் இருக்கின்றது.

மொத்தமாக புகலிட இலக்கியம் ஒடுக்கப்பட்ட, மறுக்கப்பட்ட ஒரு சூழல்தான் இங்கு நிலவுகிறது என்பது எல்லோருக்குமே தெரிந்ததுதான்.

யுத்தம் விடுதலையின்மீது அதிகாரத்தை கட்ட மைத்துவிடுகிறது. யுத்தம் எவ்வளவு மூர்க்கமா கவும் முனைப்போடும் இருக்கிறதோ அவ்வளவு மூர்க்கமாக அதிகாரம் தன் கால்களை வைக்கி றது. ஈழத்தமிழர் பரவிய இடமெல்லாம் இந்த அதி காரம் பரவியதும் இதன் அழுத்தத்தில் ஒவ்வொரு வரும் ஏதோவொருவிதத்தில் அகப்பட்டுக் கொண் டதும் பூதக்கண்ணாடி போட்டுப் பார்க்கவேண்டிய விடயமில்லை.

நிலைமை இவ்வாறு இருக்க ஈழத்து இலக்கியம் என்பது பெயருக்கு மட்டுமே உச்சரிக்கப்படுகிற தமிழ்நாட்டு சூழலில் புகலிட இலக்கியமும் இப் போது கவனத்திற் கொள்ளப்பட்டு வருகிறது. அவர் களின் கவனம், அக்கறை, அங்கீகாரிப்பு போன் றவை அண்மைக்கால வளர்ச்சி நிலைகள். வேற் றுக் கிரகமொழியில் பேசுகிறார்கள் என்ற அலட்சி யப்படுத்தல்களைத் தாண்டி அடுத்த நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் புகலிடத்தில் மையம் கொள்வ தாக எஸ். பொ. வின் கணிப்பு வேறு. அது சரிதான் என பல தலையாட்டல்கள்.

இன்நிலைமைக்கும் சில காரணங்கள் இருக் கின்றன.

ஈழத்தில் இதுவரை காலமும் வெளிவராத அள வுக்கு புலம்பெயர் நாடுகளில் வெளியீடுகள் அமை ந்தன.

முன் எப்போதும் இல்லாத அளவு (ஈழத்து சூழ லில்) படைப்பாளிகள் உருவாகினர்.

இப்படைப்பாளிகள் ஈழப்போராட்டத்தினாலும், யுத்தத்தினாலும் கொடூரமாக பாதிக்கப்படும் ஒரு சமூக நிர்ப்பந்த சூழலின் தாக்கத்திற்குட்படுபவர் கள்.

சமூகவிடுதலையில் பிரக்ஞை கொள்வோராக வும் நிராகரிக்கப்பட்ட, ஒடுக்குமுறைக்குள்ளான சமூகத்தின் பிரதிநிதிகளாகவும் இவர்கள் தங் களை உணர்ந்து கொள்கிறார்கள்.

புகலிட வாழ்வின் விசாலமான அனுபவமும் தேடலும் விரிவுபட்டு இலக்கியம் வளம்பெறும் சூழ்நிலையும் அதிகமே.

இத்தகைய எதிர்பார்ப்புகள் ,நியாயமான வைதான்.

எஸ். பொ. வினுடையது ஒரு முன் அனுமானம் தான். எதிர்பார்ப்பாகக்கூட இருக்கலாம். அது படை ப்பின்மீது மிகுந்த சிரத்தை எடுத்துக்கொள்ளு மாறு ஒரு முன்அறிவித்தல் என்று புரிந்துகொள் ளலாம். அவ்வளவுதான்.

தமிழ் இலக்கிய அதிகாரக் கட்டமைப்பை புக லிடத்தை நோக்கித்திசைதிருப்பிவிட்ட நிலையை இது குறிக்கின்றது.

இலக்கியத்தை இன்பம் துய்க்கும் பாரம்பரிய லாகிரி லேகியங்களாக கருதிவந்த உயர்மேட்டுச் சூழலில் இருந்து வந்தவர்களல்ல இன்றைய புகலிட எழுத்தாளர்கள்.

பொழுதுபோக்கும் காலத்தில் தெரிவதற்கு பல தரப்பட்ட தெரிவுகளில் ஒன்றாக இலக்கியத்தைத் தெரிந்தவர்களுமல்ல இவர்கள்.

வேறுவழியின்றி எழுதுமாறு நிர்ப்பந்திக்கப் பட்டவர்கள், எழுத்தில் உண்மையை உணர்தல் என்பது தற்கொலை முயற்சி என்ற சூழலில் எழுதுப வர்கள், தனதெழுத்து தளதுயிரைக் குடிக்கும் என்ற சூழலில் தமது எழுத்து பற்றிய எழுத்து வியா பாரிகளின் வரையறுப்புகளை அவர்கள் கணக் கில் கொள்வதில்லை.

யாருக்குத் தேவை பொத்தாம் பொதுவான வரையறுப்பும் வழிகாட்டல்களும்? என நினைப்பவர் கள்.

ஆயினும் புகலிட இலக்கியம் என்பது நீண்ட கால பாரம்பரியம் கொண்ட சர்வதேச இலக்கி யத்துள் ஒரு முக்கியமான வகையறா என்ற வகை யில் அதுபற்றி கரிசனை கொள்வது அவசியமா கும். புகலிட இலக்கியத்தை தேடுவதும் அதை சர் வதேச புகலிட இலக்கியத்தோடு பொருத்தி இனம் காண்பதும் ஆய்வு செய்வதும் தேவையான நல்ல விடயங்கள்தாம். அது குறித்து பல இலக்கியச் சந் திப்புகளில், சஞ்சிகைகளில் பேசப்பட்டும் வருகி றது. அதைக் கொஞ்சமேனும் பொருட்படுத்தல் புக லிட இலக்கியத்தை செழுமைப்படுத்த பெரிதும் உதவக்கூடும்.

அதை விடுத்து எஸ் பொ. சொல்லிவிட்டாரே நாம் தமிழ் இலக்கியத்தை வளர்த்துத்தான் ஆக வேண்டும், தமிழ் இலக்கியத்தின் தலைமையாக புகலிட இலக்கியம் இருந்தே ஆகவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு புறப்படத்தேவை யில்லை. விமர்சனம் வேண்டாம், எதிர்க்கேள்வி வேண்டாம், எஸ். பொ. சொன்னதை செய்வோம் என்று ரசிகர் மன்றப் பாணியில் இலக்கியம் வளர்க் கலாம் என்று தோன்றவில்லை. இதுவும் அதிகார சக்திகளின் மேலாண்மை வெளிப்பாடுதான் என்ப தைப் புரிந்து கொள்ள யாரும் சிரமப்படத்தேவை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யில்லை.

இன்று புகலிடத்தின் இலக்கிய முயற்சிகளை மூன்று பெரும் போக்குகளாகப் பிரிக்கலாம். இது என் வசதிக்கானதுதான்.

1. அரசின் ஒடுக்குமுறை, இனஅழிப்பு அதனால் ஏற்படும் சீரழிவுகளை எழுத்தில் வெளிப்படுத்துவது.

ஈழப்போராட்டத்தின் நியாயப்பாட்டை, அதன் உக்கிரத்தை, உணர்வின் செறிவை, ஆளுமையை எடுத்தியம்பும் பிரச்சாரப் பாங்கான இலக்கியங்கள்.

2. புகலிடத்தின் புதிய சூழல் தரும் அனுபவங்களை வெளிப்படுத்தல்.

வேறுபட்ட பண்பாடு, மொழி, அரசியல் வாழ்வியல் தன்மைகளுள் அகப்பட்டுக் கொண்ட மனிதன் தவிக்கும் தவிப்பை வெளிப்படுத்துதல். புகலிடத்தில் அந்நியப் பிரஜையாக-தங்களைக் கீழான பிரஜையாக பார்க்கும் சூழலின்மீது கேள்வியை வைப்பதும் தனது சுயத்தைத் தேடுவதுமான படைப்புக்கள்.

இழந்துவிட்ட தனது நாட்டையும் மக்களையும் உறவையும் அதனால் கிடைக்கும் பிரிவாற்றாமையை வெளிப்படுத்துவது. அதேசமயம் ஈழத்தமிழர் வாழுமிடமெல்லாம் பரவியுள்ள அச்சுறுத்தலைக் கேள்விக்குட்படுத்துவது.

3. இலங்கையில் யுத்தமே நிகழாததுபோல். அங்கு தமிழர் வாழ்வு எந்த நெருக்கடிகளுக்கும் ஆளாகாததுபோல் யுத்தம், மனித உரிமை மீறல்கள் பற்றிய எந்த சம்பந்தமுமில்லாத படைப்புகள். சாதாரணமான வாழ்க்கை நியாயங்களையும் நிர்ப்பந்தங்களையும் வெளிப் படுத்தல்.

இவர்கள் எவருக்குமே அரசியல் நெருக்கடிகள், அராஜகங்கள், கொலைகள், மனிதஉரிமை மீறல்கள் எதுவுமே தெரியாமல் மறைத்துவைக்கப் படவில்லை. ஆனாலும் இவர்கள் அதைத் தவிர்த்து எழுதுவதே வாழ்வுக்கு உத்தரவாதம் என்பதை நன்கு உணர்கின்றவர்கள்.

இதுதான் பொதுமக்கள் இலக்கியம் எனக்காட்டவும் முனைகின்றார்கள். அதற்கும் மேலே போய் ஒப்பாரியும் ஓலமும் வேண்டாம் புகலிடத்துவாழ் மக்களது சிறப்பையும் மேன்மையையும் எழுதினால் போதும். அதுதான் இலக்கியத்தை வளர்க்க உதவும் என்றும் கூப்பாடு வேறு போடுகிறார்கள்.

இந்த முதலாவது போக்கும் மூன்றாவது போக்கும் எப்போதுமே இரண்டாவது போக்கின்மீது அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றது.

இப்போது அதை புலம்பல் இலக்கியம், ஒப்பாரி, அழுகுரல் என்று புதிய இம்சை பண்ணுகிறது. தன் நாட்டின் மீது இழைக்கப்படும் கொடுமைகளைப் பாடிய தார்விஷ் மொகமட்டை அழுகுரல், ஒப்பாரி, புலம்பல் என்று சொல்லாது. ஆனால் தமிழர் இயக்கங்கள் பண்ணும் அராஜகத்தை வெளிப்படுத்திவிட்டால் புலம்பல் என்று சொல்லும் நிலைமை இப்படித்தான் இருக்கிறது. இதற்கு அச்சுறுத்தல் காரணமாயிருக்கிறது. பெரும்பாலும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் சுயதணிக்கை செய்து கொள்கின்றன. எதிர்க்குரல் எவ்வகையிலாவது வருகிறதா என பூதக்கண்ணாடி வைத்துப் பார்க்கின்றன.

பெரும்பாலான படைப்பாளிகளும் சஞ்சிகை வெளியீட்டாளர்களும் இந்த ஆதரவுப் போக்கையே மேற்கொள்ளுகின்றனர். இதன் உச்சநிலையில் புகலிடஇலக்கியம் புலம்பல் இலக்கியமாக போய்விட்டதாகவும் புலம்பல் இல்லாத புகலிட இலக்கியத்தை வளர்க்கவேண்டும் என்றும் இவர்கள் சொல்லி வருகிறார்கள். ஊதுகுழலாய் இருப்பதில் புலம்பல் இருக்காதுதான் எதுவித பிரக்ஞையற்ற நிலையில் புலம்பல் ஏது.

ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் புகலிடத்தில் எழுதுபவர்கள் எல்லோருமே இலங்கை அரசின் ஒடுக்குமுறைக்கு எதிரானவர்கள்தான். விடுதலையின் முக்கியத்துவத்தை. தவிர்க்கவியலாத் தன்மையை நன்கு உணர்ந்தவர்கள்தான். ஆயினும் இவர்கள் யுத்தத்தின் பெயரால், விடுதலையின் பெயரால் நிகழும் அனர்த்தங்களை வெளிப்படுத்துவது யாருக்கு புலம்பல் இலக்கியமாகப்படுகிறது என்பதை இலகுவில் புரிந்து கொள்ள முடியும்.

இதை விமர்சித்தவுடன் இவர்களுக்குக் கோபம் வந்துவிடுகிறது. புகலிட இலக்கியம் புலம்பல் இலக்கியமாகப் போய்விட்டதாக விமர்சிக்கக்கூடாதோ என்கிறார்கள். உலகத்தில் எங்குதான் ஜனநாயகம் இருக்கிறது, எங்கும் அராஜகம்தானே இருக்கிறது, இங்குமட்டுமேன் ஜனநாயகம் வேண்டுமென்கிறீர்கள் என்கிறார்கள். கொலையையும் அராஜகத்தையும் பாராமுகமாக இருந்துகொண்டு எழுத்துக்கள் மனிதர்களை நேசிக்கவேண்டும், அதற்கு படைப்பாளனுக்கு பெரிய மனசு வேண்டும் என்கிறார்கள். இவர்களுக்கு ஒன்று சொல்லவேண்டும். கொலைகளையும் அடிமைவாழ்வையும் இழப்பையும் சுரண்டலையும் மனித சீரழிவையும் கப்பத்திடுதலையின் அவாவையும் வேண்டி நிற்பவர்கள்-சுதந்திர மனிதனின் இருப்பை தேடுபவர்கள்- அராஜகத்தை நிகழ்த்தும் அதிகாரத்துடன்தான் மோத வேண்டி இருக்கிறது. மனிதர்களின்மேல் நேசம் கொண்டதால்தான் இதைச் செய்யவேண்டி இருக்கிறது. நேசமில்லாவிட்டால் பாராமுகமாக இருந்து எதைவேண்டுமானாலும் தாராளமாகப் படைக்கலாமே.

இவர்கள் அவசரத்தில் ஒருவிடயத்தை மறந்தும் விடுகிறார்கள்.

புலம்புகிறவர் எப்போதுமே நியாயத்தின் பிடியில் இருந்துதான் புலம்புவார். கையறுநிலையில் இருந்துதான் புலம்புகிறார், புலம்பலில் எப்போதுமே அநியாயத்திற்கு எதிரான கேள்வியே இருக்கும். ஆற்றாமையின் அழுகுரல் புலம்பல்களாகத் தெரிவதில்லை. அதற்குக் காரணமானவர்கட்கும் அதில் கரிசனை கொள்ளாதவர்கட்கும்தான் புலம்பல்களாகத் தெரியும். சிலருக்கு எரிச்சலைக் கொட்டுவதாகவும் படுகிறது.

இன்றைய கொடூரங்களைக் காணும் படைப்பாளிகளால் இப்படித்தான் இலக்கியம் படைக்கமுடியும் என்று தோன்றுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புகலிடத்திற்கு வந்ததும் தாய்நாட்டை மறந்து விடுங்கள் என்றும், அதைக் கணக்கில் எடுக்காதீர்கள் என்பதும் படைப்பை வெறும் செய்தித் துணுக்காகத்தான் பார்க்கிறார்களோ என்று எண்ணத் தூண்டுகிறது.

ஒவ்வொரு புகலிடப் படைப்பாளரும் சுமுகமான நிலையில் இருக்கும் நாட்டிலிருந்து இமிக்கிரன்ற் (தொழிலின் நிமித்தம் வெளிநாட்டில் வாழ்பவர்கள்) ஆக புகலிடத்துக்கு வரவில்லை. அவள்/அவன் வாழ்வு மறுக்கப்பட்டு துரத்தப்பட்டவர்கள் என்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விஷயம். தாம் இருந்த மண், வாழ்வு, ஊர் உலகம், சுற்றம், கலை பண்பாடு என உறவுகொள்பவர்கள் அதைத்தான் படைப்பிலும் வெளிப்படுத்துவார்கள். அதைவிடுத்து வேறு ஏதாவது பண்ணு என்று சொல்வது படைப்பாளிக்கும் படைப்புக்கும் உள்ள உறவை விளங்கிக் கொள்ளாத்தன்மையால்தான் எழுகிறது. அது படைப்பாளியையும் அவர் காணும் அல்லது காணவிழையும் உலகத்தோடும் ஒட்டியதே. சூழ்நிலை ஒருவர்மீது ஏற்படும் தாக்கத்தினால் தானே படைப்பு ஊற்றெடுக்கிறது. அவர் தன் உலகத்தை விமர்சிக்கிறார். தனதுலகைக்காண உத்வேகம் கொள்கிறார். தன்மீதும் தனது சூழலின் மீதும் உலகத்தின்மீதுமான சுயதேடல் இது- வாழ்வின் இருப்பிற்கான உள்ளார்ந்த தேடல். அனுபவங்களின்மீது சிந்தனை நூலைப்பற்றிக் கொண்டு பயணமாகும் முயற்சி. அதனூடாக புதிய தேடலையும் அனுபவங்களையும் எட்டுவது. அதை மொழியில் வசப்படுத்துகிறபோது படைப்பாகிறது. சூழலின் நிர்ப்பந்தமே படைப்பாளியினூடாக படைப்பை பிரசவிக்கிறது. ஆகையால்தான் இலக்கியம் எப்போதுமே சமூகத்தின் இயல்பான போக்கோடு ஒத்திசைவாக இருப்பதில்லை. சாதாரணமாக்கப்பட்ட, இயல்பாக்கப்பட்ட வாழ்வில் புதைந்து கிடக்கும் அநியாயங்களை வெளிக்கொணருகிற ஒவ்வொரு கணமும் தம்மீதும், தம் சூழல்மீதும் பரிசீலனைகளை நிகழ்த்துகின்ற தளத்திலேயே படைப்பு ஊற்றெடுக்கிறது. இது நதியைப் போன்று இயல்பானது. தனது தளத்தில் கிடைக்கக்கூடிய சகல நல்லது கெட்டதுகளையும் அள்ளி வருகிறது. அது பெருக்கெடுப்பதும் அணையுடைப்பதும் அல்லது அமைதியாக நகர்வதும் அதனதன் சூழலைப் பொறுத்தது.

இந்த ஊற்றை எவர் எப்படித்தான் அடைத்தாலும் அது புதிதுபுதிதாய் கண்திறக்கும்; எரிமலையாய் வெடிக்கும். உயிர்ப்புள்ள வாழ்வின் ஊற்றுக்கள் இப்படித்தான் அமைகிறது.

இதற்கு வரம்பு போட்டு தமது வளவுக்குள் அழகு பார்ப்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் இந்த இயக்கத்தை அணைபோட்டு நிறுத்திவிட முடியாது. இலக்கியம் இப்படித்தான் இருக்கவேண்டும். அதை எழுது, இதை எழுதாதே என்று படைப்பின்மீது யாரும் பலாத்காரம் பிரயோகிப்பது அறிவுபூர்வமானதல்ல. சத்தியமான இலக்கியம் மானுட வாழ்வை உய்வித்தே தீரும். ■

# புலிக் கலவியும் இரவில் சமருமாய்க் கழித்த ஒரு காலத்தில் பாடல்

சேரன்



1.

இதழ்க் கடையில் ஊறியது
ஒரு துளி வெள்ளம்
இன்னும் வாய் சேரா
அமிழ்தம்

2.

காலையில்
கலவியைக் குலைத்த விமானத்தைச்
சபித்தோம்.
தன் கொலைக் குலத்தொடு
ஏழேழு தலைமுறைக்குமாய்
அது நீருள் ஆழ்ந்தது

3.

இரு கரைகளிலும் அலையடித்துப்
பெருகிச் சுழித்துப் பாய்கிறது
நீர்;
இடைவிடா அடைமழை.
ஒதுங்கக் கூரையற்ற வீடும் இல்லை
தண்ணீர் நிறைந்த இரவிலும்
தாகம் தீரவில்லை இன்னும்
குழந்தையின் அலறலில் இருந்து
ஒரு கூப்பிடு தொலைவென்கிறார்கள்
யுத்தமுனை

மரணத்தைக் கையிலேந்தியவர்களுக்கு
வழிவிட்டுக் கரையொதுங்கி
எங்கள் வாழ்க்கையைத் தருகிறோம்
ஒரு நாளில் எல்லாமிழந்து
அகதிகளாய் வனவாசம் செல்கிறோம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விட்டு வந்த வீடுகளுள் வெள்ளத்தோடு
குருதியும் புகுமோ?

காட்டுவழிகளின் ஆளற்ற வெளிகள்
ஆயிரமாயிரம் முகங்களால் நிறைகின்றன
பீதி படிந்த அம் முகங்களில்
நூற்றாண்டுகளாய் நீடிக்கும்
துயரம் செதுக்கிற தழும்புகள்
கண்ணீரின் பாதை.

இப்போதைய வேண்டுகோள்:
மழை மட்டும் ஓயாதோ?

4.

நீ இல்லாத போது
என் குரலையும் மழை அழித்துச் செல்கிறது
உனக்கு உ லர்ந்த நெஞ்சு
எனக்கு ஈரக் கண்கள்

5.

கண்கள் மூடாமலே கனவுகள்
என்னுடைய கனவுகளில்
எனக்கென்று ஒரு சிறு வீடு இருந்தது
நான்கு காலங்களும்
நான்கு சுவர்கள்
ஆகாய வாயில்
ஒரு புறம் வயல்வெளி
ஆவரசு கோடியிலே மஞ்சள்;
பூவரசும் வேலியிலே மஞ்சள்;
முன்புறம்,
குருதிச் சிவப்பில் கோடி மலர்கள்
காடு, கடல், மலை, வயல்கள் எனத்
திணைகள் மாறி மாறி வருமாம்
அழகு ஊறி ஊறி எழுமாம்.

6.

எழுகிற போதே எரியும் காற்றில்
இடிகிறது வீடு.
யார் எறிந்தார் என்னுடைய
இனிய கனவைக் குலைக்க
ஒரு கொலைக் கருவி?

7.

ஆ!
காட்டுவெளியிலே யுத்தம்
தென்னை மரங்கள் தீப்பட்டெரிந்தன
நிலவு கருகிக் குப்புற வீழ்ந்தது
மின்னல் கொடியென வீச மறுத்து
உப்புக் கடல் நீர் ஏரியுள் ஒளிந்தது

காட்டு வெளியிலே யுத்தம்:
யுத்தம்
காற்று வெளியெங்கும் ரத்தம்!

கோவில் மணிகள் அறுந்து வீழ்ந்தன
அணியணியாக மரங்களும் வீழ்ந்தன
வீழ்ந்த மரங்கள் வெடித்துப் பிளக்க
நூறு நூறாயிரம் பாடைகள் எழுந்தன

மனித உடல்கள் மோதிச் சிதறின;
மனித உடல்கள் மோதிச் சிதற
இரும்பும் உருக்கும் நொருங்கித் தகர்ந்தன

புகையில் கசங்கிய இலைகள் பறந்தன
குருவிச் சிறகுகள் அவற்றுடன் அலைந்தன
சாம்பல் பரந்த சமவெளி எங்கும்
மழையும் குருதியும் கலந்து பொழிந்தன

காட்டு வெளியிலே யுத்தம்:
யுத்தம்
காற்று வெளியெங்கும் ரத்தம்!

8.

கண்ணீரின் மறுபக்கம் குருதி

அச்சமும் பயங்கரமும் எழுதியிருக்கும்
இந்த நாட்களில்
எல்லோருக்கும் ஆழமற்ற தூக்கம்
இடையறாத மழையையும்
பாம்புகளையும் பற்றிய கனவுகள்
எப்போதும் போலத்
தன்னுடைய விசித்திரங்களுடன் நகர்கிறது
வாழ்க்கை
மரணத்திற்கு வெகு அருகில்

9.

கடல் பெருகி அலைந்த வழியில்
எங்களுடைய எந்தத் தடமும் எஞ்சவில்லை
வேரற உதிர்ந்த ஆயிரம்
தென்னை மரங்கள் மீது
தூவிக் கிடக்கிறது மணல்
கூந்தலிலிருந்து பிரிந்த
நீண்ட மயிரொன்று
அதனருகே
காயம் பட்டு உதிர்ந்த பூ இதழ்
எல்லாவற்றின் மீதும்
ஒரு குருதித் துளி



10.

நகர்கிறது காலம்
இந்தப் பாடலைப் போலவே
முடிவற்று.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலேசான கிறுகிறுப்பு. பார்வை வேறு இருட்டிக் கொண்டு வந்தது. சத்தம் கூட தெளிவாக கேட்பதாக இல்லை. சாக்கடையைச் சுற்றிப் பறக்கின்ற ஈக்கள் உண்டாக்குகின்ற சத்தத்தை போன்று ஒரே இரைச்சல்.

தொடர்ந்தும் நின்றால் குப்புறப்புரட்டப்படுவோம் என்கின்ற ஐயம் தங்கராசா ஹாஜியாருக்கு தோன்றிற்று.

சில்லரை வியாபாரிகள் கூவிக்கூவி விற்கின்றார்கள். தங்கராஜா ஹாஜியார் கடைக்குத்தான் யாரும் வரவில்லை. ஐந்து மணித்தியாலமாக நிற்கின்றார். மூன்று நான்கு பேர்களுடன் முற்றுப் பெறுகின்ற மொத்த வியாபாரம் அவருடையது! பன்னிரெண்டு மணியாயிற்று. அம்பாறையில் இருந்து வெங்காயம் வாங்க வருகின்ற வியாபாரிகள் யாரும் வரவில்லை.

சுவரை வலக்கையால் முட்டுக்கொடுத்துக் கொண்டு வெங்காய மூடையில் குந்திக்கொண்டார்.

முப்பது அந்தர் வெங்காயமும் வியாபாரம் ஆகாமல் ஒரு நாள் முடங்குமானால் ஈரம் வற்றி ஒரு அந்தர் எடை குறையும். நாள் ஒன்றுக்கு ஐந்நூறு ரூபாய் கையைக் கடிக்கும்.

வெற்று வயிறு கறுபுறுவென சத்தம் உண்டாக்கிற்று.


செத்தல் மிளகாயானால் தண்ணீரைத் தெளித்துத் தெளித்து எடை குறையாமல் பண்ணலாம். நேற்று பிடுங்கிய வெங்காயத்தை எதுவுமே செய்ய முடியாது. மூட்டையாகக்கூட வைக்கமுடியாது. பச்சை வெங்காயம் மூடையுடன் இருக்குமானால் சூடு பிடித்து ஒரே இரவுக்குள் அழுகி நாற்றமடிக்கும்.

இப்படியான நேரங்களில் சில்லரை வியாபாரம் தேவலாம் என்று தோன்றும். ஐந்தோ பத்தோ வருமானம் குறைவாக வந்தாலும் கையைக் கடிக்காது. கண்ணை மூக்கைப் பார்த்து எடை பிடிக்கலாம். பத்து கிலோவுக்கு ஒரு கிலோ நிகர லாபம் சும்மா கிடைக்கும். தங்கராசா ஹாஜியார் ஒன்றும் அப்படிப்பட்டவர் இல்லை என்பது களுதாவளை,தேத்தாத்தீவுக்குக்கூடத் தெரியும்.

மக்காவுக்குப் போவதற்கு முன்பு அப்படி இப்படியென்று சின்ன சின்ன சில்லறைத் தனங்கள் செய்ததுண்டுதான். தராசின் தட்டின் கீழ் பழப்புளி. காந்தம் ஒட்டுவது. தராசின் முள் அடியில் விரலைவிடுவது என்று சில வியாபாரத்தனங்களைச் செய்தவர்தான். ஆனால் இப்போதெல்லாம் அப்படியெதுவும் கிடையாது.

"ஒழைக்கிறதுதாண்டா ஓபபாய் ஒடம்புல ஒட்டும்"

வார்த்தைக்கு வார்த்தை யாரிடமாவது சொல்லிக் கொள்வார். பத்து வருடமாயிற்று மக்கா




# என்ட அல்லாஹ்...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வுக்குப் போய் வந்து. போன வருடம் கூட மக்காவுக்குப் போகப் புறப்பட்டு முடியாமல் போய்விடடது.

"என்னடாவாப்பா அத்துல்லா! என்னட்ட செல்லிரிக்கலா மெலுவா நீ. கேட்டா இல்லெண்டா செல்லப்போறன். மயண்டைக்க ஊட்டுப்பக்கம் வாகண்டையோ, இருவது இரிக்கி. தாறன். மறுகணித்தா!"

சந்தையில் மூட்டை தூக்கும் அப்துல்லாவின் சொந்தக்காரப் பெண் ஒருத்திக்கு கலியாணம் செய்வதில் சிரமம் இருப்பது தெரிந்தது- மக்கா பயணத்திற்காக வைத்திருந்த பணத்தைத் தூக்கி அப்துல்லாவிடம் கொடுத்துவிட்டார்.

மக்கா பயணத்திற்கு செலவாகும் பணத்தை ஏழைப் பெண்ணின் கல்யாணத்திற்கு பயன்படுத்துவது புண்ணியமாம்.

"என்ன காசியாரு . ஒரு சாங்கமாய் குந்தித்து இரிக்காய்? சொகம்கெகம் இல்லையா?"

இரையலாய் எதிர்க்க சத்தம் கேட்டது. உற்றுப்பார்த்தார். சந்தைத் தூண்கள் சுற்றிற்று.

"ஆரடாப்பா. சரிவா? தல சுத்துதுடாப்பா! மார்கெட்டு நேச்சர் சரியான சவுப்பா இரிக்கி. ஒரு ஹாராம் குட்டியையும் காணல்ல ... இந்த சிங்கள வள்ளா ஒருவனாவது நேத்தே செல்லித்து போயிரிக்கலாம் எலுவா. சும்மா தட்டிய தொறந்து வெச்சித்து இரிக்கன்." "என்ன காசியாரு நீ. ஒரு மயிரும் தெரியாத ஆளாய் இரிக்காய். விடியம் மல்வத்தையில வைச்சி முப்பது பேர ஜீப்ப போட கௌப்பித்தானுகள் எலுவா. அந்த உம்மாட மக்கள் காரதீவுக்குள்ள அறியானம் செய்யிறானுகளாம். வசாருக்குள்ள எல்லாக் கடையையும் மூடிப்போட்டானுகள். வசார்ல ஒரு குருவி இல்ல. கடய மூடித்து கெதிய்யா ஊட்டபோய் சேருபாப்பம்."

தங்கராசா ஹாஜியாருக்கு கிறுகிறுப்பு சட்டென்று நின்றது. எல்லா பொருளும், விரையும் மனிதர்களும் - மூடப்படும் கடைகளும் துலக்கமாய்த் தெரிந்தது.

கொல்லும் தூரத்தில் ரவைகள் சடுதியாய் தீர்க்கப்பட்டு அடங்கும் ஓசை கேட்டு அடங்கிற்று.

சந்தை சலனமற்று சிலகணம் ஸ்தம்பித்தது. மறுகணம் உசாரயிற்று. நால்திசையும் வாசலாக சனம் சிதறிற்று. காய்கறியும் சிதறிற்று. ஒரேயொரு நிமிடத்தில் சந்தை வெற்றிடமாயிற்று.

இரண்டு மாடுகள் வேகமாய் சந்தையுள் நுழைந்தன. பரம சந்தோஷம் அவைகளுக்கு. தேவையான அளவு தின்று, தின்பன மீது மூத்திரமும் பெய்து சாணமும் போடலாம். இன்று விரட்டுவார் யாரும் இல்லை. வேகமாய் நுழையும் அதன் தோரணையில் சுதந்திரம், வெறி, ஆசை அத்தனையும் இருந்தது.

தங்கராசா ஹாஜியார் எததனை நிமிடத்தில் தட்டிகளை மாட்டிவிட்டு வீதிக்கு வந்தார் என்று அவரால் நினைத்துப் பார்க்கும் அளவுக்கு மூளை செயற்படுவதாக இல்லை.

தப்பித்தல். உயிர் காத்தல் எப்படி என்பதை மாத்திரமே மூளை யோசித்தது. அவசரமாய் விரையும் வாகனங்கள் எதுவும் அவரை ஏற்றிக் கொள்கிற சில விநாடிகளையும் விரயம் செய்ய முடியாதிருந்தது.

அவரவர் உயிர் அவரவர்க்கு முக்கியம்!

உடலின் சகல பாகங்களும் உதறிற்று. இதயம் எகிறிக் குதித்தது.

மறுபடி மிக நெருக்கத்தில் - மிக நீளமாய் வேட்டுகள் செலவாகும் சத்தம் இழுபட்டது.

எதிர்க்கக் கிளை விரிந்து உயரமாய் நின்றிருந்த அரசமரத்தின் பின்பக்கம் பதுங்கச் சொல்லி மூளை கட்டளை போட, பதுங்கிக் கொண்டார்.

பதுங்கிக் கொண்ட அதே கணத்தில் அரசமரத்தின் கிளையில் இருந்து திடீர் திடீரென இரண்டு தடவை எதுவோ விழுந்தது. ஒரு கணம் அதிர்ந்து போனார். சுதாரித்துக்கொண்டு உற்றுப் பார்க்க, தெரிந்தது உயிரற்று இரத்தமாய் கிடக்கும் காகமும் சிதைந்த மீன் தலையும்.

இரை உண்ணும்போதில் கொலை என்பது கொடுமை!

"அல்லாவே . . .!" மனசுக்குள் உரக்கக்கூவி அண்ணாந்து பார்க்க - சிதைந்த அரசம் இலைகள் தன்னிச்சையாய் பூமி நோக்கி வந்து கொண்டு இருந்தது.

வாகனம் எதுவோ இரையும் சத்தம் கேட்டது. தலையை மெல்ல வெளியே நீட்டி அதே வேகத்துடன் அமுக்கிக்கொண்டார். ஊத்தைப் பச்சை வாகனம்!

"ஹறாம் குட்டிகள் களுவாஞ்சிக்குடியில் இருந்து வாறானுகள் போல . . .!"

ஒவ்வொன்றாய் குறைந்த வேகத்துடன் மெதுமெதுவாய் மரத்தைத் தாண்டிக் கொண்டிருந்தது.

ஒவ்வொரு வாகனமும் உறுமி உறுமி நகர இதயம் மேலும் மேலும் வேகம் எடுத்து இயங்கியது. கடைசியாய் ஒரு கவச வாகனமும் கடந்தது. வியர்வை முதுகுப் பக்கத்தை முழுதாய் நனைத்திருந்தது.

ஹாஜியார் கணக்குப் பண்ணிக்கொண்டார், மொத்தம் பதின்மூன்று வாகனம்!

"வம்புல பொறந்த உம்மாட மக்கள் ஒருவனும் ஏத்தமாட்டான் எண்டுதானுகளே . . ."

தான் கைகாட்டியும் நிறுத்தாமல்போன வாகனக்காரர்களுக்கு வாய்விட்டே தன்பாட்டுக் குத் திட்டிக்கொண்டு அரசமரத்தின் முன்பக்கம் வந்து வீதியில் நின்றுகொண்டு இரு திசையையும் பார்த்தார். நடமாட்டம் எதுவுமில்லை. மறுபடி அரசமரத்தைப் பார்த்தார்.

எங்கோ வெறித்த பார்வையுடன் பிள்ளையார் கல்.

ஹாஜியாருக்கு பிள்ளையாரைப் பார்த்து மண்டையில் குட்டவேண்டும் போல் இருந்தது. "டங்கு டங்கு . . ." என்று ஐந்து தடவை இரண்டு கைகளாலும் இரண்டு பக்க மண்டையிலும் குட்டிக் கொண்டார்.

களுதாவளைக்கு வெங்காயம் வாங்கப் போகின்ற பொழுதுகளில் 'களுதாவளைப் பிள்ளையார்' கோவிலில் குட்டிக் கொள்ளும் ஆட்களைப் பார்ப்பதுண்டு. பிள்ளையாரை வணங



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கும் முறை இதுதான் என்பதில் அவருக்கு ஐயம் இல்லை.

"தார் றோட்டால போறத உட கெறவல் றோட்டால போறது தான் உத்தமம். நாசமறுவானுகள் திரும்பி கிரிம்பி வருவானுகள்." மனசு சொல்லி அவர் முடிவெடுக்கும் முன்பே பெருத்த அதிர்வுடன் எதுவோ வெடித்து சத்தம் உண்டாக்கிற்று. பின்னணியில் தொடர்ச்சியாய் வேட்டு.

தார் வீதியைவிட்டு கிழக்கு பக்கமாய் ஓட முள்கம்பி வேலி சாறனுடன் சேர்த்து தசையை பிய்த்து இழுத்தது. நிதானந் தவறி குப்புற விழ வாய்நிறைய புழுதி மணல் நிறைந்து கொண்டது. எழுந்து மறுபடி ஓட எத்தனித்தபோதே கால் இடறி குப்புற புரட்டிற்று. எழுந்து திரும்பி பார்க்க மிகப்பெரிய காளான் வடிவத்தில் வானத்தில் புகை எழுந்தது.

'ஓடு ஓடு' என்று மூளை விரட்டிற்று. யாரோ வீட்டில் இருந்து நாயொன்று உறுமிற்று. எழுந்து ஓட செருப்பு அறுந்து இழுபட்டது. செருப்பை உதறிவிட்டு ஓட நாய் விரட்டிற்று.

OOOO

அங்க பதுங்கி இங்க பதுங்கி ஓடியும் ஒளிந்தும் கல்முனையில் இருந்து மருதமுனைக்கு வர மூன்று மணித்தியாலம் எடுத்தது தங்கராசா ஹாஜியாருக்கு.

"கடக்கர பள்ளிக்கு நேத்திக்கடன் வச்சநான். எண்ட அல்லா கொண்டத்து உட்டுத் தாரு . . ."

"என்னது ஒங்கட கால்ல இருந்து எரத்தம் வழியிது ... எண்ட அல்லோவ் . . ."

தங்கராசா ஹாஜியாரின் மனைவி நஸீமா பதறினாள்.

"இரியிங்க... இரியிங்க... ஹறா முல பொறந்ததுகள் என்னவோ செஞ்சி போயித்தானுகள்... எண் டப்பே எனக்கி பயமா இரிக்கி வாப்பா..."

"ஆ . . . ச்சி. சும்மா என்னத்துக்கு கொழர்றா? வாய பொத்திச்சு கெட. ஓடியரக்குள்ள உழுந்துத்தன். லாம்பெண்ணை ஒள்ளம் எடுத்துக்கு வா! லாம் பெண்ணய தேச்சா அசடு புடிச்சிரும். மரமஞ்சள் இருந்தா ஒள்ளம் ஊறவை. கம்பியும் கிழிச்சித்து. இவன் முசுதப்பா எங்க?"

"திண்றான். காயத்த கட்டுங்க . . ." நஸீமாவின் அழுகை அடங்கிற்று.

"தின்றானா? இந்த ஊத்தி லையா?"

காயத்தைக் காட்டினார். ஆழமான கிழியல்தான்.

"முசுதப்பா . . ."

". . ."

"முசுதப்பா . . ."

"ஓவ் . . ."

"எங்க இரிக்காய்?"

"இஞ்ச . . . சோறு தின்றன்"

"சோறு தின்றயா? என்னடா ஒப்பாய் இது ஊத்துக் கெட்ட நேரத்தில . . . ஒழைக்கிற நேரத்தில ஒழைக்க ஒணும் தின்ற நேரத்தில தின்னோணும் எண்டு அல்லா செல்லியிருக்கார்ரா வாப்பா . . . நீ ஊத்துக்கெட்ட நேரத்திலையெல்லாம் திண்டா மார்க்கத்துக்கு அடுக்குமா? வயது வந்த புள்ளக்கி ஒள்ளமெண்டாலும் லோசின இருக்கிறல்லையா? மார்க்கெற்றுக்கு வராம எங்க போன நீ?"

"உம்மோவ் . . . வெறும் சோத்த திண்றங்கா. ஒள்ளம் வந்து ஆணம் ஊத்தன் . . ."

அடுக்களையில் இருந்து சத்தம் பலமாய் வந்தது.

"ஊத்தி தின்றுமேனேய். வாப்பாக்கு கால்ல காயம். லாம் பெண்ண போட்டு தேய்க்கிறன். தொட்டா கறியில நாறும். . ."

வீதியில் வாகனங்கள் இரையத் தொடங்கிற்று. சனம் கூட நடமாடத் தொடங்கிவிட்டது போலும். சலசலப்பு கேட்டது. விசாரிப்புகள். எண்ணிக்கைகள். சேதக் கணக்கெடுப்புகள் எல்லாம் களைகட்டத் தொடங்கிற்று. வீட்டுக்குள் இருந்து கொண்டே வீதியில் இன்னது தான் நடக்கும் என்று ஊகிக்க முடியும். தங்கராசாக் ஹாஜியார் ஊகித்துக் கொண்டார்.

"என்ன வாப்பா கால்ல காயம்? உழுந்தித்தியா?" முஸ்த்தபா ஈரவாயை சாறனால் துடைத்துக்கொண்டு கேட்டான்.

"அதொண்டும் இல்ல. எங்க போனநீ மாறக்கட்டுக்கு வராம?"

"பந்தடிக்க!"

"என்னடா வாப்பா இது. பதினேழு வயது புள்ள விசினச பாக்காம ஹறாம திரிஞ்சா மார்க்கத்துக்கு அடுக்குமா?"

முஸ்தபா சாரனை உதறி உடுத்திக்கொண்டான்.

"களுதாவளைக்கு பொயித்து வாறியா?"

ஹாஜியார் கேட்க - முஸ்தபா வெருண்டு அவரை நோக்கினான்.

"எனகொண்ணா!" மொட்டையாய் மறுத்தான். ஒரு வகை பீதி படீரென அவன் முகத்தில் பரவிக்கொண்டது.

"புள்ளய ஏன் அங்க போகச் செல்றயள். எசக்ககாறனுகள் களுதாவளையில குமிஞ்சிபோய் கெடக்கானுகள். நேத்தும் ஆமிக்காறனுகள் றவுண்டப்பு செஞ்சி ஆக்கள புடிச்சிப் போன எண்டு நீங்கலுவோ சென்ன."

"வெங்காயம் மூட்டையா கெடக்கு. மயண்டக்க மாக்கெற்றுக்குப் போய் சொரியப் போட வேணும். அப்புடியே உட்டா நாளைக்கு சூடு புடிச்சி அழுகிப்போயிரும். களுதாவளைக்கு நான் இப்ப போனா ஆரு சொரியப் போடுறது . . .?"

"நாளைக்கு நீங்களே போனா என்ன . . .?"

"என்ன நம்பி வெங்காயத்த தந்தவனுகள் எலுவா? நாம காசக் குடுத்தாலுவா அவனுகளும் சோத்த கீத்த ஆக்கி தின்ன ஏலும். எனக்கு நெஞ்சிக்குள்ளையும் ஒரு சாங்கமா இரிக்கி. ஒரு வெங்காயம் கூட இண்டைக்கு யாவரம் நடக்கல்ல. மார்க்கற்ட்டு நேச்சர் சரியான சவுப்பு. அம்பது அந்தரும் நாளைக்கு ஒரு அந்தர் தண்ணி வற்றும். ஒரு நாளைக்கு நானூத்தம்பது ரூபா நமக்கு தான் நட்டம். நம்மட நட்டம் நம்மளோட. அவனுகளுக்கு காசைக் குடுக்கத்தானே வேணும் பாவம். ஒள்ளம் தண்ணி எடுத்துவா நெஞ்சுக்குள்ள அடைக்கிது . . ."

நஸீமா தண்ணீர் எடுக்க உள்ளே போக - முஸ்த்தபா அப்படியே நின்று கொண்டிரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ந்தான்.

"வஸி ஓடுல்ல வாப்பா. நான் எப்படி போறது?"

"நீலாவணையில இருந்து வஸி ஓடும். சக்கில்ல நீலாவணைக்கு போய் அங்க இருந்து வஸிலை போ! அலுமாரி றாக்கயில ஆயிரத்தி ஐநூறு இரிக்கி. எடு! நாளக்கி வாறணம் எண்டு கணவதித்த செல்லு. மாக்கட்டு சரியான சவுப்பு. இண்டைக்கு இவ்வளவையும் வெச்சிக்க செல்லு. சொச்சத்த மறுகா நான் கொண்டு வாறனாம் எண்டு செல்லன் என்ன. ஒண்ட அடையாள காட்ட மறக்காம எடுத்துப் போடா ஒப்பாய். மறுகணி அது பெரிய ஓசரியா போயிரும்."

முஸ்த்தபா பணத்தை எடுத்துக்கொண்டு சைக்கிளை உருட்டியபடி அரைமனதுடன் வீதிக்கு வந்தான்.

ஆட்கள் நடமாடினார்கள். ஒன்றிரண்டு கடைகள் திறந்திருந்தது. சிலகடைகள் ஒற்றைப் பலகையுடன் வியாபாரத்தைக் கவனித்துக் கொண்டிருந்தன.

சைக்கிள்கள் மாத்திரம்தான் அங்கொன்றும் இங்கொன்றுமாய் நகர்ந்து கொண்டிருந்தன. வாகனங்களின் இரையல் சத்தம் மாத்திரம் கேட்டது. வாகனங்களைக் காணவில்லை.

சைக்கிளை மிதித்தான் முஸ்த்தபா.

அண்டங்காக்கை ஒன்று பள்ளிவாசல் ஸ்பீக்கரில் அமர்ந்து கொண்டு வீதியை பிராக்குப் பார்த்தது. காற்று பலமாய் வீச அரிசி ஆலையில இருந்து உமி பறந்து வீதிக்கு வந்தது. அண்டங்காக்கை இறகை விரித்து காற்றில் சாய்ந்து விடாதபடி சமநிலை பண்ணிக்கொண்டு அப்படியே நின்றது.

OOOO

"ஒங்கட வாப்பா எங்க?"

கணபதியின் வீட்டில் அவன் பத்து வயது மகன் மாத்திரமே நின்றான்.

"ஆரு?"

பையன் விழித்தான்.

"வாப்பா?"

"ஆரு?"

"உங்கட அப்பா!"

பையன் புன்னகைத்தான்.

"அவரு வெங்காயக் காலைக்குள்ள பொயித்தாரு."

"அம்மா?"

"அவவு நெல்லுக்குத்த பொயித்தாவு!"

"வெங்காயக்கால எங்க இரிக்கி?"

எப்போதோ வாப்பாவுடன் வந்தது. இப்போது மறந்து போயிருந்தது முஸ்த்தபாவுக்கு.

"சவக்காலக்கி கிட்ட!"

"சவக்கால எங்க இரிக்கி?"

"எங்கட காலைக்கி கிட்டத் தான்!"

"வாவன் போவம். காசி குடுக்கவேணும்."

"எனகொண்ணாப்பா அங்க பேய் இரிக்கி. அம்மா வந்தா ஏசி வாவு."

பையன் அசையமாட்டான் என்பது முஸ்த்தபாவுக்கு புரிந்து போனது. வேறு யாரிடமாவது வழி கேட்டுப் போவது புத்தி என்றே தோன்றிற்று.

எதிர்க்க ஒருவர் வர வழி விசாரித்தான். வந்தவர் சொன்னார். அவர் சொன்ன வழி முழுவதும் மணலாக இருந்தது. இந்த சொரி மணலில் எப்படித்தான் வெங்காயம் விளைவிக்கின்றார்களோ? முஸ்த்தபா அதிசயித்துக்கொண்டே புதைந்து புதைந்து நடந்தான். வழியில் தென்பட்டவர்களிடமும் சரியான வழிதானா என்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டு நடந்தான்.

கடல் அலையின் ஓசை கிட்டத்தில் கேட்டது. சவக்காலை கூடத் தெரிந்தது. புதிதாக கிட்டத்தில் யாரோ செத்திருக்கின்றார்கள். வாடாத சவக்கட்டில் ஒன்று கவுண்டு போய்க்கிடந்தது. வெட்டிய இளநீர் கோம்பைகள். மண்குடங்கள் கூடக் கிடந்தது.

பார்வையை சுற்றிச் சுழலவிட கணபதி தென்பட்டான். ஒன்றிரண்டு தடவை சந்தையில் பார்த்ததுண்டு.

"அண்ணாச்சி!" முஸ்த்தபா கூவினான்.

மண்வெட்டியை வைத்துவிட்டு கணபதி சுற்றும் முற்றும் பார்த்தான். முஸ்த்தபாவை கணபதி காணவில்லை. கச்சையை இறுக்கி பின்பக்கமாய் தொங்கியதை இழுத்து அரைஞாண் கயிறுடன் இணைத்துவிட்டு மறுபடி நிலத்தைக் கொத்தினான்.

"அண்ணாச்சி . . . !"

மறுபடி கூவினான்.

கணபதிக்கு அசூசையாக இருந்தது. மண்வெட்டியை ஓரமாய் வைத்துவிட்டு சாறனை உடுத்திக்கொண்டான். கொத்துவேலிவரை வந்து எட்டிப்பார்க்க முஸ்த்தபா புன்னகைத்தான்.

"என்னம்பி நீ வந்திருக்காய் காக்கா வரல்லயா?"

"வாப்பாவுக்கு ஒள்ளம் சொகம் இல்ல. வெங்காயமும் சொரியப் போடவேணுமாம். அது தான் காசி கொண்டு நான் வந்தது."

முஸ்தபா காசை நீட்டினான். கணபதியின் முகம் புன்னகையாயிற்று. வாங்கிய பணத்தை எண்ணிக்கொண்டு போகும்போதே கணபதியின் புன்னகை மெதுமெதுவாய் அடங்கி எண்ணி முடிய முகம் சுருங்கிற்று.

"என்ன ஆயிரத்தி ஐநூறு தான் இரிக்கி?"

"வசாரில என்னவோ பிரச்சன எண்டு யாவாரிமாரு வரல்லையாம்."

"அதுக்கு?"

கணபதியின் குரல் இறுகிற்று.

"மறுகணி சொச்சத்த கொண்டு தாறாராம்."

"என்ன புழுத்தின வேல இது. நாங்க வெங்காயத்தை புடுங்கி கட்டிக்குடுத்தா பூழலியாரு அவற்ர வேலய பாத்துத்து திரியிறாரா?" அவசியமா இந்த கோபத் தழும்பல் என்று கணபதிக்கு புரியாமல் இருந்தது.

"ஏன் அண்ணாச்சி இப்படிக் கதைக்கிறாய்?" முஸ்தபா கவலைப் பட்டுக் கொண்டான்.

"கதைக்காம . . ." பேச்சை முறித்தான். தண்ணீர் இறைக்கும் இயந்திரம் எங்கோ குடுகுடுத்தது. குடுகுடுத்த திசையை கணபதி பார்த்தான். மண்ணெண்ணெய் புகை காற்றில் கலந்தது.

"பசள தந்தவன் வெத வெங்காயம் தந்தவனுக்கெல்லாம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்ன பணியாரத்த குடுக்கிறது. . ."

"ஒங்களுக்கென்ன நீங்க தொப்பிய பெரட்டிப் போட்டு போயிருவியள். . ."

"எங்க தொப்பி பெரட்டுன நாங்க?"

முஸ்த்தபா வார்த்தை கூட மென்மை இழந்தது.

"என்ன கணவதி?

அடுத்த வெங்காயத் தோட்டத்திலிருந்து சிவலிங்கம் எட்டிப் பார்த்தான்.

"இந்த தங்கராசா காக்கா வெங்காயம் வாங்கி பொயித்து வெறும் ஆயிரத்து ஐநூறு அனுபயிரிக்காண்டாப்பா.

"ஆங் . . . நான் என்னவோ எண்டு நெனச்சன். கொத்துவேலிக்குள் சிவலிங்கத்தின் தலை சுவாரஸ்யம் இல்லாமல் முடங்கிக் கொண்டது.

"சும்மாதேவல்லாத கத கதக்க வேணாம். நான் வாப்பாட்ட செல்றன். அவரோட கத . . .

முஸ்த்தபா போய்க் கொண்டே இரைந்தான்.

OOOO

ஊர் முழுதாய் இருட்டி விட்டது. வீதியில் நிசப்தம். ஆழ்ந்த நித்திரை போன்ற உறக்கம். வாகனம் எதுவும் வருவதாய் இல்லை. தூரத்தில்கூட வாகனம் இரையும் சத்தம்கூட கேட்கவில்லை. ஊருக்குள் மாத்திரம் ஏதேதோ சத்தம் கேட்டது.

"புள்ள குட்டிய பட்டினி போட்டுத்து குடிச்சித் திரியிறேடா பாதகா . . ."

பெண் ஒருத்தி புலம்பும் சத்தம் மெலிதாய் கேட்டது ..."

"எண்டம்மோவ் . . . எண்டம்மோவ் . . . பாதகன் கொல்றானே . . ."

இடைவெளிவிட்டு அதே பெண்ணின் குரல் பலமாய்க் கேட்டது. பின்னணியில் பிள்ளைகள் விசும்பும் சத்தம் . . .

முஸ்த்தபாவுக்கு லேசாய் பயம் வந்தது. பஸ் கிடைக்காது போனால் என்ன செய்வது? எதிர்க்க இருந்த வாசிகசாலைக்குள் சரசரப்பு கேட்டது. அது இருட்டிக் கிடந்தது.

வாசிகசாலைதான் அது என்பது தோற்றத்தில்தான் அறிய முடிகிறது. கட்டாக்காலி மாடுகள் இரண்டு வாசிக சாலைக்குள் இருந்து வெளி வந்தது.

"சே . . . சைக்கிலிலையே வந்திருக்கலாம்." சலித்துக் கொண்டு சரிந்துகிடந்த தொலைபேசிக்கம்பம் ஒன்றில் குந்திக்கொண்டான்.

தூரத்தில் குளத்து வெளியால் பிள்ளையார்கோவில் மெர்குரி வெளிச்சம் தெரிந்தது. தெருவோரமாய் ஒரு நாய் வேதனையால் முனங்கிக்கொண்டு - வாலை மடக்கி பின்னங்கால்களுக்குள் செருகிக்கொண்டு அவனைக் கடந்து ஓடிற்று...

மூன்று நான்கு அடிகள் இடைவெளிவிட்டு இன்னும் இரண்டு நாய்கள் முன்னைய நாயை விரட்டிப் போயின. . . ஓடுகின்ற நாயைவிட விரட்டுகின்ற நாய்கள் உருவத்தில் பெரிதாய் இருந்தன. வேகமாயும் ஓடின. . . கொஞ்சம் இடைவெளிவிட்டு இன்னோர் நாய் சுவாரஸ்யம் இல்லாமல் ஓடி அவனைக் கடந்தது . . . சில அடிகள் தாண்டி ஓட்டத்தை நிறுத்தி சடுதியாய் நின்றது. சிலகணம் அப்படி நின்று வந்த பாதையைத் திரும்பிப் பார்த்தது. மெதுவான வேகத்தில் திரும்ப ஓடி வந்து முஸ்தபா முன் வந்தது. எதிர்க்க இருந்த விளக்கு இல்லாத விளக்குக் கம்பத்தில் பின்னங்காலைத் தூக்கி முட்டுக்கொடுத்துக் கொண்டு சிறுநீர் கழித்தது. கழித்து முடிந்ததும் முஸ்த்தபாவை உற்றுப் பார்த்தது... பார்த்துக்கொண்டே உறுமியது.

"உஞ்சு . . . ஞ்சு . . .ஞ்சு . . .ஞ்சு . . ." அதற்கு புரியும் பாசையில் முஸ்த்தபா அழைக்க வாலை ஆட்டிக்கொண்டு அவனை நெருங்கி வந்தது. முஸ்தபா பயந்தான்! நாய் அவனை முகர்ந்து பார்த்தது.

"ஆர்ராது நடு ஊத்தில . . ."

யாரோ ஒரு குடிகாரர் உளறிக்கொண்டே அவனைத் தாண்டி இடறிப்போனார். . . நாய் அவர் பின்னே ஓடிற்று. . .

"ச் தூ . . . போ . . .!"

அந்தக் குடிகாரர் நாயைப் பார்த்து துப்பினார். அது நாயின் வாயைக் கட்டும்மந்திரம் போலும். நாய் அவருக்குக் குரைத்தது. . .

குரைத்த நாய்க்கு காலை ஓங்க - ஓங்கியகாலை நாய் கவ்விப் பிடித்து இழுத்தது.

"எண்ட அம்மோவ் . . .!" கூவிக்கொண்டே அவர் ஓடினார். நாய் விரட்டிற்று. அப்புறம் தூரத்தில் ஆள் விழுகின்ற சத்தம் கேட்டது. லேசாக புன்னகைத்துக் கொண்டான் முஸ்தபா.

இருட்டின் தொலைவில் மேற்குப் பக்கமாய் ஆற்றுக்கு அப்பால் சிறு சிறு வெளிச்சங்கள் தெரிந்தது. அது பழுகாமத்தில் ஏதாவது கோவிலாக இருக்கலாம்.

"டேய் ஆர்ரா நீ?"

இனம் தெரியாத ஒரு குரல், அதுவும் முரட்டுக் குரல். அசரீரி மாதிரிக் கேட்டது.

முஸ்தபா அருண்டு போனான். கல்லைவிட்டு எழுந்து கொண்டான். சுற்றும் முற்றும் பார்த்தான். வாசிகசாலைக்குள் திரும்பவும் சரசரப்புக் கேட்டது.

பின்பக்கவேலிக்குள் இருந்து இரண்டுபேர் வருவது தெரிந்தது. வாசிகசாலைக்குள் இருந்தும் யாரோ வருவதும் தெரிந்தது... முஸ்தபாவுக்கு நிலமை புரிந்துகொள்ள முடிந்தது.

"அது நான் முஸ்தபா ...!" குரல் தட்டுத் தடுமாறிற்று. நாக்கு வரண்டது.

மூன்று பேர் அவனைச் சுற்றி நின்று கொண்டார்கள். அவர்கள் துவக்கு வைத்திருக்கிறார்கள்.

கையைத் தூக்கவைத்து ஆடைகளை அவிழ்த்துப் பார்த்தார்கள்.

"என்ன செய்யிரா இஞ்ச?"

எவன் கேட்டான் என்று தெரியவில்லை.

"வஸிக்கி நிக்கன்"

"எவடம் நீ?"

"மருதமுனை!"

"இஞ்ச ஏன் வந்தநீ?"

"காசி குடுக்க!"

"ஆருக்கு?"

"கணவதிக்கு!"

"எந்தக் கணவதிக்கு?"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேறொரு கரகரத்த முரட்டுக்குரல்...

"எந்த கணபதி?" முஸ்தபா வுக்கு புரியாது வியர்த்தது.

"வெங்காயம் செய்யிற கணவ திக்கு!"

"டேய் நடடா!"

முன்னைய குரல்காரன் உறுமினான்...

"எ...ங்...க?"

முஸ்தபாவின் மண்டைக்குள் விறுவிறுத்தது. என்னவோ விபரீ தம் என்று மூளை புலம்பிற்று.

"ஒன்ன விசாரிக்க வேணும்."

"கணபதி அண்ணனிட்ட கேட்டுப் பாருங்க நான் காசி குடுக்கத்தான் வந்த.

"எந்தக் கணவதிடா ...?"

உறுமலின் வேகம் முஸ்தபா வின் மார்பில் விழுந்த உதையில் தெரிந்தது. முஸ்தபா மல்லாந்து விழுந்தான்.

"எண்ட உம்மோவ் ..."

இந்த ஈனஸ்வர ஓசை பல மாய் எழுந்ததால் சில வீடுகளில் எரிந்து கொண்டிருந்த குப்பி விள க்குகளை உடனடியாய் அணைய வைத்தது...

"எங்களுக்கு தெரியும்டா. வெங்காயம் வாங்கிறம், கத்த ரிக்கா வாங்கிறம் எண்டுபோட்டு ஊருக்குள்ள எங்க எங்க நாங்க இரிக்கம் எண்டு ஆமிக்கி சொல்ற ஆக்கள் ஆரெண்டு எங்களுக்கு தெரியும்டா... ஒழும்புடா ... ஒழும்பு..!"

"நான் அப்படி இல்லை... இண்டைக்கித்தான் மொதலா வந்த... கணவதி அண்ணனிட்ட கேட்டுப் பாருங்க. எங்கட வாப்பா கூட பொடியனுகளுக்கு காசி குடுக்கிற ... வேணும்டா கணவதி அண்ணனிட்ட கேட்டுப்பாருங்க."

"ஒழும்புடா... ஒழும்பி நட... கணவதி ஊட்டக் காட்டு"

முஸ்தபா தட்டுத்தடுமாறி எழுந்து நின்றான்.

எழும்பி நின்றவனின் முதுகில் ஒருவன் ஓடிவந்து உதைத்தான். முஸ்தபா தார்வீதியில் குப்புற விழுந்து தேய்பட்டு சிறுதூரம் இழுபட்டான். முகத்தில் எங்கிரு ந்தோ இரத்தம் கசிந்தது...

அழுதான் ... யாரும் அலட் டிக்கொள்ளவில்லை.

சேர்ட்டை கொத்தாய் பிடி த்து ஒருவன் நிமிர்த்த முஸ்தபா சிரமமாய் எழுந்தான். மறுபடி உதைத்தான் ஒருவன் பின்பக்கமாய். நிலை

தடுமாறி குப்புற விழுகிற போது எதிர்க்க போனவன் மார்பில் உதைக்க முஸ்தபா விழாது இருந்தான். வாய்க்குள் புதுவகை இதுவரை நுகராத வாடையை சுவைக்க முடிந்தது. லேசாய் உப்புக் கரிப்பது மாதிரியும் இருந்தது.

கணபதியின் வீட்டைக் காட்டும்வரை முஸ்தபா நிலத் தில் விழவே இல்லை. அப்புறம் சரிந்து மணலில் முகம் புதைய விழுந்துவிட்டான்.

"கணவதி ... !" சிறு இடை வெளி "கணவதி ... !" பலமாய் ஒருவன் கணவதி வீட்டுவாசலில் நின்று கூவினான்.

கணபதி வீடு மந்தமாய் உற ங்கிக் கிடந்தது.

"கணவதி ... கணவதி ..."

"ஆர்ராது நடு ஊத்தில...?"

கணபதியின் குரல் எரிச்ச லாய் வீட்டின் உள் கேட்டது.

"வெட்டைக்கு வா!"

வாசல்வளை தலையில் இடித் துவிடாதபடி கணபதி குனிந்து வந்தான். குப்பி விளக்கொன் றுடன் அவன் மனைவி நிமிர்ந்தே வந்தாள். அவள் நிறையவே குள்ளமாய் இருந்தாள்.

"ஆரது...?"

"இஞ்ச வா!" ஒழுங்கைக்குள் இருந்து சத்தம் வந்தது.

நெருங்கிப் போய் யார் என் பதை அடையாளம் கண்டு கொண்டு பவ்வியமாய் மார்புக் குக் குறுக்காய் கைகளைக் கட்டிக்கொண்டு "நான் ஆரோ குடிகாறனாக்கும் எண்டு நென ச்சிற்றன். பிழையா நினைக் காதிங்க தம்பி" என்றான் கணபதி.

"ஒனக்கு இவன தெரியுமா?"

குளிர்காற்று ஒழுங்கையால் போனது.

"ஆரு?"

"ஒரு மருதமுனை முக்கால். ஒனக்கு காசி தர வந்தானாம் எண்டு சொல்றான்."

சுருண்டு முனங்கக்கூட முடி யாது ஒழுங்கையில் சுருண்டு கிடக்கும் முஸ்தபாவை அப்போ துதான் கணபதி கண்டுகொண் டான். மௌனமாய் குனிந்து அவனை உற்றுப் பார்த்தான்.

"எண்ட கடவுளே எனக்கு காசி தர ஒருவனும் வரல்லப்பா. இப்பிடித்தான் கனக்க சி.ஐ.டி மாரு ஊருக்குள்ள திரியிறா னுகள். நேத்தோ முந்தா நாளோகூட தேத்தாத்தீவில ரெண்டு சி.ஐ.டி.ய பொடியனுகள் புடிச்சவனுகளாம்.

சொல்லிக்கொண்டே இரண்டு எட்டுப் பின்வைத்தான் கணபதி. அவன் மனைவி எதுவும் புரியாது மௌனமாய்த் திகைத்து நின்றாள்.

கணபதி சொல்வது முஸ்தபாவுக்கு இரையலாய் கேட்டது. ஆயினும் புரிந்தது. முஸ்தபா மறுத்தான். அது அவனுக்கே புரியவில்லை. முனங்கக்கூட முடியாது கிடந்தான்.

முஸ்தபாவை காலைப் பிடித்து இழுத்துக்கொண்டு போனார்கள். பீதி படர்ந்த கணபதியின் மனைவி கணபதியை மந்தமாய்ப் பார்த் தாள். கணபதி புன்னகைத் துக்கொண்டே பாயில் சரிந்தான்.

தூக்கம் வரமறுத்தது. புலன் அலைந்தது. காது கூர்மையாய் எதையோ எதிர்பார்த்தது. நேரம் நீண்டது.

அரைகுறைத் தூக்கம் ... விழிப்பும் தூக்கமும் அற்ற மந்தமான மயக்க நிலை...

தூரத்தில் ஒற்றைவேட்டுச் சத்தம். தீர்ந்து அடங்கிற்று. வளர்ப்பு நாய் ஓடி வந்து தாழ்வாரத்தில் பதுங்கிக் கொள்வதை உணரமுடிந்தது.

"ஆயிரத்தி ஐநூறு ரூபாய் கையோட கம்மாரிசு"

கணபதி மனசுக்குள் பேய் கூவிற்று.


திடுக்கிட்டு அவன் மனைவி கண்விழித்து கணபதியைப் பார்த்தாள்.

தாழ்வாரத்தில் பதுங்கிய வளர்ப்பு நாய் ஏனோ எழுந்து ஓடிற்று... தூரத்தில் எங்கோ நின்று குரைக்கிற சத்தம் கொஞ்சம் இடைவெளி விட்டுக் கேட்டது. ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குறுஞ் சித்திரம்:
த.சௌந்தர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


With Compliments
From

YALINI CENTER
SHALINI RESTAURANT
YALINI COM CENTER

**Yalini center**
2 Rue Perdonnet
75010 Paris
Tel: 01-42 09 45 65
Mo: La Chapelle
ou
Gare du Nord

**Shalini Restaurant**
23 Rue Cail
75010 Paris
Tel: 01-40 34 20 72
Mo: La Chapelle
ou
Gare du Nord

**Yalini com center**
2 Rue Perdonnet
75010 Paris
Tel: 01-42 09 45 65
Mo: La Chapelle
ou
Gare du Nord